விலை : 20.00
பக்கங்கள்:பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-7705)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை (05.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 076

## குறைகேள் அலுவலகத்தை யாழில் திறந்து

# மக்கள் குறையை நேரில் அறியாது நழுவிய ஜனாதிபதி



(யாழ்ப்பாணம்)
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் வேலையற்ற பட்டதாரிகளை சந்திப்பதாக கூறி அழைத்துவிட்டு அவர்களை சந்திக்காமல் ஏமாற்றிவிட்டு யாழிலிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நழுவிச் சென்றுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க...

## குழி தோண்டி சிசு புதைப்பு

(பரந்தன்)
கிளிநொச்சி ஆனைவிழுந்தான பிரதேசத்தில் பிறந்த சிசுவை குழி தோண்டி புதைத்த சம்பவம் பதிவாகியுள்ளது. கடந்த 5 நாட்களிற்கு முன்னர் 22 வயதுடைய யுவதி ஒருவர் வீட்டில் பிரசவித்த குழந்தையை வீட்டின் பின்னால் உள்ள மலசல கூடத்திற்கு அருகில் குழி தோண்டி புதைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்துடன்

15 ஆம் பக்கம் பார்க்க...

## குடும்பஸ்தர் மீது பொலிஸார் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் மீது பொலிஸார் கடுமையாக தாக்குதல் நடத்தியதில் உடல் உபாதைக்குள் உள்ளான குடும்பஸ்தர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

15 ஆம் பக்கம் பார்க்க...

## ஆற்றாது அழுது புரண்ட தாய்மாரை

# 'எருமை மாடுகள்' என திட்டிய பொலிஸார்!



15 ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நாவில் இலங்கைக்கு

# கால அவகாசம் கிடைப்பது உறுதி

## வரவேற்பதாக சுமந்திரன் அறிவிப்பு



(ஜெனிவா)
ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் கிடைப்பது உறுதி என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி சுமந்திரன் கூறினார்.

இலங்கை தொடர்பான ஜெனிவா நிலைமைகள் தொடர்பில் நேற்றைய தினம் ஊடகங்களிடம் கருத்து

15 ஆம் பக்கம் பார்க்க...

## உரிய தீர்வை வழங்கும் வரை விலகிச் செல்லப்போவதில்லை

### விரக்தியுடன் பட்டதாரிகள் போராட முடிவு




15 ஆம் பக்கம் பார்க்க...

# வடக்கு-தெற்கை மோதச் செய்ய பலர் காத்துக் கொண்டிருக்கின்றனர்

## பிரச்சினைகளை நமக்குள்ளேயே பேசித் தீர்ப்போம்
## யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மக்களுக்கு அழைப்பு



(யாழ்ப்பாணம்)
வடக்கையும் தெற்கையும் மோதச் செய்வதற்கு எமது நாட்டுக்குள் மட்டுமல்ல, நாட்டுக்கு வெளியேயும் பலர் காத்துக் கொண்டிருகிறார்கள் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எமக்குள் இருக்கும் பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்துக்கொள்வோம் எனவும் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியிடம் தெரிவிக்க செயற்றிட்ட பிராந்திய அலுவலகம்

04 ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நாவின் அறிக்கையை அமுலாக்கி நம்பிக்கையை உருவாக்குங்கள்

### ஜனாதிபதி முன் மாவை எம்.பி எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)
ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாளரின் அறிக்கையை பூரணமாக நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே தமிழ் மக்களின் ஏமாற்றத்தை போக்கி அதை நம்பிக்கையாக மாற்றி ஐக்கியமான இலங்கையை கட்டியெழுப்ப முடியும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற

15 ஆம் பக்கம் பார்க்க...

## குற்றப்பத்திரிகை கொண்டு வந்து முப்படையை விசாரிக்க நான் தயாராக இல்லை

### யாழ்.படைத் தலைமையகத்தில் ஜனாதிபதி உரை

13 ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நா அறிக்கையில் "மாவீரர் நாள்"

(ஜெனிவா)
ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் மாவீரர் நாள் நினைவு கூரல் தொடர்பாகவும், குறிப்பிட்டுள்ளார். ஐ.நா மனித உரிமை

15 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கண்ணைக்கட்டி கிளிநொச்சியில் போராட்டம்



(பரந்தன்)

கடந்த பெப்ரவரி மாதம் 20-ம் திகதி திங்கள் காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை பதின்மூன்றாவது நாளாகவும் தொடர்ந்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கறுப்பு துணியால கண்ணைக்கட்டியவாறு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

எமது உறவுகளுக்கு இன்னும்பதிலளிக்காது இந்த அரசு பாராமுகமாக இருக்கின்றது என்பதனைக் காட்டுவதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கறுப்பு துணியால் கண்ணைக்கட்டியவாறு போராட்டம முன்னெடுக்கப்படுவதாகவும்,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இனியும் காலம் தாமதிக்க வேண்டாம் எனவும் இலங்கை அரசுக்கு பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா கால அவகாசம் வழங்கக் கூடாது என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது

தங்களுக்கு உறுதியான தீர்வு கிடைக்கும் வரைக்கும் கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப் போவதாகவும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-312)

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 01 . 1922

மறைவு 23 . 02 . 1999

### ஸ்ரீமான் சின்னையா நல்லையா

(6-ம் வட்டாரம், மண்டைதீவு)

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(திதி : மாசிமாதத்து பூர்வபட்ச அட்டமி)

21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.

- குடும்பத்தினர் -

## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி கல்லூரிச் சமூகம்

### கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பான கலந்துரையாடல்

இடம் : பஞ்சலிங்கம் கேட்போர்கூடம், கொக்குவில் இந்துக் கல்லூரி.
காலம் : இன்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- மௌன வணக்கம்
- தலைமையுரை - திரு.அ.பஞ்சலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), தலைவர் பழைய மாணவர் சங்கம்
- விளக்கவுரைகள்
  - திரு.பி.கமலநாதன் (ஓய்வுநிலை அதிபர்)
  - திரு.ஆ.சத்தியமூர்த்தி (பெற்றோர் சார்பாக)
  - திரு.கண்ணதாசன் (செயலாளர் - பாடசாலை அபிவிருத்திக் குழு)
  - திரு.மு.வேலாயுதபிள்ளை (ஓய்வுநிலை பிரதி அதிபர்)
  - திரு.ஆ.ஞானகாந்தன் (ஓய்வுநிலை அதிபர்)
- கருத்துப் பரிமாற்றம்
- நன்றியுரை - திரு.மு.அசோக்குமார் (பழைய மாணவன்)

(C-7733) - கல்லூரிச் சமூகம்

## மரண அறிவித்தல்



### நாகமணி நல்லதம்பி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நாகமணி நல்லதம்பி கடந்த (03.03.2017) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி- சூசானம் தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் கந்தையா, அமரர் சின்னையா, வேலாயுதம், சின்னத்துரை (BOND), நடேசு, நாகம்மா, நாகேஸ்வரி, காந்தி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் கமலம், மகேஸ்வரி, யோகரத்தினம், சின்னம்மா, இராசேந்திரம், கந்தசாமி, நாகேஸ்வரி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், றஜிதா (வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்), தர்சினி (சுவிஸ்), தர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பவனேசன், கிரிஜா ஆகியோரின் பெரியப்பாவும், பிருந்தி, பிரணாப், செபினா, செரோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய்.
தொ.பே : 077 869 7927

(சி-7730) தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி வரப்பிரகாசம் மாசிலாமணி

பருத்தித்துறை 2-ம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி வரப்பிரகாசம் மாசிலாமணி கடந்த (01.03.2017) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வரப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், இராசநாயகம் (கனடா), மேரிவசந்தா, அக்னெஸ்ராணி (பிரான்ஸ்), ஜெபநேசன் (கனடா), றெஜினா (கனடா), டெனிஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானரூபி, அன்னராஜசிங்கம், லேனாட் றொய்ஸ், ஜேம்ஸ் பாலச்சந்திரன், நபுர்தா, ஞானமணி, மேரி இந்திரா, லில்லி மெற்றலின், ஆசிர்வாதம், ஜேசுதாசன், பீற்றர்போல் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.03.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு, கோரியடி றோமன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
2-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
தொ.பே : 077 397 5634, 077 394 9820

(சி-7732)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குற்றவியல் விசாரணைகள் அதிகரிப்பு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குற்றவியல் விசாரணைகள் கடந்த 2015 - 2016 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் 59 சதவீதத்தில் இருந்து 71 சதவீத மாக அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த கருத்து வெளியிட்டார்.

களுத்துறை சிறைச்சாலை கோரிக்கைக்கு அமைய 32 தடவைகள் சந்தேக நபர்க ளுக்கான பாதுகாப்பை பொலி ஸார் வழங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் சட்ட விரோதமான முறையில் ஆயதங்களை வைத்திருப்ப தும், இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களின் செயற் பாடுகள் இதில் கூடுதல் தாக் கம் செலுத்தியிருக்கின்றதாக வும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)

# சிறைக்கைதிகள் மீதான தாக்குதல்கள் இனி இடம்பெறாதிருக்க நடவடிக்கை

## பொலிஸ் அதிகாரிகள் விளக்கம்

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலை யிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்ட சந்தேக நபர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தினால் பாதுகாப்பு சீர்குலைந்திருப்பதாக தெரி வித்திருக்கும் குற்றச்சாட்டை பொலிஸ் அதிகாரிகள் நிரா கரித்துள்ளனர்.

களுத்துறையில் இடம் பெற்ற சிறைச்சாலை வாக னத்தின் மீதான தாக்குதல் சம்பவங்கள் இதற்கு முன்ன ரும் பலமுறை இடம்பெற் றன. சமீபத்திய தாக்குதல் சம்பவத்தின் போது பொலி ஸார் தரப்பில் குறைபாடுகள் இடம்பெற்றிருப்பின் அது தொடர்பில் உரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இனியும் இடம் பெறாது இருப்பதற்கு சட்ட ஒழுங்கு மற்றும் உரிய பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக வும் பொலிஸ் உயர் அதிகாரி கள் தெரிவித்தனர்.



அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த விடயங் களை பிரதி பொலிஸ்மா அதிபர்களான பிரியந்த ஜெயக் கொடி மற்றும் அஜித் ரோஹன ஆகியோர் இந்த விடயங்களைத் தெரிவித்த னர். (இ-7)

# போதைப்பொருளுடன் பாக்.பிரஜை கைது

(கொழும்பு)

போதைப் பொருளை இலங்கைக்கு கடத்திவந்த பாகிஸ்தான் பிரஜையொரு வர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் 5 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை கடத்தி வந்த போதே விமான நிலைய சுங்க அதிகாரிக ளால் கைது செய்யப்பட்டுள் ளார்.

குறித்த நபர் நேற்றுக் காலை டுபாயிலிருந்து இலங் கைக்கு வந்த கட்டார் விமா னத்திலேயே போதைப் பொருளை கடத்தி வந்ததாக வும் 5 கிலோ 500 கிராம் நிறையுடைய ரூபா 5 கோடிக்கும் மேல் மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருளை கடத்தி வந்துள்ள தாகவும் விமான நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ள னர்.

25 வயதுடைய பாகிஸ் தான் பிரஜையே பிரவுண் சீனி வகையான போதைப் பொருளைக் கடத்தி வந்ததாக வும் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருவ தாகவும் விமான நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேலும் தெரிவித் துள்ளனர். (இ-7)

# தலையில்லா சடலம் மீட்பு மர்மத்தை தேடும் பொலிஸார்

(கொழும்பு)

புத்தளம் - குருநாகல் வீதியில் அடையாளம் காண முடியாத நிலையில் ஆண் ஒருவரின் முண்டம் நேற் றுக் காலை மீட்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர்.

லக் தனவ்வ மின் உற் பத்தி நிலையத்திற்கு பின்புற முள்ள மதுரகம காட்டுப் பகுதியில், தலை துண்டிக்கப் பட்ட நிலையில் குறித்த உட லம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அப்படை யில், குறித்த சடலம் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள் ளது.

சடலம், மிக உருக் குலைந்த நிலையில் அடை யாளம் காணப்படாத நிலை யில் காணப்படுவதாகவும் அதன் தலைப் பகுதியை காணவில்லை எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

தலையைத் தேடும் நட வடிக்கையை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

நீதவானின் மரண விசா ரணையின் பின்னர், பிரேத பரிசோதனைக்காக சடலம் புத்தளம் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல் லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேல திக விசாரணைகளை புத்த ளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

### தனயனின் வருத்தத்தை பொருட்படுத்தாத தந்தை

# செய்த தவறுக்கே சரத் பொன்சேகா தண்டனை அனுபவித்தார் - மகிந்த

பீல்ட் மாஷல் சரத் பொன் சேகா, சிறைவைக்கப்பட் டமை குறித்து வருத்தமடைய வில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச சொத்துக்களை தவ றாகப் பயன்படுத்திய குற்றச் சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவை நேற்றுக் காலை பார்வையிட்ட மகிந்த ராஜபக் ஷவிடம், சரத் பொன்சேகா சிறைவைக்கப்பட்டமை தொடர் பில் நாமல் ராஜபக்ஷ வருத் தம் தெரிவித்ததை குறித்து ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

"நாமல் வருத்தமடைகின் றார். நான் அதற்காக வருத்த மடையவில்லை. நான் ஏன் அவ்வாறு வருத்தப்பட வேண் டும் தவறுக்கான தண்டனையை சரத் பொன்சேகா அனுபவித் தார் என்றே நான் கருதுகின் றேன்" என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)



# சைற்றம் போராட்டத்தில் ஜே.வி.பி. உள்நோக்கம்

## வாசுதேவ விளக்கம்

(கொழும்பு)

சைற்றத்துக்கு எதிரான போராட்டத்தை தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வரும் உள்நோக்கில் மக்கள் விடுதலை முன்னணி செயற் பட்டு வருவதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் மகிந்த சார்பு குழு பாராளுமன்ற உறுப் பினருமான வாசுதேவ நாண யக்கார குற்றம் சாட்டியுள் ளார்.

கூட்டு எதிர்க்கட்சியும் தானும் இணைந்து முன் னெடுத்த சைற்றத்துக்கு எதிரான நடவடிக்கையில் கலந்துகொண்டு மக்கள் விடு தலை முன்னணியின் சிறு குழுவொன்று கூச்சலிட்டது.

மக்கள் விடுதலை முன் னணி பற்றி தான் அறிந்த வரலாற்றில், அக்கட்சி தாரை வார்த்தலைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை யெனவும் வாசுதேவ மேலும் கூறியுள்ளார்.

சைற்றத்துக்கு எதிராக நாம் குரல் கொடுக்கும் போது ஜே.வி.பி. அதற்கு தடையாக



உள்ளது. சைற்றத்துக்கு எதிரான எதிர்ப்பு அவர்களுக் குரியது என ஜே.வி.பி. கரு துகின்றது. கடந்த காலத்தில் ஜே.வி.பி. என்ன செய்தது என்பதை நாம் அறிவோம் எனவும் அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)

# பிரிவினைவாதிகளுக்கு ஏற்ற அரசியலமைப்பு உருவாக்கம்

## பெங்கமுவே தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

பிரிவினைவாதிகளுக்கு தேவையான வகையிலேயே அரசியல் அமைப்பு உரு வாக்கப்படுகின்றது என பெங்கமுவே நாலக்க தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

மக்களின் தேவைக்கு அமைய அரசியல் அமைப்பு உருவாக்கப்படவில்லை, பிரி வினைவாத சக்திகளின் தேவைகளையே அரசாங் கம் பூர்த்தி செய்து வருகின் றது.

தற்போது திட்டமிடப்பட் டுள்ள வகையில் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட் டால் இலங்கை இரண்டாக பிளவடைவதனை எவரா லும் தடுக்க முடியாது.

இலங்கையில் இல்லா மல் போய்வரும் பௌத்த ஒழுக்க விழுமியங்களை மீளக் கட்டியெழுப்ப அனை வரும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டிய காலம் மலர்ந் துள்ளது.

ஊனமுற்ற படைவீரர்கள் உதாசீனம் செய்யப்பட்டு வரு கின்றனர். இந்த நிலையில் கடந்த காலங்களில் தேசத் துரோகிகளாக அடையாளப் படுத்தப்பட்டோரை தேசப்பற் றாளர்கள் என அறிவித்து நிகழ்வு நடத்துவது பொருத்த மற்றது என பெங்கமுவே நாலக்க தேரர் மேலும் தெரி வித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேதன் லயனின் சுழலில் சிக்கி சுருண்டது இந்தியா



நேதன் லயனின் சுழலில் 2-வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 189 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 71.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய அணியில் லோகேஷ் ராகுல் அதிகபட்சமாக 90 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய அணியில் நேதன் லயன் 8 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

பின்னர் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 16 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

டேவிட் வோர்னர் 23 ஓட்டங்களுடனும், ரென்ஷா 15 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (க)

# யாழில் இராணுவம் - ஜனாதிபதி சந்திப்பு



யாழ்ப்பாணம் பாதுகாப்பு படை தலைமையகம் மற்றும் பலாலி விமானப் படை முகாமிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராணுவத்தினருடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டதுடன் யாழ்ப்பாணத்தில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

ஜனாதிபதி வருகையை குறிக்குமுகமாக பாதுகாப்பு படை தலைமையகத்தில் நாக மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, துமிந்த திசாநாயக்க உள்ளிட்டோரும் பாதுகாப்பு படைகளின் பிரதானி உள்ளிட்ட முப்படைகளின் தளபதிகளும் பொலிஸ் மாஅதிபர் மற்றும் வட மாகாண கட்டளை தளபதி மகேஷ் சேனாநாயக்க உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் பங்குபற்றினர். (செ-9)

## வடக்கு - தெற்கை மோதச் செய்ய ...

வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

உங்கள் பிரதேசத்துக்கு மட்டற்ற மகிழ்ச்சியோடுதான் விஜயம் செய்துள்ளேன். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நான் யாழ்ப்பாணம் வருவதற்குத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் அன்று வர முடியாமல்போய் விட்டது. இரண்டு மாதங்கள் கடந்தாயினும் உங்களை சந்திப்பதில் சந்தோசமடைகிறேன்.

உங்களுக்கான புதிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதன் மூலம் வடக்குமாகாண மக்கள் மற்றும் யாழ்ப்பாண மக்களுக்கும் எனக்கும் இடையில் நெருக்கமான உறவொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் பிரிந்து போகக் கூடாது. நாங்கள் எப்போதும் அனைவரும் கைகோர்த்து ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

ஒற்றுமையாக இருக்கும் போது தான் எங்களுடைய பிரச்சினைகளை நாங்கள் தெரிந்து கொள்ள முடியும். பிரிந்து சென்றால் பிரச்சினைகளை தீர்த்துகொள்ள முடியாது. பிரிந்து சென்றால் எப்போதும் மற்றவர்களை நாங்கள் தவறான கண்ணோட்டத்துடன்தான் பார்க்கிறோம்.

நாங்கள் இங்குள்ள பிரச்சினைகளை எப்படித்தான் தீர்த்துக் கொள்ளப் போகிறோம்? இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். சட்ட ரீதியாக அமைக்கப்பட்டுள்ள அத்தனை நிர்வாகக் கட்டமைப்புகளும் ஒன்றுபட்டு இதற்காகப் பாடுபட வேண்டும். ஜனாதிபதி செயலகம், நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அதன் மூலம் எமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும். எங்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எங்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது.

நீண்ட காலமாக யுத்தம் நடைபெற்ற பிரதேசம் இது. யுத்தம் முடிந்து எட்டு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் இன்னும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் யுத்தம் முடிந்து 8 ஆண்டுகள் கடந்து விட்டாலும் நாட்டு மக்கள் உள்ளத்தினால் ஒன்று படவில்லை.

நாங்கள் ஒவ்வொருவரும் நிறுவனங்களின் பிரதிநிதிகளாக ஒரே மேசையில் அமர்ந்து நாங்கள் பேசிக் கொள்ள முடியும். மைதானத்தில் இறங்கி ஒன்றாக விளையாட முடியும். ஒரே மேசையில் அமர்ந்து சாப்பிடக் கூட முடியும். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் ஒரே பஸ் வண்டியில் செல்ல முடியும். ஆனால் உள்ளத்தினால் ஒன்றுபடவில்லை என்றால் நாம் எந்த விடயங்கள் மேற்கொண்டாலும் அது பயனளிக்கப்போவதில்லை.

எனவே உள்ளத்தினால் நாம் எப்படி இணைந்து கொள்வது? நாட்டு மக்களுடைய பிரச்சினைகள் பற்றி நேர்மையாகச் சிந்திக்க வேண்டும். அதற்காக கட்சி பேதங்களை மறந்து, இனம், மதம், மொழி, பிரதேச பேதங்களைக் கடந்து நாட்டின் நன்மைக்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும். மதங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு வாழுங்கள் என்று தான் போதிக்கின்றன. மக்களை ஒன்றுபடுத்துவதற்கு மதங்களின் தத்துவங்கள் மிக, மிக முக்கியமானவை. எனவே நாம் அனைவரும் உள்ளத்தினால் ஒன்றுபட வேண்டும். மத ரீதியான ஆன்மிக தத்துவங்களைப் பின்பற்ற வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களில் வடக்கு அபிவிருத்திக்காக அரசாங்கம் பெருமளவான பணத்தைச் செலவழித்திருக்கிறது. அந்தப் பணத்தை சில பிரிவுகளில் மிகச் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள், சில பிரிவுகளில் பயன்படுத்தவில்லை. பயன்படுத்தாத பணம் திரும்பவும் கொழும்புக்குத் திரும்பி விடுகிறது. வருகின்ற பணத்தை மக்களின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்த வேண்டும். உங்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதே போலப் பிரச்சினைகள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் உண்டு.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா அவர்கள், பட்டதாரிகளின் பிரச்சினைகள் குறித்துப் பேசினார். எனக்கு அவர்களுடைய எதிர்ப்பு போராட்டம் பற்றிய செய்தி கிடைத்தது. அதே போலவே கிழக்கு மாகாணத்திலும் பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடம் தெரிவித்திருந்தார். நான் பொலநறுவையிலுள்ள எனது வீட்டுக்குச் சென்றால் அங்கிருக்கும் பட்டதாரிகள் எனது வீட்டைச் சுற்றிவளைத்து விடுகிறார்கள். அவர்களுக்கு வேலை வேண்டுமென்று கேட்கிறார்கள். உங்களுக்குத் தெரியும், பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறி இரண்டு, மூன்று வருடங்களின் பின் தான் எல்லா அரசாங்களிலுமே அவர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. அதற்கிடையில் அரசாங்கத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் போது, அவர்கள் விண்ணப்பித்து வேலைக்குப் போகலாம்.

இப்பொழுது இலங்கையில் ஒரு லட்சத்துக்கும் அதிகமாக வெற்றிடங்கள் தனியார் துறையில் காணப்படுகின்றன. அவற்றில் பட்டதாரிகளுக்குப் பொருத்தமான வேலை தான் உள்ளன. ஆனால் எல்லோரும் அரசாங்க வேலையைத்தான் கேட்கிறார்கள். இங்கே போராட்டம் செய்யும் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் செய்யவேண்டிய தேவையில்லை. எனது வருகையின் போது என்னை வந்து சந்தித்திருந்தால் நன்றாக இருந் திருக்கும். அதன் மூலம் அவர்கள் மீது எனக்கு அக்கறை கூடியிருக்கும். ஆனாலும் போராட்டம் நடத்துகிறார்களே என்று அவர்கள் மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை. இவ்வாறான எதிர்ப்புப் போராட்டங்களை விட என்னுடன் நேரடியாகப் பேசுவதை நான் மிகவும் விரும்புகிறேன். என்னைச் சந்திப்பது கடினம் என்று சொல்லலாம். அதில் எந்தத் தடையுமில்லை. கொழும்பிலுள்ள எனது வீட்டுக்கு தினமும் அதிகாலை முதல் நூற்றுக் கணக்கானவர்கள் வருகிறார்கள். அவர்களுக்காக என்னுடைய வாசற்கதவுகள் திறந்து தான் இருக்கிறது.

அப்படி வரமுடியாதவர்களுக்காகத் தான் நாங்கள் "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" என்ற இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் அனைவரும் எனது நல்ல நண்பர்கள். அவர்களுக்கு வாக்களித்தது போலவே என்னை ஜனாதிபதியாக்குவதற்கும் வாக்களித்திருக்கிறீர்கள். எனவே எந்த முறைப்பாடாயினும், எவரிடமிருந்து வந்தாலும் இயலுமான அளவுக்கு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

வடக்குக்கு - குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கென்று ஒரு புதிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தை வரைந்து செயற்படுத்தினால்தான் நன்றாக இருக்கும் என நம்புகிறேன். இதை விட மிக நெருக்கமாக நாங்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். எனவே இனிவரும் காலங்களில் மாதத்துக்கொரு தடவையாவது யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டும் என்று நான் முடிவு செய்துள்ளேன். மாதத்துக்கொரு தடவை நிச்சயமாக நான் வருவேன். பெரிய கூட்டங்களை வைப்பதற்காக நான் இங்கே வரவில்லை. வடக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அபிவிருத்தியில் சம்பந்தப்பட்ட அனைத்து அரசாங்க அதிகாரிகளையும் நேரில் அழைத்து இது தொடர்பாகப் பேசவிருக்கிறேன். இதன் மூலம் பல பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

இந்த நாட்டிலே போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் எல்லாம் வட புலத்தில் மாத்திரமில்லை. கொழும்பில் வாரத்துக்கு ஏழு போராட்டங்கள் கூட நடக்கும். எங்கோ ஒரு கிராமத்தில் வடிகாலொன்றை அமைக்கப் போனாலும் போராட்டம் செய்யக் கொழும்புக்கு வருகிறார்கள். தண்ணீருக்காகக் கிணறு வெட்டப் போனால்கூட போராட்டம் செய்கிறார்கள். இந்த ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், உண்ணாவிரத்தை எல்லாம் மிக, மிக முக்கியமான விடயங்களுக்காகத்தான் முனைப்படுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் போராட்டத்தை செய்தால் அது அர்த்தமற்றதாகிவிடும்.

அதிலும் குறிப்பாக என்னுடைய ஆட்சிக்காலத்தில்தான் இவை அனைத்தையும் செய்கிறார்கள். முன்னைய காலங்களில் இவ்வாறு ஒன்றைச் செய்திருந்தால் என்ன நடந்திருக்கும்? யார் இதனைச் செய்கிறார்கள் என்று அறிந்து வெள்ளை வான் துரத்திக் கொண்டு வந்திருக்கும். தூக்கப்பட்டவர்கள் காணாமல் போயிருப்பார்கள். என்ன நடந்ததென்று யாருக்கும் தெரியாது.

ஆனால் இப்போது யாரும் பயமில்லாமல் வீதியில் இறங்கி அரசுக்கெதிராக் கோஷம் போடுகிறார்கள். அவ்வாறு கோஷம் போடுபவர்களை பேசித் தீர்ப்போம் என்று நான் அழைப்பதுண்டு. இங்கு போராடும் பட்டதாரிகள் அத்தனை பேருக்கும் வேலை வழங்க முடியாவிட்டாலும், இன்று என்னைச் சந்திக்கும் நான்கைந்து பேருக்காவது என்னால் வேலை பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருந்திருக்கும். வேறு அரச நிறுவனங்கள் இல்லாவிட்டால் கூட எனது செயலகத்தில் கூட அவர்களை நான் வேலைக்கு அமர்த்தியிருக்க முடியும்.

எனவே இளைஞர், யுவதிகளே உங்களுக்குப் பிரச்சினை இருந்தால் நாம் அதனைப் பேசித்தீர்த்துக் கொள்வோம். எம்மை மோத விடுவதற்கு பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். வடக்கையும் தெற்கையும் மோதச்செய்வதற்கு பலர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களை மோத வைப்பதற்காக நாட்டுக்குள் மட்டுமல்ல நாட்டுக்கு வெளியேயும் பல சக்திகள் காத்துக்கொண்டு இருக்கின்றன. இணையத்தளங்கள், முகப்புத்தகம் என்பவற்றின் மூலம் நீங்கள் அறிய முடியும். நான் அவற்றைப் பார்ப்பதில்லை. அதில் பயனும் இல்லை

எங்களுக்கென்றொரு புத்தி இருக்கிறது. பலருக்கு கல்வியறிவு உண்டு. எது நல்லது எது கெட்டது என்று பிரித்துப் பார்க்கத் தெரியும். எனவே நாங்கள் ஒன்றுபட்டு நிற்போம். ஒன்றாக உழைப்போம். என்னுடைய அமைச்சர்கள் அனைவரும் மாதத்துக்கு ஒரு தடவையோ, இரண்டு மாதங்களுக்கொரு முறையோ யாழ்ப்பாணத்துக்குச் சென்று பொது மக்களின் பிரச்சினைகளைக் கேட்டு, அவற்றைத் தீர்க்கும் வகையில் உத்தரவிடப் போகிறேன். அவரவர் அமைச்சுக்கள் சார்ந்த திட்ட முன்மொழிவுகளை எனக்குத் தருமாறு கேட்கப் போகிறேன். அவ்வாறு தரப்படும் திட்டங்களை அமைச்சரவையில் என்னால் சமர்ப்பிக்க முடியும். இவற்றை மிகவும் வேகமாக நாங்கள் செய்து முடிப்போம்.

உங்கள் அனைவரிலும் நான் தனிப்பட்ட முறையில் அக்கறை கொண்டிருக்கிறேன். மீண்டும் யுத்தமில்லாத நாடொன்றைக் கட்டியெழுப்புவது பற்றித்தான் நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுப் பணியாற்றக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். எங்கள் மத்தியிலிருந்து சந்தேகத்தை அகற்ற வேண்டும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (செ-9)


## கோழிகள் விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய சேவல்கோழிக் குஞ்சுகள், வெள்ளடியன் இன சேவல்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0772453673 (821)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகர நவீன சந்தைப் பகுதியில் இயங்கும் பாட்டா கடை ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. தொடர்பு :
0776615973, 0212223525

## வீடு விற்பனைக்குண்டு

கோப்பாய் தெற்கு இராசவீதியில் 5 3/4 பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 871 3748 (877)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனைத்து வளங்களையும் விற்பதே நல்லாட்சி அரசின் கொள்கை- கீதா

அனைத்து வளங்களையும் விற்பனை செய்வதே இந்த நல்லாட்சி அரசின் கொள்கையாக இருக்கின்றது என காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

பலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தற்போது இலங்கை அரசாங்கம் பாரிய கடன் சுமையில் இருப்பதால் சில தொழிற்சாலைகள் மற்றும் சில இடங்களை தனியாருக்கு வழங்கியமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தற்போது ஆட்சியில் இருக்கும் நல்லாட்சி அரசாங்கமானது அனைத்து வளங்களையும் வெளிநாடுகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.



மேலும், இந்த நிகழ்வில் கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்னாள் ஓ.ஐ.சி.உள்ளிட்ட ஐவருக்கு விளக்கமறியல்

வாதுவை பொலிஸ் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 5 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை, எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, பாணந்துறை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தர்விட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து, சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ். கலாலயா பயிற்சியகத்தின் 32 வது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும்.......







யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் அமைந்துள்ள மேற்படி பயிற்சி நிலையத்தின் நிகழ்வில் நிலைய இயக்குநர் திரு. மா.சுதர்சன் அவர்கள் கேக் வெட்டுவதனையும் ஓய்வுபெற்ற மனைப்பொருளியல் பயிற்றுனர் திருமதி நகுலா கணேசலிங்கம் அவர்கள் உரையாற்றுவதையும் லண்டன் ஜீடி என்ரபிறைசஸ் அழகுசாதனப் பொருட்கள் கேக் உள்ளீடுகள் விநியோக நிறுவன இயக்குநர் திரு. ஜீ.எம்.ராஜ்குமார் அவர்கள் சான்றிதழ் வழங்குவதனையும் கேக் ஐசிங், உணவு தயாரித்தல், facial, கூந்தல் அலங்காரம், உடை தயாரித்தல் பயிற்சிகளைப் பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட 2016 'C' பிரிவு மாணவிகளையும் அவர்தம் ஆசிரியைகளையும் படத்தில் காணலாம்.

(சி-7726)



# இராசி பலன்

05.03.2017

(மாசி 21, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

சப்தமி காலை 8.28 மணிவரை

அட்டமி பின்னிரவு 6.07 மணிவரை

ரோகினி முன்னிரவு 11.04 மணிவரை

சுபநேரம் 9.26-10.56 மணிவரை

இராகுகாலம் 4.56-6.26 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | செவ் | | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் | | |
| | | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினரை சந்திக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** சுபகாரியச் செலவுகள் கூடும் நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வியாபாரத்தில் மாற்றம் செய்ய முற்படுவீர்கள்.

**கும்பம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், சிந்தனை மிகுதியான நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், சுப செலவுகள் கூடும்.

**கடகம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கடின வார்த்தைகளை குறைப்பது நல்லது.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், முன்னேற்றப்பாதையை நோக்கி நகர்வீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும்.

**தனுசு:** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**துலாம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே எம் உறவுகள்?

## யாழில் மீண்டும் கண்ணீர் விட்டுக்கதறிய காணாமற் போனவர்களின் உறவினர்கள்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தியும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் நேற்றையதினம் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த உறவினர்கள் ஏ-9 வீதியை வழிமறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர். பொலிஸார் பெருமளவில் பிரசன்னமாகி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வயோதிப தாய்மார்களை தகாத வார்த்தைகளால் திட்டியும், வலுக்கட்டாயமாக பிடித்து இழுத்தும் போராட்டத்தை தடுத்து நிறுத்த முயற்சித்தனர். இதனால் ஜனாதிபதியின் நேற்றைய வருகை பதற்றம் மிகுந்ததாக அமைந்ததோடு, ஜனாதிபதி தம்மை ஏமாற்றி விட்டதாகவும் காணமற் போனவர்களின் உறவினர்கள் கண்ணீர் விட்டு கதறியழுதனர்.

(படங்கள் :- உ.சாளின்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்' அலுவலகம் யாழில் திறப்பு





(படங்கள்::- பொ.சோபிகா)

தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் ஒன்றான "ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" என்ற பிராந்திய அலுவலகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்களின் பிரச்சினைகளை நேரடியாக தீர்த்து வைப்பதற்கென குறித்த அலுவலகம் ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கவுள்ளது.

அந்த வகையில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் "ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" என்ற பெயரில் இந்த அலுவலகம் இயங்கவுள்ளது. இங்கு 2 அதிகாரிகள் கடமையாற்றவுள்ளனர். அவர்கள் மும்மொழியிலும் கலந்துரையாடுவார்கள். வாரத்தில் ஒரு நாள் நேரடிச் சந்திப்பும் ஏனைய நாட்கள் முறைப்பாடுகளை எழுத்துமூலம் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளும் இடம் பெறும்.

அத்துடன் தொழில்நுட்ப ரீதியில் மென்பொருள் செயற்பாடாக இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய மென்பொருளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதை தொலைபேசியில் தரவிறக்கம் செய்து எந்த நேரமும் முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். முறைப்பாடுகள் கிடைத்து 3 நாட்களில் குறுந்தகவல் மூலம் குறித்த முறைப்பாட்டாளர் நடவடிக்கை எந்த அதிகாரியால் மேற்கொள்ளப்படுகிறது என்ற பதில் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் ராமநாதன்,வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா,மாகாண சபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், மதத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## இரு பேருந்துகள் நேருக்குநேர் மோதி

# அ'புரத்தில் கோர விபத்து; 38 பேர் வைத்தியசாலையில்




அநுராதபுரம் - பாதெனிய மஹகல்கடவில் நேற்றுக் காலை இடம்பெற்ற கோர விபத்தில் 38 பேர் வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். ஆடைத் தொழிற்சாலை யொன்றிற்கு ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன் றும் இலங்கை போக்குவ ரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 28 பேரும் கல்கமுவ வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த நிலையில், இதில் 8 பேர் மேலதிக சிகிச் சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ரஷ்ய பிரஜைகளை விடுவிக்க வேண்டும்

இலங்கையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய பிரஜைகளை விடுதலை செய்வதற்கு மாலைதீவு மற்றும் இலங்கையில் உள்ள ரஷ்ய கூட்டமைப்பு தூதரகம் முயற்சித்து வருகின்றது. ஒன்பது ரஷ்யப்பிரஜைகள் கைது செய்யப்பட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என Sputnik நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த ரஷ்யர்கள், இலங்கையின் குடிவரவு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ரஷ்யர்களுள் மூவர்; சொந்த வணிகம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்றும், ஒருவர் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார் என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)


**பணம், காசு, துட்டு, மணி, மணி**

காட்போட்,பழைய புத்தகங்கள், கொப்பிகள், Papers, Files, waste காகிதங்கள், Press வெட்டுத்துண்டுகள் காசு கொடுத்து வாங்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 0771365153**

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>லண்டன் NOT PR<br>தொ.இ: B/7036 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA Reading<br>தொ.இ: G/7042 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 21 செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BA, MA, /அரச தொழில்<br>தொ.இ: B/7037 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 28 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7043 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/7038 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BMS/ஆசிரியர்<br>தொ.இ: G/7046 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 34 சூரிசெவ் 7 இல்<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/7039 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 36செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/7054 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

**Yarl Beauty & Language's Skills College**

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

சனி, ஞாயிறு பிரிவுகள் 11.03.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 13.03.2017 அன்று 10.00 மணிக்கு

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு முதலீடுகள் தாமதமடைய அரச நிறுவனங்களே முழுக் காரணம்

## முதலீட்டுச் சபை கடும் விசனம்



இலங்கையின் சட்ட செயன் முறைகள் மற்றும் அரச நிறுவனங் களில் அனுமதி வழங்குவதில் காணப்படும் வேகமற்ற தன்மை ஆகியவற்றால் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தாமதமடைந்துள்ள தாக முதலீட்டு சபையின் தலைவர் உப்புல் ஜயசூரிய தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு கையில் வெளிநாட்டு நேரடி முதலீடு 970 மில்லியன் அமெரிக்க டொல ரில் இருந்து 450 மில்லியன் அமெரிக்க டொலர் வரை வீழ்ச்சி யடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை தீவில் முதலீடு செய் வதற்கு பல நாடுகள் அதீத ஆர்வம் காட்டி வருகின்ற போதிலும் அதற்கான அனுமதிகளை வழங்குவதில் தாம தம் காணப்படுவதாக முதலீட்டு சபையின் தலைவர் தெரிவித்தார்.

சுற்றாடல் பிரச்சினைகள், மின் வழங்கலுக்கான அனுமதி கிடைப் பதிலுள்ள குறைபாடுகள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் அரச நிறு வனங்களால் ஏற்படுத்தப்படும் தாமதங்கள் மற்றும் பொதுமக் களின் ஆர்ப்பாட்டங்கள் முதலீட் டாளர்கள் மத்தியில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதித்துறைசார்ந்த விடயங் களில் பிரச்சினைகள் காணப்படு வதாகவும் சில தீர்ப்புகள் தாமத மடைவதாகவும் சில தருணங் களில் தீர்வுகள் வழங்கப்படுவ தில்லை எனவும் சில தீர்ப்புக்கள் செயற்றிறனான முறையில் அமுல் படுத்தப்படுவதில்லை எனவும் ஊடக சந்திப்பில் உப்புல் ஜயசூரிய கூறியுள்ளார்.

ஏனைய நாடுகளில் அவ்வாறு நடைபெறுவதில்லை எனவும் முதலீட்டு சபையின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான மத்திய வலதுசாரி ஐக்கிய தேசிய கட்சி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து உருவாக் கியுள்ள தேசிய அரசாங்கம் பாரிய வெளிநாட்டு முதலீட்டுடன் பொரு ளாதாரத்தை மேம்படுத்துவதாக உறுதி வழங்கியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரி பெயரும் தேசத்துரோகிகள் பட்டியலில் சேரும்

ஆங்கிலேயரினால் தேசத் துரோகிகளாக பிரகடனப்படுத்தப் பட்டவர்களை, தேசத்துக்காக போரா டிய வீரர்கள் என பிரகடனம் செய்த ஜனாதிபதி தேசத்துரோகியாக எதிர் காலத்தில் எழுதப்படக் கூடாது என மகிந்த சார்பு பாராளுமன்ற உறுப் பினர் ரஞ்ஜித் சொய்ஷா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இத னைக் கூறினார்.

இந்த அரசாங்கம் அரச சொத்துக் களையெல்லாம் வெளிநாட்ட வருக்கு பகுதி பகுதியாக விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதனை ஜனாதிபதி தடுக்காது விட்டால், எதிர் வரும் காலத்தில் அவரின் பெயர் தேசத்துரோகிகள் பட்டியலில் இடம் பிடிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஈழத் தமிழர்களின் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்



இந்தோனேசியாவில் அகதி அந்தஸ்து வழங்குமாறு கோரி ஈழ தமிழர்கள் மேற்கொண்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

ஈழ அகதிகளின் கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து விரைவில் தீர்வினை பெற்றுத்தருவதாக சர்வ தேச அகதிகள் நிறுவன அதிகா ரிகள் வழங்கிய உத்தரவாதத் தினை தொடர்ந்து உணவு தவிர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட ஈழ அகதி கள் தம்மை வேறு நாடுகளில் குடியேற்றுமாறு கோரி கடந்த ஐந்து நாட்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் உடல் நிலை மோசமடைந்த நிலை யில் ஐவர் மொடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே சர்வதேச அகதிகள் நிறுவன அதிகாரிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை நேற்று முன் தினம் நேரில் சென்று கலந்து ரையாடியதுடன் விரைவில் தீர் வினை பெற்றுத்தருவதாக தெரி வித்துள்ளனர்.

அத்துடன் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர் களுக்கு தேநீர் கொடுத்து அவர் களின் போராட்டத்தினையும் தற்கா லிகமாக முடிவிற்கு கொண்டு வந் துள்ளனர்.

இதேவேளை, இந்தோனேசியா வில் புகலிடம் கோரிய நிலையில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட பல ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் மொடன் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள் ளதாகவும், அவர்கள் தம்மை விடு தலை செய்யுமாறும் இந்தோனேசிய அரசாங்கத்திடம் கேட்டுக் கொண் டுள்ளனர்.

இந்தோனேசியாவின் மொடன் பகுதியில் யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு மற்றும் வன்னி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 350 ஈழத் தமிழர்கள் குடும்பங்களாகவும் தனி நபர்களாகவும் தடுத்துவைக் கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரட்டை சக்திகள் கொண்ட 6 ரயில்கள் கொள்வனவு

இந்தியாவிடம் இருந்து இலங் கைக்கு இரட்டை சக்திகள் கொண்ட 6 ரயில்களை கொள்வனவு செய் யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடன் உதவியின் கீழ் புதிய இரட்டை சக்தி கொண்ட 6 ரயில்கள் மற்றும் 10 இயந்திரங் களை இலங்கைக்கு பெற்றுக் கொள் வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை யில் ரயில் பயண விதிமுறைகளில் மாற்றம் மேற்கொள்ளும் நோக் கில் இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளதாக ரயில்வே பொது மேலாளர் பீ.ஏ.பீ. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்காக இந்தியாவிடம் 100.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெற்றுக் கொள்ளப்பட் டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று ரயில்வே பொது மேலாளர் மற்றும் இந்திய பொருளாதார பேர வையின் அதிகாரி ஆகியோருக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டது.

கொள்வனவு செய்யப்படவுள்ள ரயில் மற்றும் இயந்திரங்கள் இந்திய ரயில்வே அமைச்சினால் நெறிப்படுத்தப்படும் தொழிற் சாலையில் தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 | 50 | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 100 | 120 | 90 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 100 | 120 | 180 | 160 | 160 |
| தக்காளி | 60 | 60 | 40 | 30 | 120 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 70 | 60 | 50 | 80 | 60 |
| கோவா | 30 | 30 | 20 | 30 | 80 | 60 | 40 |
| கரட் | 60 | 40 | 40 | 60 | 40 | 100 | 40 |
| பூசணி | 80 | 60 | 35 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 100 | 60 | 40 | 80 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 40 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 100 | 80 | 50 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 50 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 200 | 180 | 120 | 100 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 120 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 50 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 70 | 100 | 40 | 50 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 90 | 100 | 100 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 400 | 300 | 200 | 600 | 200 |
| போஞ்சி | 140 | 100 | 60 | 80 | 100 | 120 | 60 |
| கத்தரிதம்புள்ள | 40 | 100 | 40 | 40 | - | 40 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 50 | 30 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 60 | 200 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 200 | 160 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 40 | 40 | 60 | 40 | 120 | 60 |
| முள்ளங்கி | 60 | 80 | 30 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 80 | 60 | 60 |

## 03.2017 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1770 - பாஸ்டன் படுகொலை: பாஸ்டனில் அமெரிக்கர்களுக்கும் பிரித்தானியப் படையினருக்கும் இடையில் கிளம்பிய கலவரத்தை அடுத்து ஐந்து அமெ ரிக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1793 - பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியா வினால் தோற்கடிக்கப்பட்டன.
- 1824 - பிரித்தானியர் பர்மாவின் மீது போர் தொடுத்தனர்.
- 1940 - சோவியத் உயர்பீடம் 40,100 போலந்துப் பிரஜைகளுக்கு மரணதண் டனை அளித்து கையொப் பமிட்டது.
- 1964 - இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.
- 2008 - இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் படுகொலை செய்யப் பட்டார்.

### பிறப்புக்கள்

- 1871 - ரோசா லக்சம்பேர்க், மார்க்சிய மெய்யியலாளர் (இ. 1919)
- 1886 - டொங் பிவு (னுழபெ டீறைர), சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப் பினர் (இ. 1975)
- 1913 - கங்குபாய், இந்துஸ்தானி இசைப் பாடகி (இ. 2009)
- 1934 - **Daniel Kahneman**, நோபல் பரிசு பெற்ற இசுரேலியர்
- 1973 - த. ஜெயசீலன், ஈழத்து எழுத்தாளர்

### இறப்புக்கள்

- 1878 - ரி. சின்னத்தம்பி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஈழத்துப் புலவர்
- 1953 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (பி. 1878)
- 1966 - அன்னா அக்மதோவா, ரசியக் கவிஞர் (பி. 1889)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாயிரம் பக்தர்கள் கச்சதீவுக்கு வருவார்கள்

## திருவிழா ஏற்பாடுகள் குறித்து அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் இம்முறை பத்தாயிரம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என தெரிவித்த யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு திருவிழாவுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவில் இம்முறை புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதால் இரு நாட்டில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு ஏற்ற வகை யில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவிழாவுக்கான ஒழுங்குகளுக்குரிய பிரதான பொறுப்பை கடற்படையினர் ஏற்றுள்ளனர். அதே போன்று ஏனைய துறையினர் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தன்படி தத்தமது சேவைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கர்களின் நலன் கருதி நிரந்தர மலசலகூட வசதிகள் மற்றும் மேலதிகமாக தற்காலிக மலசலகூட வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவான் வரையான பேருந்து சேவை அதிகாலை 4 மணியில் இருந்து பிற்பகல் ஒருமணிவரை நடைபெறும்.

அதேபோன்று குறிகட்டுவானில் இருந்து கச்சதீவு வரை காலை 5 மணி க்கு ஆரம்பித்து 2 மணி வரை நடைபெறும்.

படகுச்சேவைக்கான ஒருவழி கட்டணமாக 275 ரூபாய் அறவிடப்படவுள்ளது. அத்துடன் சேவையில் ஈடுபடும் படகுகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே சேவைக்கு அனுமதிக்கப்படவுள்ளது. பயணிகள் பாதுகாப்பு அங்கி அணிய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத் துடன் இம் முறை பொலிஸ் பாதுகாப்பு வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. 200 பொலிஸார் சேவையில் ஈடுபடவுள்ளனர். பயணிகள் படகு சேவை இடம் பெறும் போது கடற்படை ரோந்து நடவடிக்கைகள் நடைபெறும். (இ-9)

# கடலுக்குள் பாய்ந்தது வாகனம்



(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த வடிரக வாகனம் வல்லை கடல் நீரேரிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் சிறு காயங்களுக்குள்ளாகினர். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது வேகக்கட்டுப் பாட்டையிழந்து கடல் நீரேரிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. வாகனத்திற்குள் சாரதியும் அவரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் இருந்த போதிலும் இவருக்கு மட்டும் சிறு காயம் ஏற்பட்டதாக கூறப்பட்டது. விபத்தை அடுத்து வீதியால் சென்றவர்கள் வாகனத்திற்குள் இருந்தவர்களை மீட்டனர்.

(இ-3-60)

# அதிபரின் தொலைபேசி மாயம்

(கரணவாய்)

பாடசாலை அதிபரின் கைத்தொலைபேசி ஒன்று அலுவலகத்திற்குள் வைக்கப்பட்டிருந்த போது திருட்டுப் போயுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முயைிடப்பட்டுள்ளது.

துன்னாலையில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பெறுமதியான கைத்தொலைபேசியை வைத்து விட்டு வகுப்பறைக்குச் சென்ற ஒருசில நிமிடத்தில் திரும்பி வருவதற்கிடையில் கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மேலும் பாடசாலை அலுவலகத்திற்கு வெளியிலிருந்து இளைஞர் ஒருவர் வந்து சென்றதை மாணவர்கள் சிலர் கண்டதாகவும் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின் 2017ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள இலங் கலைஞர் மண்டபத்தில் இடம் பெறும். (இ-3)





2016ஆம் ஆண்டிற்கான சிறந்த கிராம அலுவலர் விருதினை குடத்தனை மேற்கு கிராம அலுவலராகக் கடமையாற்றிய அ.விமலேசன் பெற்றுக்கொண்டார். சிறந்த முறையில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் விமலேசனிற்கான பிரியாவிடை வைபவம் கடந்த 2ஆம் திகதி வியாழக்கிழமை குடத்தனை கிறிஸ்து நற்தூது மண்டபத்தில் இடம்பெற்றது. உ.நிதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் மற்றும் கிராம அலுவலர்கள், நற்தூது பணியகத்தின் அருட்தந்தை டேவிட் நிரூட்சிகன், கமநல சேவை உத்தியோகத்தர் திருமதிகௌரி திருப்பதி, தபால் உத்தியோகத்தர், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# இலக்கிய போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பாலர்பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு மற்றும் திறந்த பிரிவினருக்கான இலக் கியப்போட்டிகளான கவிதைப் பாடல், கையெழுத்துப் போட்டி, கட்டுரை, பாடல் நயத்தல், பாடலாக்கம், நாடகப்பிரதி எழுதுதல், சிறுவர்கதை, இலக்கிய விபரணம், சிறுகதை, நாட்டார் கலை கற்றல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. எனவே சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் வசிப்பவர்களிடமி ருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பம், சுற்று நிருபம் என்பன பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலர் திருமதி.யு.யசோதா அறிவித்துள்ளார். (இ-3)

# 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபர் தலைமையில் யாழ். மாவட்டத்தில் இடை விலகல் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள 500 வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை இலவசமாக வழங்கி அவர்களின் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் நாளை 6ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. யாழ் .வணிகர் கழகத்தின் நிதி அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா, ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.




# போதையில் சாரதி; 14 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

மதுபோதையில் மோட் டீடார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் ஒருவருக்கு 14 ஆயிரம் ரூபா அபராதம் விதி த்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி தீர்ப்பளித்தார்.

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளை செலுத்தியதாக தெரிவித்து நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கரவெட்டியைச் சேர்ந்த நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போதே அவர் குற்றங்களை ஒப்புக் கொண்டதை யடுத்து அவருக்கு 14ஆயிரம் ரூபா அபராதம் விதித்து [illegible]

# தண்ணீரில் சிக்கனம் தேவை

## சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் வேண்டுகோள்

(சாவச்சேரி)

தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் க.சண்முகதாசன் வேண் டுகோள் விடுத்துள்ளார்.

பருவ மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளதால் நாட்டில் எதிர்வரும் காலங்களில் தீவிர வரட்சி நிலவக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் குடிநீருக்கு மட்டுமின்றி ஏனைய பயன்பாடுகளுக்கான நீருக்கும் பாரிய கேள்வி நிலை ஏற்படலாம்.

நகராட்சி மன்ற எல்லைக் குள் வசிக்கின்ற ஏனைய மக்களும் தங்கள் கிணறுகள் மற்றும் ஏனைய வழிக ளிலிருந்தும் பெற்று பயன் படுத்துகின்ற தண்ணீரை வீண் விரையம் செய்யாமல் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்.

நாடளாவிய ரீதியில் ஏற்படலாம் என எதிர்பாக் கப்ப டுகின்ற வரட்சி காலநிலையை எதிர்கொள்வதற்கு அடிப்படை கட்டமைப் பான உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப்பட வேண்டும்.

எனவே சாவ கச்சேரி நகராட்சி மன்ற எல்லைக் குள் வாழுகின்ற மக்கள் அனைவரும் முன் மாதிரியாகச் செயற்பட்டு நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தி நீர்வளத்தை பேண ஒத்துழைக்க வேண்டும் என சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளினுள் கால்பதித்த நாளில் இருந்து கவனிப்பாரின்றி இருக்கின்றோம்

## பிலவுக்குடியிருப்பு மக்கள் ஆதங்கம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பைச் சேர்ந்த மக்களுடைய காணிகள், கடந்த முதலாம் திகதி விடுவிக்கப்பட்ட நிலையில், அவர்கள் மீள்குடியேறுவதற்கான அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், அவர்களுடைய காணிகள் கடந்த முதலாம் திகதி விடுவிக்கப்பட்டது

தாம் காணிக்குள் சென்ற அன்றிலிருந்து மழை பெய்கிறது. ஒரு கொட்டில் போடகூட வசதிகள் இல்லை. நாங்கள் மழையில் நனைந்து திரிவதாகவும் தமக்கு தற்காலிக கூடாரங்களை அமைத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறும் கோருகின்றனர். (2-281)

# வீதியை விட்டு விலகி தடம்புரண்டது பிக்கப்

## சாரதி சிறுகாயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார்



(முல்லாவி)

முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பரிவில் முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதியில் ஏ-34 முல்லைத்தீவு நகரை அண்மித்த 44 கிலோ மீற்றர் பகுதியில் பயணித்த டாட்டா பிக்கப் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி மயிரிழையில் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஏ-34 வீதியூடாக முள்ளியவளையில் இருந்து முல்லைத்தீவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மேற்படி வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டெடுத்து பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (2-15,281)




# கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவாக

## பிலவுக்குடியிருப்பு மக்கள் வருகை தந்து வீதியில் இறங்கி நேற்று கவனயீர்ப்பு





(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலம் கோரி கடந்த 2ஆம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்பு தலைமையகத்திற்கு முன்பாக முன்னெடுத்துவரும் போராட்டமானது நேற்றுடன் நான்காவது நாளை எட்டியுள்ளது. இம்மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக பிலவுக்குடியிருப்பில் நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றியைத் தொட்ட மக்கள் கேப்பாப்பிலவிற்கு நேற்று வருகை தந்து அம்மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக முல்லைத்தீவு மாவட்ட தலைமையகத்திற்கு முன்பாகவுள்ள அவ்வீதியில் இறங்கி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (2-281)

# சொந்த நிலங்களை எம்மிடம் தாருங்கள்

## முல்லை. இராணுவத்தலைமையக வாயிலை மறித்து கோசம் எழுப்பி மக்கள் போராட்டம்






(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவில் பூர்வீகமாக குடியிருந்த கிராம மக்கள் தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள இராணுவத்தினர் அதனை விடுவிக்க வேண்டுமெனக் கோரி கேப்பாப்பிலவில் அமைத்துள்ள முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் மூன்றாவது நாளாகவும் தொடர் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் கேப்பாப்பிலவின் பிரதான வீதியை மறித்து அமைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு பாதுகாப்பு தலைமையகத்தின் பிரதான வாயில் முன்பாக முற்பகல் 11.30 மணியளவில் ஒன்று திரண்டு இராணுவத்துக்கு எதிராக கோசம் எழுப்பி தமது சொந்த நிலங்களை எம்மிடம் தாருங்கள் என கண்ணீர் மல்க கதறி அழுது போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் மக்களின் போராட்டம் காரணமாக சிறிது நேரம் குறித்த வாயில் ஊடாக மேற்கொள்ளப்படும் இராணுவத்தினரின் போக்குவரத்து நடவடிக்கைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக குறித்த பகுதிக்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மக்களுடன் கலந்துரையாடி வீதியை மறிக்க வேண்டாமென கேட்டுக்கொண்டதோடு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் போராட்டத்தை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து மக்கள் வீதியை விட்டு விலகி போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்தோடு நேற்று முன்தினம் முழுவதும் கனமழை பொழிந்த நிலையில் மக்கள் தளராது மழைக்கு மத்தியிலும் வீதியோரத்தில் அமர்ந்து போராடினர்.

புதிதாக இடப்பட்டுள்ள எச்சரிக்கை பெயர்ப்பலகை!!!

மக்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் கேப்பாப்பிலவு கிராமத்தின்பிரதான வீதியை மறித்து அமைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையக வாயில் முன்பாகவும் வீதியின் மறுமுனையில் பிரதான வீதியில் மறித்து அமைக்கப்பட்டுள்ள காவலரண் முன்பாகவும் புதிய எச்சரிக்கை பெயர்ப்பலகை ஒன்று இடப்பட்டுள்ளது.

அதாவது இது ஒரு இராணுவ பாசறை அனுமதி இன்றி உட்பிரவேசித்தல் முற்றாக தடை என மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளது. இதனால் இராணுவ படைத்தலைமையக வாயில் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட கேப்பாப்பிலவு மக்கள் ஏன் இந்த பெயர்ப்பலகை எமது நிலத்தில் வைக்க வேண்டும். இது இராணுவ பாசறை அல்ல. இது எங்கள் சொந்த நிலம் என ஆத்திரம் அடைந்தவர்களாய் இராணுவத்தினரை திட்டித் தீர்த்தனர். (2-281-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைத் தண்டிக்க இந்தியா தீர்மானம்

## அன்புமணி அரசிடம் கோரிக்கை

(கொழும்பு) இலங்கை அரசாங்கத்தை தண் டிக்க, ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இந்தியா தீர்மா னம் கொண்டுவர வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞர் அணி தலைவர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.



அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ள அவர் இந்த விட யத்தினை தெரிவித்துள்ளார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவா நகரில் நடை பெற்று வருகின்றது.

இலங்கையின் இறுதிக் கட்ட போரின் போது நிகழ்த் தப்பட்ட போர்க்குற்றங்க ளுக்கு நீதி வழங்குவதற்காக இலங்கை அரசின் நடவடிக் கைகள் குறித்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் தாக்கல் செய் துள்ளார்.

இதனடிப்படையில் இலங்கை மீதான விவாதம் இந்த மாதம் 22 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

போர்க்குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்கான இலங்கையின் செயற்பாடு களில் திருப்தி இல்லை என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் தனது அறிக் கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ஈழத்தமி ழர்களுக்கு நீதி வழங்காமல் ஏமாற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் நடத்தும் நாட கம் மனித உரிமை ஆணை யர் அறிக்கை மூலம் தெளி வாகியுள்ளதாக அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலும் இலங்கை அரசின் ஏமாற்று சதிகளுக்கு சர்வதேச சமூகம் பலியாகக் கூடாது. 2015 ஆம் ஆண்டு மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்தின் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற் றாமல், ஒருசிலவற்றை மட் டும் நிறைவேற்ற ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

மாறாக, மனித உரிமை பேரவையின் நடவடிக்கை களை தீவிரமாக்குவதுடன், ஐ.நா. பொது அவைக்கும், பாதுகாப்பு மன்றத்துக்கும் இலங்கை விவகாரத்தை கொண்டு செல்ல வேண்டும்.

குறிப்பாக, இலங்கையை காப்பாற்றும் முயற்சிகளில் இந்தியா இனியும் ஈடுபடக் கூடாது. மாறாக, நீதியின் பக்கம் நிற்க முன்வர வேண் டும். அதுமட்டுமன்றி, ஐ.நா. மனித உரிமை பேரவையில் 2015 ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் அம்சங்களை நிறைவேற்றா மல் காலந்தாழ்த்தும் இலங்கை அரசைக் கண்டிக்கும் வகை யிலான தீர்மானத்தை இந் திய அரசே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்.

வெளிநாட்டு நீதிபதிகள் அடங்கிய கலப்பு நீதிமன்றம் அமைப்பது உள்ளிட்ட அனைத்து பரிந்துரைகளையும், உரிய காலக்கெடுவுக்குள் நிறை வேற்றுவதற்கான செயற் றிட்டத்தையும் இந்திய அர சாங்கம் அதன் தீர்மானத் தில் முன்வைக்க வேண்டும் என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் போன்ற வெளிநாட்டு அமைப் புகளில் அளிக்கப்பட்ட வாக்கு றுதிகளை இலங்கை அர சாங்கம் நிறைவேற்றவில்லை.

எனவே ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் பொருத்தமான தீர்மானத்தைக் கொண்டு வந்து நட்பு நாடுகளின் ஆதரவு டன் நிறைவேற்றுவதன் மூலம் இந்தக் கடமையை இந்தியா நிறைவேற்ற வேண்டும் என அன்புமணி இராமதாஸ் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் இடையிலான வருடாந்த சொல்லாடல் விவாத அரங்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

## மார்ச் முதலாம் திகதி வரை 1500 முப்படையினர் கைது

(கொழும்பு)

இம்மாதம் முதலாம் திகதி வரையில் முப்படையிலிருந்து தப்பிச்சென்ற சுமார் 1500 முப்படைவீரர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாக அரச தக வல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்க ளில் 1149 இராணுவத்தினர் மற்றும் 3 இராணுவ அதி காரிகள், 327 கடற்படை வீரர்கள், 21 விமானப்படை வீரர்கள் ஆகியோர் உள்ள டங்குவதாக இராணுவ பேச் சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்ததாக அந்த செய்தியில் கூறப்பட் டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை வழங் கப்பட்ட பொதுமன்னிப்பு காலத் தைப் பயன்படுத்தி சட்டரீதி யாக விலகிச்செல்லாத முப் படை வீரர்களுக்கு எதிராக முப்படையினர் மற்றும் பொலி ஸாரினால் தொடர்ந்தும் சட்டநடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, அனுமதி யின்றி நீண்டகால விடுமுறை யிலிருந்து கடமைக்கு சமூக மளிக்காத முப்படை வீரர் கள், சட்டரீதியாக கடமையி லிருந்து விலகுவதற்காக கடந்த ஆண்டு இரு முறை பொதுமன்னிப்புக்காலம் அறி விக்கப்பட்டு கால அவகாசம் வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட பொதுமன் னிப்பு காலத்தைப் பயன் படுத்தி 34 அதிகாரிகள் மற் றும் 8843 படைவீரர்கள் சட்டரீதியாக விலகிச் சென் றுள்ளதாக அரச தகவல் திணைக்களம் வெளியிட் டுள்ள செய்தியில் கூறப்பட் டுள்ளது. (இ-7)

## ஜனாதிபதி ட்ரம்பிற்காக தயாராகியுள்ள கார்; குண்டுகளோ விஷ வாயுவோ பாதிக்காதாம்!





(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பயன்படுத்து வதற்காக பிரத்தியேக பாது காப்பு அம்சங்களைக் கொண்ட லிமோசின் ரக கார் தயாராகி யுள்ளது. இந்த கார் இம்மாத இறுதியில் வெள்ளை மாளி கைக்கு வரும் என எதிர்பார்க் கப்படுகிறது.

பீஸ்ட் என அழைக்கப் படும் இந்தக் காரில் எதிரிக ளின் குண்டுத் தாக்குதலில் இருந்து காப்பாற்றும் வடிவ மைப்பு, விபத்தில் இருந்து காப்பாற்றும் தொழில்நுட் பங்கள் என பல பிரமிக்க வைக்கும் அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

காரின் மொத்த எடை 8 தொன்னாகும். 8 அங்குல தடி மன் கொண்ட ஸ்டீல் கதவு கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் எடை போயிங் 757 விமான எடைக்கு சமமாகும்.

துப்பாக்கிக் குண்டுகள் மற்றும் வெடிகுண்டுகளால் துளைக்கப்பட்டாலும் அவை தொடர்ந்து இயங்கும் தன்மை கொண்டவை.

இதுமட்டுமல்லாது, இரசா யனத் தாக்குதல் நடத்தப் பட்டால் மூச்சுத்திணறல் ஏற்படாதவாறு ஒட்சிசன் வழங்கும் வசதியும் இந்த காரில் உள்ளது.

ட்ரம்ப் பயன்படுத்தவுள்ள இந்தக் காரின் விலை 1.2 மில்லியன் பவுண்ட்களாகும். ரொக்கெட் தாக்குதலால் கூட இந்தக் காரை ஒன்றும் செய்ய முடியாது என்பது பிரமிக்க வைப்பதாக உள்ளது.

★ ஜனாதிபதி மற்றும் 4 பேர் வரை இந்த காரில் பய ணம் செய்யலாம். இடையே கண்ணாடி தடுப்புகள் இருக் கும். இதன் அவசரகால பொத் தான்கள் அனைத்தும் ஜனா திபதி இருக்கை அருகே இருக்கும். அவரவர் அருகே ஒட்சிசன் பெறுவதற்கான பொத்தான்கள் உள்ளன.

★ கதவுகள் மூடப்பட்ட வுடன் இரசாயனத் தாக்குத லால் கூட பாதிக்கப்படாத வகையில் 100 சதவீதம் பாதுகாப்பானதாகும்.

★ ஆபத்துக்காலத்தில் மிக வேகமாகவும், 180 டிகிரி சுழன்று தப்பிக்கும் வகை யிலும் வடிவமைக்கப்பட் டுள்ள இந்தக் காரை பயிற்சி பெற்ற இரகசிய பாதுகாப் புப்படை சாரதி இயக்குவார்.

★ ஐந்து அடுக்குகள் கொண்ட கண்ணாடி மற்றும் பாலிகார்பனேட்டால் ஆன புல்லட் ப்ரூஃப் ஜன்னல்கள், சாரதி அருகில் உள்ள ஜன் னல் மட்டும் 3 அங்குலம் கீழே இறங்கும்.

★ சாரதி கட்டுப்பாட்டு அறையில் மட்டும் தகவல் தொடர்பு மற்றும் ஜிபிஎஸ் டிராக்கிங் சிஸ்டம் இடம் பெற்றிருக்கும்.

★ தீயணைப்பு கருவிகள் உள்ளிட்ட சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

★ ஜனாதிபதியின் இருக் கையில், துணை ஜனாதிபதி மற்றும் பென்டகனுடன் நேர டியாகத் தொடர்பு கொள்ளும் வகையில் செய்மதி தொலை பேசி வசதி உள்ளது.

★ டீசல் டாங்க் வெடித்து சிதறாமல் இருக்கும் வகை யில், தனித்துவமான நுரை உடைய தீயணைப்புக் கருவி பொருத்தப்படும்.

★ இராணுவ தரம் கொண்ட சுமார் 5 இன்ச் தடிமன், இரட்டை கடினத் தன்மை கொண்ட ஸ்டீல், அலுமினியம் மற்றும் டைட்டா னியத்தால் ஆனது.

★ துப்பாக்கிகள், கண் ணீர்ப்புகை குண்டுகள், ஆபத்து காலத்தில் தேவைப் பட்டால் உடனடியாக பயன் படுத்தும் வகையில் இரத்தம் அடங்கிய பைகள்.

★ வெடிகுண்டு தாக்கு தலை எதிர்கொள்ளும் வலு வூட்டப்பட்ட ஸ்டீல் பிளேட் பாதுகாப்பு.

★ தோட்டாக்கள் துளைத் தால் பாதிக்கப்படாத டயர். டயர் சிதறடிக்கப்பட்டாலும், உலோக ரிம்முடன் இயங் கும் சக்கரம்.

★ கண்ணீர்ப்புகை குண்டு வீசும் கருவி

★ இரவு நேரத்திலும் தெளிவாக தெரியும் வகை யில் இயங்கும் கமரா என்பன உள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் 7.75 ஏக்கர் காணி முதற்கட்டமாக பகுதியளவில் விடுவிப்பு

## காணிகளுக்குள் சென்ற மக்கள் யுத்தத்தில் பறிகொடுத்த உறவுகளை நினைத்து கதறி அழுதனர்





முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பில் வாக்குறுதி வழங்கப்பட்டதற்கு அமைவாக புதுக்குடியிருப்பில் இராணுவத்தினர் வசமிருந்த 49 குடும்பங்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியில் 7.75 ஏக்கர் காணி முதற்கட்டமாக பகுதியளவில் நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் விடுவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் புதுக் குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் காணிகளை இராணுவத்திடமிருந்து பொறுப்பேற்று பொதுமக்கள் சென்று பார்வையிடுவதற்கும் குடியேறுவதற்கும் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளனர்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி இரண்டு வாரங்களுக்குள் பொதுமக்களின் 7.75 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், வாக்குறுதியை ஏற்றுக் கொள்ளாத மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வாயில் முன்பாக தமது போராட்டத்தை கைவிடாது தொடர்ந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குச் சென்ற மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் 7.75 ஏக்கர் காணிகளை மக்களிடம் கையளித்துள்ளார்.

இந்த நிலையில் காணிகளுக்குள் சென்ற மக்கள் யுத்தத்தில் பறிகொடுத்த உறவுகளைநினைத்துகதறிஅழுதனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பின் மையப் பகுதியுள்ள 49 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் புதுக் குடியிருப்பில் 682 ஆவது படைப்பிரிவினால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்கள் 29 பேரினுடைய 7.75 ஏக்கர் காணி 2 வாரத்தில் விடுவிக்கப்படும் என்றும் மீதமுள்ள 29 பேரின் 10 ஏக்கர் காணி இராணுவ முகாமில் அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றிய பின்னர் மூன்று மாதத்திற்குள் விடுவிக்கப்படும் என்றும் பொன்னம்பலம் வைத்தியசாலைக் காணி விடுவிப்பதற்கு 6 மாத காலம் தேவைப்படுவதாகவும் இதன்படி போராட்டத்தைக் கைவிடுமாறும் வலியுறுத்தப்பட்டது.

எனினும் புதுக்குடியிருப்பு மக்கள் உடன்படாத நிலையில், 7.75 ஏக்கர் காணிக்குள் தங்களை விடும்வரை போராட்டம் தொடரும் என மக்கள் தெரிவித்திருந்த நிலையில் வாக்குறுதிக்கு அமைவாக 7.75 ஏக்கர் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் காணிகள் விடுவிக்கப்பட்டதையடுத்து மக்கள் தமது போராட்டத்தை கைவிட்டுள்ளனர். இந்த காணிகளின் கையளிப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281-15)

## ‘காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு’

## சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பிற்கு ஆதரவாக ஈ.பி.ஆர்.எல்.எவ்.வவுனியாவில் நேற்றுப் பேரணி






தாயகத்தில் கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியறியும் சங்கம்வவுனியாவில் ஏற்பாடு செய்துள்ள சுழற்சி முறையிலான உணவுதவிர்ப்பு போராட்டம் நேற்று 9 ஆவது நாளாகவும்முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்திற்கு ஆதரவாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் நேற்று வவுனியாவில் பேரணியொன்றை நடத்தியிருந்தனர்.

வவுனியா புகையிரத நிலையத்திற்கு முன்பாக இருந்து ஆரம்பமான இப்பேரணி புகையிரத நிலைய வீதி வழியாக நகர்ந்து கடை வீதியை சென்றடைந்து ஹொரவப் பொத்தானை வீதி வழியாக ஏ-9 வீதியில் இடம்பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது உணவுத்தவிர்ப்பு போராட்ட தளத்தை அடைந்திருந்தது.

சுமார் 300 பேர் வரையில் கலந்து கொண்ட இப்பேரணியில் “எமது பிள்ளைகள் எங்கே, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு. சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய். எங்கே எங்கே எமது உறவுகள் எங்கே. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்ற உண்மையை சொல். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு” போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்நிலையில் ஒன்பதுநாளாகவும் சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் தளத்தில் பேரணி அடைந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கதறி அழுது தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை பேரணியின் இறுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ்பிரேமச் சந்திரன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரட்ணம் அதிபேர் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தனர் (2-250)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்திற்கு ஆதரவாக கிளிநொச்சி நகர் பொது அமைப்புக்கள் கவனயீர்ப்பு

### ஜனாதிபதி, முதலமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோருக்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன





கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று சனிக்கிழமை கிளிநொச்சி நகர் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து கவனயீர்ப்பு பேரணி ஒன்றை நடத்தினர்.

கிளிநொச்சிநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் , மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூகநிலையம் என்பன ஒன்றிணைந்து நேற்று சனிக்கிழமை காலை கிளிநொச்சி நகர் சித்திவிநாயகர் ஆலய முன்றலிலிருந்து பேரணியாக கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை சென்று அங்கு ஜனாதிபதிக்கான மகஜரை மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலனிடம் கையளித்தனர்.

தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் எதிர்க் கட்சி தலைவர் ஆகியோருக்கான மகஜர்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையிடம் கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலகத்திலிருந்து ஏ-9 வீதி ஊடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்று வருகின்ற கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலுக்குச் சென்று அவர்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தீர்வு, அரசியல் கைதிகளின் விரைவான விடுதலை போன்றவற்றை வலியுறுத்தியே கிளிநொச்சி நகர் பொது அமைப்புகள் இந்த கவனயீர்ப்பு பேரணியை மேற்கொண்டிருந்தனர். (2-312-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணப் பிராக்கில தாலி கட்ட மறந்து போனானாம். – தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குறைகேட்க வந்தவர் கேளாமல் போனதேனோ!

ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள் என்ற திட்டத்தின் கீழ் குறைகேள் அலுவலகத்தை திறந்து வைக்க வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காணாமல்போனவர்களின் உறவினர்களைச் சந்திக்காமல் அவர்களின் துன்பத்தைக் கேட்காமல் சென்றமை மிகுந்த வேதனை தருவதாகும்.

குறைகேள் அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்காக காணாமல்போனவர்களின் உறவுகளும் வேலையற்ற பட்டதாரிகளும் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அண்மையாக இருக்கக்கூடிய வட மாகாண ஆளுநரின் அலுவலகம் முன்பாக காத்திருந்தனர்.

மேற்படி இருதரப்பினரும் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதாக உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் எதுவும் நடக்கவில்லை.

காணாமல்போன தங்கள் பிள்ளைகள் எங்கே? அவர்களுக்கு நடந்தது என்ன? எங்கள் பிள்ளைகளைத் தேடித் தாருங்கள் என்று அழுது புலம்பி மண்ணில் விழுந்து தலையில் அடித்து அழுகுரல் எழுப்பிய தாய்மாரை ஒரு ஐந்து நிமிடமேனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்திருக்க வேண்டும்.

அவருடைய ஆட்சியில் காணாமல்போதல் நடக்கவில்லையாயினும் தற்போதைய ஆட்சி அவருடையதாகையால் பொறுப்புக் கூறுதல் என்பதிலிருந்து அவர் விலக முடியாதென்பது மறுதலிப்பற்ற உண்மை.

நல்லாட்சி ஏற்பட்டது. எனவே இனி தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே சர்வதேச நாடுகள் இலங்கை மீதான அழுத்தத்தை ஒத்தி வைத்தன.

ஆனால் நல்லாட்சியும் முன்னைய கொடும் ஆட்சியும் பெயரால் வேறுபட்டதாயினும் செயலால் ஒன்றென்பது போல நடந்து கொள்வது தர்மம் அன்று.

வன்னி பெரு நிலப்பரப்பில் நடந்த யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் பின்னருமாக தமிழ் இளைஞர்கள் பலர் காணாமல்போயுள்ளனர்.

இலங்கை இன விவகாரத்தில் காணாமல் போனவர்களின் விவகாரம் சாதாரணமானதல்ல.

தங்கள் பிள்ளைகள் காணாமல்போனதால் எத்தனையோ தாய்மார் மனம் பேதலித்தவர்களாக – வாழ்க்கை வெறுத்தவர்களாக ஆகிவிட்டனர்.

இவர்களின் துயரம் சாதாரணமானதல்ல. எனவே இதற்கு ஒரு முடிவு கட்டப்பட வேண்டும். இது விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியிருக்க வேண்டும். எனினும் அது நடக்கவில்லை. இருந்தும் ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள் என்ற செயற்றிட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்க வந்த ஜனாதிபதி மைத்திரியிடம் தங்கள் மனக்குறையை – பெரும் குறையை ஜனாதிபதியிடம் தெரிவிக்கக் காத்திருந்தவர்களைச் சந்திக்காமல் செல்வதென்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

அவ்வாறு குறை கேட்காமல் ஜனாதிபதி சென்றார் என்றால் அவரால் திறந்து வைக்கப்பட்ட அலுவலகத்தால் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படமாட்டாது என்பதே உண்மை.

ஆக, இதோ! குறைகேள் அலுவலகத்தை திறந்து வைத்துள்ளோம். அதில் மக்கள் தங்கள் குறைகளைப் பதிவு செய்து தீர்வு காண முடியும் என்றவாறான ஒரு தகவலை வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்துகின்ற ஏற்பாடே இது என்று கூறிக்கொள்ளலாம்.

### குற்றப்பத்திரிகை கொண்டு வந்து

# முப்படையினரை விசாரிக்க நான் தயாராக இல்லை

## ஜனாதிபதி யாழில் உறுதி

வெளிநாட்டுத் தொடர்புகளின் அடிப்படையில் செயற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறுவதுபோல அரசாங்கத்தை நடத்துவதற்கோ அல்லது முப்படையினர் மீது குற்றப் பத்திரிகைகளை கொண்டு வந்து விசாரணை செய்வதற்கோ தான் தயாராக இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் பலாலி விமானப் படை முகாமில் அவதானிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் பின்னர் முப்படையினரையும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சந்தித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு வலியுறுத்தினார்.

வெளிநாட்டு நீதிபதி களை அழைத்து எமது இராணுவ வீரர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென கடந்த காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த ஆலோசனையை தான் முற்றாக நிராகரித்ததாக தெரிவித்த ஜனாதிபதி, தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரின் பாதுகாப்பு மற்றும் கௌவரத்திற்காக தனது பதவிக்காலத்தில் பொறுப்புடன் செயற்படுவதாக தெரிவித்தார்.

நிதி நோக்கோடு செயற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும், தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முற்படும் எதிர்த்தரப்பு அரசியல் சக்திகளும் எவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோதும் நாட்டின் படையினரின் பிரதான பாதுகாவலன் தானே என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி படையினரின் கௌவரத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான எந்தவொரு செயற்பாட்டிற்கும் தனது பதவிக் காலத்தில் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

பாதுகாப்பு படையினருக்கு புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சி வாய்ப்புக்களையும், வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொடுத்து எமது முப்படையினரை உலகில் தலைசிறந்த படையினராக முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தனது பதவிக் காலத்தின்போது அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, இராணுவத்தினரின் சுகதுக்கங்களை விசாரித்து அவர்களுடன் சுமுகமாக கலந்துரையாடியதுடன், யாழ்ப்பாணத்தில் சேவை புரிந்து ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

ஜனாதிபதியின் வருகையை குறிக்கு முகமாக பாதுகாப்பு படை தலைமையகத்தில் நாக மரக்கன்று நாட்டி வைக்கப்பட்டது.

அதன் பின்னர் பலாலி விமானப் படை முகாமிற்கு வருகைதந்த ஜனாதிபதி அங்கும் இராணுவத்தினருடன் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், அவர்களது பிரச்சினைகள் குறித்து விசாரித்தார்.

அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, துமிந்த திசாநாயக்க உள்ளிட்டோரும் பாதுகாப்பு படைகளின் பிரதானி உள்ளிட்ட முப்படைகளின் தளபதிகளும்பொலிஸ்மா அதிபர் மற்றும் வட மாகாண கட்டளைதளபதிமகேஷ்சேனாநாயக்க உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந் நிகழ்வில் பங்குபற்றினர். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 06.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, அக்கரை, மயிலியதனை, சிதம்பரா வடக்கு, தெல்லிப்பழை, மாதனை, தெல்லிப்பழை சந்தை வீதி, தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வீதி, ஆஸ்பத்திரி வீதியில் காரைநகர் வீதி சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி சந்தி வரை, சீனிவாசகம் வீதி, சிவன்பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ் வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச்சந்தி வரை, சப்பல் வீதி, யாழ் 1ம், 2ம், 3ம், 4ம் குறுக்குத் தெருக்கள் வேம்படி வீதி சந்தி வரை, பிரதான வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதாகபே வரை, பொற்பதி, கோண்டாவில் வோட்டர்வேர்க்ஸ் கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம் கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, இராணுவ முகாம், கோப் பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ். சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், யாழ்.பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரப் பிரதேசம், சூசைப்பிள்ளையார் குளம், மில் றோட், 1ஆம் குறுக்குத் தெரு, 2ம் குறுக்குத் தெரு, ஓவியா விடுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சாஸ்திரங்கள்

✦ வாமன அவதாரத்தில் ஸ்ரீமத் நாராயண மூர்த்திக்கு மூன்றடி மண் கொடுக்கும்படி மகாபலியானவன் பெருமாள் கையில் தாரை வார்க்கும்போது சுக்ரன் வண்டு உருவம் கொண்டு கமண்டல நீரை விழாமல் தடுக்க, தர்ப்பையினால் பகவான் துவாரத்தைக் குத்த சுக்ரனுக்கு கண் தெரியாமல் குருடனாகிப் போனான். இந்தத் தோஷம் நீங்க ஸ்ரீரங்கத்தில் ஒரு வில்வ மரத்தை வைத்துப் பயிராக்கி அதன் கீழேயிருந்து வெகுகாலம் சுக்ரன் தபசு பண்ணி தான் செய்த பாவம் போக்கிக் கொண்டார்.

-ஸ்ரீரங்க மகாத்மியம்

✦ காலையில் வீட்டில் பின்புறக் கதவை முதலில் திறந்து ஒரு நாழிகை (24 நிமிடம்) கழித்தே முன்புறக் கதவைத் திறக்கவேண்டும். இதனால் தீய சக்திகள் பின்புற வாசல் வழியே வெளியேறிவிடும். அதன் பின்னர் முன்புறவாசல் வழியே நல்ல சக்திகள் நுழையும். மாலையில் வீட்டின் முன்புற வாசலைத் திறந்து வைத்து பின்புற வாசலை மூடிவிட வேண்டும்.

-ஸ்ரீகாரணம்

✦ திருமணத்தின் மூலமாகப் பெண்ணைப் பெற்றவர்கள் தன்னை விட்டுப் பெண் பிரிகின்றாளோ என்று நினைத்து கண் கலங்குவதோ, கண்ணீர் விடுவதோ உண்டு. கேட்டால் ஆனந்தக் கண்ணீர் என்பார்கள். மங்கல நிகழ்ச்சி நடைபெறும் போது, அமங்கலமான நிகழ்ச்சியாக ஆக்குவது போலக் கண்ணீர் விடுவது தோஷமாகும். ஆகையால் இந்தத் தோஷம் நிவர்த்தி யடைய "ஜீவாகும் ருதந்தி" என்று ஆரம்பிக்கும் மந் திரத்தைக் கூறி நீரால் புரோக்ஷணம் செய்ய வேண்டும்.

-விவாக மந்திரங்கள்

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

### திருநீறு தயாரிப்பது எப்படி?

கன்று ஈனாத தரமான பசும் சாணத்தை எடுத்து கொள்ளுங்கள். அதை அறுகம்புல்லோடு கலந்து சிறிய சிறிய உருண்டைகளாக்கி வெயிலில் சில நாட்கள் நன்றாக உலர விடுங்கள்.




சாணம் நன்றாக காய்ந்த பிறகு உலர்ந்த அரச மரக்குச்சி எடுத்து நெய் விட்டு நெருப்பு மூட்டுங்கள். அந்த நெருப்பில் சாண உருண்டைகளை பஸ்பமாகும் படி எரியவிடுங்கள். எரிந்து தணிந்த பிறகு கிடைக்கும் சாம்பலை வெள்ளை கதர் துணியில் போட்டு சலித்து பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

அப்படிப் பத்திரப்படுத்தப்பட்ட பஸ்பத்தை சிவபெருமான் திருவுருவப் படத்திற்கோ லிங்க திருமேனிக்கோ நமசிவாய மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்யுங்கள். இப்போது நீங்கள் விரும்பிய சக்தி மிக்க புனிதமான திருநீறு தயாராகி விட்டது. இதைப் பக்தி பூர்வமாக தினசரி அணிந்து வாருங்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி ரணவீம றோயலை வென்றது தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற 19 வயது துடுப்பாட்டப் போட்டியின் இரண்டாம் சுற்றுப் போட்டியில் கண்டி ரணவீம றோயல் கல்லூரியை மகாஜனாக் கல்லூரி 4 விக்கெட்டுக்களால் வென்றது.

இப்போட்டி மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன் கிழமை அன்று நடைபெற்றது.

50 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ரணவீம றோயல் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடுவதென தீர்மானித்தது.

இதற்கமைய 39.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எஸ்.ஜெகன் 38, மதீச பத்திரன 26, எஸ்.றசான் 20 ஓட்டங்களைப் பெற்றனர். மகாஜனா சார்பில் பந்துவீச்சில் ஜசிந்தன் 4, தினேஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த் தினர். பதிலளித்து துடுப்பெடுத்தாடிய மகாஜனா 31.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வாகை சூடியது. துடுப்பாட்டத்தில் தயுஸ்ரன் 67, பிரணவன் 31, சர்மிலன் 20, பகீரதன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். ரணவீம சார்பில் பந்துவீச்சில் சகான் குணவர்தன 3விக்கெட்டுக்களை சாய்த்தார்.(க)

# சமநிலை தவிர்ப்பின் மூலம் இறுதிக்கு தெரிவாகியது பிளாக் ஹொக்ஸ் அணி



இமையாணன் மத்தியின் சொக்கர் லீக் உதைபந்தாட்ட போட்டிகளின் "பிளே ஓப்" போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அயன் ஸ்ரார் அணியை எதிர்த்து பிளாக் ஹொக்ஸ் அணி மோதியது.

அயன் ஸ்ரார் அணிக்கும் பிளாக் ஹொக்ஸ் ஆரம்பத்தில் செந்தாளனால் அருமையாக செலுத்தப்பட்ட பந்தை ஆதித்தன் தலையால் இடித்து கோலாக்க அதற்கு பதிலடியாக அயன் ஸ்ரார் வீரன் சாரு அதிரடி கோலைப்போட ஆட்டம் சூடு கண்டது. போட்டி முடிவில் 01:01 சமநிலை பெற சமநிலை தவிர்ப்பில் 04:05 என்ற அடிப்படையில் பிளாக் ஹொக்ஸ் வெற்றி பெற்று இறுதிக்குத் தெரிவாகியது.

இதில் ஆட்டநாயகனாக பிளாக் ஹொக்ஸ் வீரன் சித்தார்தன் தெரிவானார். (க)

# அண்ணா ஸ்ராரை வீழ்த்தி பாடும்மீன் அபார வெற்றி



உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில்கடந்தவியாழன் அன்று உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.அபாரமாக ஆடிய குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் அராலி அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை (10-0)என்ற கோல் கணக்கில் வெற்றி யீட்டியது. போட்டியில் ஆட்ட நாயகனாக விசோத் தெரிவு செய்யப்பட்டார். (க)

# பிரதேச செயலக தடகளம் சென்.மேரிஸ் சம்பியன்



யாழ். பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி சம்பியனாகியது.(க)



பிரதேச செயலக விளையாட்டு விழா 2017 இன் ஒரு அங்கமான பட்மின்டன் போட்டிகள் கடந்த வியாழன் அன்று நடைபெற்றது.

இதில் வல்வை அணி 2 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டது. வெற்றி பெற்ற அணியை படத்தில் காணலாம். (க)

# வல்வை வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## கொலின்ஸ்,ஆதிசக்தி வெற்றி



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த ஆட்டத்தின் முடிவுகள்.

முதல் போட்டியில் நவசக்தி அணியை எதிர்த்து கொலின்ஸ் - A அணி மோதியது. இதில்2:1 என்ற கோல்கணக்கில் கொலின்ஸ் -A அணி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் ஆதிசக்தி -B அணியை எதிர்த்து கரணவாய் மத்தி -A அணி மோதியது. இப்போட்டியில் 5:0 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி -B அணி வெற்றியீட்டியது.

பெரும் மழையையும் வீரர்கள் பொருட்படுத்தாது சிறப்பாக தொடர்ந்து ஆட்டத்தை ஆடி முடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்' அலுவலகம் யாழில் திறப்பு



(படங்கள்::- பொ.சோபிகா)

தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் ஒன்றான "ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" என்ற பிராந்திய அலுவலகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்களின் பிரச்சினைகளை நேரடியாக தீர்த்து வைப்பதற்கென குறித்த அலுவலகம் ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கவுள்ளது.


அந்த வகையில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் "ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" என்ற பெயரில் இந்த அலுவலகம் இயங்கவுள்ளது. இங்கு 2 அதிகாரிகள் கடமையாற்றவுள்ளனர். அவர்கள் மும்மொழியிலும் கலந்துரையாடுவார்கள். வாரத்தில் ஒரு நாள் நேரடிச் சந்திப்பும் ஏனைய நாட்கள் முறைப்பாடுகளை எழுத்துமூலம் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளும் இடம் பெறும்.

அத்துடன் தொழில்நுட்ப ரீதியில் மென்பொருள் செயற்பாடாக இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய மென்பொருளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதை தொலைபேசியில் தரவிறக்கம் செய்து எந்த நேரமும் முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். முறைப்பாடுகள் கிடைத்து 3 நாட்களில் குறுந்தகவல் மூலம் குறித்த முறைப்பாட்டாளர் நடவடிக்கை எந்த அதிகாரியால் மேற்கொள்ளப்படுகிறது என்ற பதில் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் ராமநாதன், வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, மாகாண சபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், மதத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## இரு பேருந்துகள் நேருக்குநேர் மோதி

# அ'புரத்தில் கோர விபத்து; 38 பேர் வைத்தியசாலையில்



அநுராதபுரம் - பாதெனிய மஹகல்கடவில் நேற்றுக் காலை இடம்பெற்ற கோர விபத்தில் 38 பேர் வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். ஆடைத் தொழிற்சாலை யொன்றிற்கு ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன் றும் இலங்கை போக்குவ ரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 28 பேரும் கல்கமுவ வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த நிலையில், இதில் 8 பேர் மேலதிக சிகிச் சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ரஷ்ய பிரஜைகளை விடுவிக்க வேண்டும்

இலங்கையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய பிரஜைகளை விடுதலை செய்வதற்கு மாலைதீவு மற்றும் இலங்கையில் உள்ள ரஷ்ய கூட்டமைப்பு தூதரகம் முயற்சித்து வருகின்றது. ஒன்பது ரஷ்யப்பிரஜைகள் கைது செய்யப்பட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என Sputnik நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த ரஷ்யர்கள், இலங்கையின் குடிவரவு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ரஷ்யர்களுள் மூவர், சொந்த வணிகம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்றும், ஒருவர் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார் என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)







**பணம், காசு, துட்டு, மணி, மணி**

காட்போட், பழைய புத்தகங்கள், கொப்பிகள், Papers, Files, waste காகிதங்கள், Press வெட்டுத்துண்டுகள் காசு கொடுத்து வாங்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 0771365153**



**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: செவ் 7 இல்
தகைமை/தொழில்:பட்டதாரி
லண்டன் NOT PR
தொ.இ: B/7036

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 21 செவ் 1 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:BA, MA, /அரச தொழில்
தொ.இ: B/7037

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: B/7038

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 34 சூரிசெவ் 7 இல்
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/7039

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 32
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA Reading
தொ.இ: G/7042

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 28 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: G/7043

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BMS/ஆசிரியர்
தொ.இ: G/7046

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 36செவ் 2 இல்
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/7054

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்

**Banking Courses**

**IABF & DABF**

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits

(சி-7693)

கணக்காளர் கற்கை நெறிகள்

**Chartered courses**

Executive Level & Business level

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. A/L 3 Passes

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

## V2 TRAVELS

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி




அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152

**சி.தேவராசா**

கரணவாய், கரவெட்டி

இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார் (சி-7707)

நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல

வாய்ப்புக்களுக்கு: **0768226240**

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு

**UK-550*/=Kg**

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(சி-7681)

## பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு

1. Computer Designer (CorelDRAW, Photoshop) தேவை

KINGS ELECTRONICS (PVT) LTD
NO. 12, POINT PETRO ROAD, JAFFNA.
(C- 7728) 0214546699

## வாடகைக்கு / குத்தகைக்கு

மானிப்பாயில் 10 பரப்புக்காணி வாடகைக்கு / குத்தகைக்கு உண்டு. யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0756156979
0771772359

(7991)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் நெல்லியடியில்

**SLAS (open/Limited)**
சனி-8.30am-1.30pm
ஞாயிறு-8.30am-1.30pm

**பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை**
சனி-8.30am-1.30pm
ஞாயிறு-8.30am-1.30pm

**முகாமைத்துவ உதவியாளர் தரம் III (PMA)**
ஞாயிறு (கிழமை தோறும்)
08.30am-01.00pm

**ஆசிரியர் சேவை/ வங்கியாளர் /LAW**
ஞாயிறு-8.30am-1.30pm

**கணக்காளர் சேவை**
சனி-8.30am-1.30pm
ஞாயிறு-8.30am-1.30pm

தொடர்புகளுக்கு
0778760992
0773443962
உயர் கல்லூரி
No.81, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
(நெல்லியடி சந்திக்கு அருகாமை)

(சி-7734)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

**070 330 5500**

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

உங்கள் அனைத்து விதமான பொதிகள் மற்றும் கடிதங்களை நம்பிக்கையுடனும், துரிதமாகவும், குறைந்தளவு கட்டணங்களுடன் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட நாடுங்கள். (சி-7704)

யாழ்ப்பாணம் | மீசாலை | திருகோணமலை | மல்லாவி
முல்லைத்தீவு | கிளிநொச்சி | கனகராயன்குளம் | வவுனியா

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(சி-7723)

CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு:-0716501650

(சி-7735)

## காணி வீடு விற்பனை

1. K.K.S, வீதி கோண்டாவிலில் 10 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
2. இராசாவின் தோட்ட வீதியில் 05 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
3. ஆடியபாதம் வீதி அம்மன் வீதியில் 1 1/2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
0771671174, 0777286061

(8117)

ACCA

K-AIMS BUSINESS SCHOOL

# விண்ணப்பம் கோரல்

(சி-7724)

ACCA (Association of Chartered Certified Accountant)

March **மாத புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

தொழில்சார் கணக்கியல் கற்கை நெறி ஒன்றை
மிக குறைந்த செலவில் பூர்த்தி செய்திட
இன்றே இணையுங்கள்

**புதிய பிரிவுகள்**

**8th March 2017 புதன் கிழமை 10.00 மணிக்கு ஆரம்பம்**

**Free 3 Months English diploma**

K-AIMS BUSINESS SCHOOL

T.P - 0768 268 206
0773 722 104

No 59 , Point pedro road, Ariyakulam , Jaffna

# KINGS ELECTRONICS(PVT) LTD

## கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்

SPECIAL OFFERS

LED TV'S

| | |
|---|---|
| Samsung 32" | -29900 |
| Hisence 32" | -24500 |
| Sony 40" | -64900 |
| Hisence 24" | -17900 |
| Tcl 32" | -21900 |
| Panasonic 32" | -28500 |




அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்



INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=

SAMSUNG R19 REFRIGERATOR
34900/=




SONY DVD Player




ONE YEAR WARRANTY
PRICE
RS 5,250/=

(சி-7727)

Furnitures
Toys
Electronics
Baby Care

Glass TV Stand
9200/=



WEB: WWW.MYKINGS.lk

021-4546699
Facebook/kingsjaffna

12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

# வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவைகள்
- உணவுப் பொருட்கள், உடைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.

ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்

**11kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgற்கான விசேட சலுகைக் கட்டணம்**

லண்டன் 500/-, ஜேர்மன் 600/-, பிரான்ஸ் 650/-, சுவிஸ் 800/-, கனடா 950/- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்



**திருமுருகன் கொம்நெற் (pvt) Ltd**

271A, K.K.S, வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 7835, 077 755 4528

கிளைகள்
No. 46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
No. 18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
57, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி.

(8120)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 107

வள்ளுவர் ஆண்டு 2048 05.03.2017 தொலைபேசி : 021 222 3378



# தீருமா இத்துயர்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தி யார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஈழத்தின் தலை சிறந்த புரட்சிப் பாடகர் எஸ்.ஜி. சாந்தனின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம் என வாத்தியார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராகவும் சிறந்த சமய, சமூக சேவையாளராகவும் விளங்கிய கைலாயபிள்ளை அவர்களின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இவ்விருவரின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதுடன் ஆலடி மாநாட்டின் முதல் அமர்வு நிறைவு செய்யப்பட்டது.

ஆலடி மாநாடு என்பது அந்த ஊரில இருக்கிற வயது வந்தவர்கள் கூடியிருந்து கதைக்கிற ஓர் இடத்தைக் குறிப்பதாக இருந்தாலும் ஒரு மாநாடு போலத் தான் கதை பேச்சுகளும் செயற்பாடுகளும் இருக்கும்.

முக்கிய பிரமுகர்கள் யாரேனும் அமரத்துவமடைந்தால் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஆலடியில் நிறைவேற்றப்படுவது வழமை. அதனைத் தொடர்ந்துதான் பொதுப் பிரச்சினைகள் ஆராயப்படும்.

இந்த வகையில் ஆலடி மாநாட்டில் பாடகர் எஸ்.ஜி.சாந்தனுக்கும் சமூக சேவையாளர் கைலாயபிள்ளை அவர்களுக்கும் இரு நிமிட அஞ்சலி செலுத்தி அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பண்டிதர் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:**எங்கட கேப்பாப்பிலவு- பிலவுக் குடியிருப்பு மக்களின்ர தொடர் போராட்டம் மகத்தான வெற்றி கண்டுள்ளது. உண்மையில அந்த மக்களின்ர மன உறுதிக்கு முன்னால எவரும் நின்றுபிடிக்க முடியாதென்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

**விதானையார்:** அது சரி பண்டிதர் ஐயா, பிலவுக் குடியிருப்புக் காணி தொடர்பில தாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்ததால தான் மக்களின்ர காணிகளை விடுவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை சொல்லுமோ.



## வலி. வடக்கிலும் தொடர் போராட்டம் நடத்தினால்...

**பண்டிதர்:** சொன்னாலும் சொல்லுவினம். ஆனால் அவையள் சொல்லக்கூடாது. பிலவுக் குடியிருப்பு மக்கள்தான் அதைச் சொல்ல வேணும்.

**கங்காணி:** பிலவுக்குடியிருப்பு மக்களின்ர போராட்டத்திற்கு பதில் சொல்லா விட்டால் அது பெரிய பிரச்சினையாகிப் போகும். அதால அந்த மக்களின்ர சொந்த நிலங்களை விடுவிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது. இருந்தாலும் உங்கட போராட்டத்திற்காக நாங்கள் உங்கட காணிகளை விடுவிக்கிறம் என்று அரசோ அல்லது படைத்தரப்போ சொன்னால் அது அரசுக்குத் தரக்குறைவாக அமையுமல்லோ.

**மூப்பர்:** அப்ப அதால தான் ஜனாதிபதி மைத்திரியும் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமையும் பிலவுக் குடியிருப்புத் தொடர்பில கதைக்கிற மாதிரியான ஒரு செற்றப்பைச் செய்து போட்டு காணியை விட்ட வியளோ.

**பண்டிதர்:** கோயில் திருவிழாவில, உபயகாரர்களுக்கு தர்ப்பை தரிக்கக் கொடுக்கிறது போல அர்ச்சனை செய்யிறவியளுக்கும் தர்ப்பை கொடுக்கிறதுதானே வழக்கம்.

**வாத்தியார்:** ஐந்து ரூபா ரிக்கற்றுக்கு அர்ச்சனை செய்யிறவியளும் திருவிழா உபயகாரர் போலத் தெரிவினம். சரியா இனம்கண்டு கொள்ள வேணும் எண்டு சொல்லுறியள்.

**பண்டிதர்:** அறிந்தவன் அறியவேணும் அரியாலைப் பனாட்டு எண்ட மாதிரி வாத்தியார் பிடிச்சிட்டார்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா பிலவுக்குடியிருப்பு மக்கள் போல தொடர் போராட்டங்களை முன்னெடுத்தால் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிற எங்கட மக்களின்ர காணிகளை விடுவிக்க முடியாதோ.

**பண்டிதர்:** மூப்பர் ஏன்? விடுவிக்க முடியாது. உதாரணத்திற்கு வலி.வடக்கு மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்தால் சனத்திற்குச் சொந்தமான நிலத்தை விடுவிக்கத்தானே வேணும்.

**மூப்பர்:** அப்ப ஏன் அவ பகுதி மக்கள் இன்னும் போராட்டத்தை ஆரம்பிக்கல்ல.

**விதானையார்:** மூப்பர் வலி.வடக்கு மக்களும் தங்கட சொந்த நிலத்தை மீட்பதற்காக பல போராட்டங்களை நடத்தியிருக்கினம். ஆனால் பிலவுக் குடியிருப்பு மக்கள் போல முப்பது நாட்களுக்கு மேல்... என்பது போன்ற ஒரு தொடர் போராட்டத்தை நடத்தவில்லை.

**சாத்திரியார்:**அப்ப அப்படியொரு போராட்டத்தை வலி.வடக்கு மக்கள் ஆரம்பித்தால் என்ன?

**விதானையார்:** சாத்திரியார் என்ன இருந்தாலும் பூனைக்கு மணி கட்டுறதுக்கு ஒரு ஆள் தேவையல்லோ. அது நடந்தால் தானே மற்றையது நகரும்.

**மூப்பர்:** விதானையார் நீங்கள் சொல்லுறதில உண்மை இருக்கத்தான் செய்யுது. தமிழ்மக்கள் பேரவை வடக்கில நடத்தின எழுக தமிழ் எழுச்சிப் பேரணி மீண்டும் அகிம்சை வழிப்போராட்டத்திற்கு வித்திட்டது எண்டு சொல்லுறது எந்த வகையிலும் மிகைப்படுத்தல் இல்லை.

**கங்காணி:** மூப்பர் நீங்கள் சொல்லுறது உண்மை தான். வடக்கில நடந்தது போல கிழக்கிலும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி வெற்றிகரமாக நடந்திருக்குது.

அந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தமிழ் மக்களின்ர உரிமைக்கான ஒரு அகிம்சை வழிப் போராட்டம்தானே!

**பண்டிதர்:** குறை நினைச்சுப் போடாதீங்கோ. வலி. வடக்கு மக்களின் நிலத்தை மீட்பதற்கான ஒரு தொடர் போராட்டத்தை தமிழ்மக்கள் பேரவை முன்னெடுத்தால் என்ன?

**வாத்தியார்:** கட்டாயம். தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கம். அப்ப அந்த அமைப்பு தமிழ்மக்களின்ர பிரச்சினையை வெளிப்படுத்துறது; பிரச்சினைக்குரிய தீர்வைப் பெறுவதற்குச் சாத்தியமான வழிமுறைகள் பற்றி ஆராய்கிறது; பொருத்தமானவற்றை அமுல்படுத்துவது இவற்றைத்தானே அந்த அமைப்புச் செய்யவேணும். செய்யுது.

**விதானையார்:** கேப்பாப்பிலவு- பிலவுக் குடியிருப்பு மக்களின்ர நில மீட்புப் போராட்டம், படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை மீட்பதற்கான ஒரு சிறந்த வழிமுறை. தொடர் போராட்டமாக நடத்த வேணும். அந்தப் போராட்டத்தில மக்கள் உறுதியாக இருக்க வேணும். அப்படியிருந்தால் பொன்விளையும் எங்கட வலிவடக்கு மண்ணை மீட்டெடுப்பது பெரிய இடைஞ்சல் இல்லைத்தானே.

**கங்காணி:** போராட்டம் நடத்தாமல் எங்கட நாட்டில் எதுவும் நடக்காதென்பது தெரிந்தவிடயம் தானே. ஆகையால் அகிம்சை வழியில போராட வேணும். எங்கட நிலத்தை எங்களுக்குத் தாருங்கள். நாங்கள் குடியிருக்க வேணும் எண்டு கேட்கிறது நியாயமானது.

அந்தக் கோரிக்கை நியாயமானது என்பதால தானே கேப்பாப்பிலவு மக்களின்ர போராட்டத்திற்கு சிங்கள, முஸ்லிம் மக்களும் ஆதரவு கொடுத்தவியள். பௌத்த பிக்கு ஒருவர் போராட்டத்தில நேரடியாகக் கலந்து கொண்டவர்.

ஆகையால தமிழர் தாயகத்தில எங்கெல்லாம் தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் நிலமீட்புப் போர் (பிலவுப் போராட்டம்) ஆரம்பிக்கப்படவேணும். இவ்வாறு கங்காணியார் சொல்ல அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடி யில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால அவகாசம் கோருவது நீதி வழங்க மறுப்பதற்கானது

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

வழமைபோல இக் கூட்டத் தொடரிலும் இலங்கை அரசுக்கு இறுக்க மான முறையில் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

ஆண்டுக்கொரு தடவை கூடி நாம் சொல்லியதை நீ இன்னமும் செய்யவில்லையா? என்று இலங்கை அரச பிரதிநிதிகளிடம் கேட்பதும் அவர்கள் கால அவகாசம் கோருவதும் வழமையான விடயம்.

அந்த வழமை இந்த வருடமும் ஜெனிவாவில் நடந்தேறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இத்னிடையே தமிழினப் பற்றாளர்கள் சிலர் ஒன்றுகூடி இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்க வேண்டாம், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உத்தரவிடுங்கள் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திற்கு மகஜர் அனுப்புவர்.

அந்த மகஜர்கள் வாசிக்கப்படுமா? என்பது கூட சந்தேகமாயினும் இதைவிட வேறு எதைத்தான் நாம் செய்ய முடியும் என்ற அவர்களின் நியாய பூர்வமான கேள்வியோடு ஜெனிவா கூட்டத்தொடரும் முடிந்து போகும்.

இதுவே தமிழ் மக்களின் நிலைமை. இதனிடையே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தால் இலங்கை அரசுக்கு பணிக்கப்பட்ட விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்று கொதிக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்கலாம் என்று கூறியிருப்பது தமிழினத்தின் அரசியல் தலைமை எங்கே நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானது.

2009 ஆம் ஆண்டு வன்னியில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் இன்னமும் விசாரணைகள் நடைபெறாமல் காலம் தாழ்த்தப்படுவது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காமல் செய்வதாகும்.



## இலங்கைக்கு அவகாசம் வழங்கவா ஜெனிவா கூட்டத்தொடர்...

போர்க்குற்றம் நடந்து 8 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் இன்னமும் கால அவகாசம் கேட்பதென்பது குறித்த சம்பவத்தை மறைக்கவும் மறுக்கவும் செய்வதற்கானது என்பதே உண்மை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை என்றால், அதற்குக் கால அவகாசம் கொடுப்பதே ஒரே வழி என்று நினைப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதை குற்றவாளிகளுடன் சேர்ந்து ஐ.நா. சபையும் தடுக்கிறது என்று கூறுவதில் தவறில்லை. கால அவகாசம் எதற்குத் தேவை என்பதும் எதற்காகத் தேவை என்பதும் இங்கு நோக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும்.



யுத்தத்தால் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் இருக்கக்கூடிய மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதில் இலங்கை அரசுக்கு இருக்கக்கூடிய இடையூறு என்ன? தமிழர்களின் குடியிருப்பு நிலங்கள்தான் படையினருக்குத் தேவையாக இருக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இன்னமும் உரிய நடவடிக்கை இல்லை என்றால் அதற்கான நடவடிக்கை என்ன? இது பற்றியெல்லாம் ஐ.நா. சபை இலங்கை அரசிடம் கேள்வி ஏற்படவேண்டுமல்லவா? அதுசரி எங்கள் இனத்தின் அரசியல் தலைமையே இலங்கை அரசுக்குத் கால அவகாசம் கொடுக்கவேண்டும் என்று கூறும்போது ஜெனிவாக்கூட்டத் தொடரில் என்னதான் செய்யமுடியும்.

எது எவ்வாறாயினும் தமிழ்மக்களின் கோரிக்கைகள், அவர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு பாராமுகமாக அல்லது இழுத்தடிப்பதாக இருக்குமாயின் அதன் விளைவு சாதாரணமாக இருக்காது என்பதே உண்மை.

இலங்கையில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியாதவரை சிங்கள மக் களுக்கும் நிம்மதி கிடை யாது என்று அரசியல் தலைவர் ஒருவர் கூறியதை இங்கு நினைவுகூர முடி யும்.

தமிழ்மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதென்பது தமிழ் மக்களுக்குத் தோல்வியாக அமையினும் அது சிங்களவர்களுக்கு நிச்சயம் வெற்றியாக அமையாதென்பதே உண்மை.

தமிழ்மக்களின் மண் மீட்புப் போராட்டத்தை தோற்கடித்து விட்டோம் என்று மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான முன்னைய அரசு கெம்பி எழுந்திருந்தாலும் வென்றவனுக்கே அதிக துன்பம் என்ற புத்தபிரானின் தத்துவம் போன்று போர் வெற்றி என்பது தமிழ்மக்களின் பிரச்சினை தீர்க்கப்படுவதனூடாகவே கிடைக்கக்கூடியது.

இன்றுகாலம் கடத்தலாம். நாளையும் காலம் கடத்தலாம். காலத்தின் கடத்தலூடாக காலமும் ஒரு திட்டம் தீட்டும். அது காலம் கடத்தியவர்களுக்கு பாதகமாகவும் நீதி மறுக்கப்பட்டவர்களுக்குச் சாதகமாகவும் அமையலாம். எதுவும் கூறிக்கொண்டில்லை என்பதே உண்மை.

ஆதலால் காலம் கடத்துவது, கால அவகாசம் வழங்குவது என்பவற்றில் காலத்தைச் செல விடாமல் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் துன்ப துயரங்கள் நீங்கும் படியாக செயற்படுவதே அனைவருக்கும் நன்மை தருவதாகும்.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாப விமோசனம்

ஒரு சமயம் தேவலோகத்தில் தேவர்கள் உற்சாக மிகுதியால் அளவுக்கு மீறி அமிர்தத்தை சுவைத்து மகிழ்ந்தனர்.

எனவே, போதை தலைக்கேறி தாம் என்ன செய்கிறோம் என்பதை மறந்து பூஜைக்குரிய பூங்காவனத்தை நாசம் செய்தனர்.

இச்செய்கையினால் கோபமுற்ற தேவேந்திரன் அவர்களைக் கண்டித்து, "நீங்கள் செய்த இப்பாபச் செயலுக்கு பூலோகத்தில் தேனீக்களாக மாறி அங்கு காட்டிலுள்ள பூச்செடிகளிலிருந்து தேன் சேகரித்து பிழைத்துக் கொள்ளுங்கள். கஷ்டப்பட்டு உழைத்தால் உங்களுக்கு நல்ல புத்தி உண்டாகும்" என சபித்தார்.

தாங்கள் தவறை உணர்ந்த தேவர்கள், "பிரபு! நாங்கள் அறியாமல் செய்த இக்குற்றத்தை மன்னித்து தங்களுக்கு பணிவிடை செய்ய அருள் புரியுங்கள். சாப விமோசனம் அளியுங்கள்!" என்று வேண்டினர்.

"அற்பர்களே! நீங்கள் செய்ததோ மாபெரும் குற்றம்.

கொடுத்த சாபம் கொடுத்ததுதான். அதைத் திரும்பிப் பெற இயலாது. இருப்பினும் இச்சாபத்திலிருந்து விடுதலை பெற ஒரே வழிதான் உள்ளது.

காட்டில் தேன் சேகரிக்க வரும் வேடர்கள் தீப் பந்தத்தோடு தேன் அடையில் வாழும் உங்களைத் தீயால் விரட்டி தேனை தங்கள் சுரைக் குடுக்கையில் சேகரித்துக் கொள்வர்.

ஆனால், எவன் ஒருவன் உங்கள் வேண்டுகோள்படி தீங்கு செய்யாமல் தேனைச் சேகரித்துக் கொண்டு நீங்கள் வாழும் தேன் அடையை கடலில் வீசி எறிகிறானோ அப்போதுதான் நீங்கள் உங்கள் சுய உருவை அடைந்து என்னை அடைவீர்கள்" என்றார் தேவேந்திரன்.

சாபத்தினால் தேவர்கள் தேனீக்களாக மாறி விந்தியமலை சாரல் காட்டில் தேனடையில் வாசம் செய்தனர்.

வழக்கம் போல் தேன் சேகரிக்கும் வேடர்கள் தீப்பந்தத்தில் கொளுத்தி தேனீக்களை விரட்டினர்.

ஒரு தேனீ தன் இனிய குரலில், "அன்பார்ந்த வேடர்களே- எங்களைத் தீ பந்தத்தில் சுடாதீர்கள்.

உங்களுக்கு வேண்டிய தேனைத் தருகிறேன்" என்றது. வேடர் தலைவன் இக்குரலைக் கேட்டு,

"ஏதோ பிரமைபோல் தோன்றுகிறது.

தேனீயாவது பேசுவதாவது!" என்று சிரித்துக் கொண்டே சென்றுவிட்டனர். இது வழக்கமாக நடந்து வந்தது.

துன்பத்திலிருந்து விடுதலை கிடைக்காமல் தேனீக்கள் தவித்தன. கடவுளை நினைத்து வேண்டின.

ஒரு நாள் நல்ல உள்ளம் படைத்த தர்மன் என்ற வேடன் தீப்பந்தத்தோடு வந்தான்.

வழக்கம்போல் அவனைக் கண்ட தேனீ, "அன்பனே! கொஞ்சம் நில்.

நான் சொல்வதைக் கேள். உன்னை செல்வந்தனாக மாற்றுவேன்" என்றது. அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த தர்மன் தான் காண்பது கனவா? அல்லது நினைவா? என்ற குழப்பத்தோடு தேனீயின் வேண்டுகோள்படி தீப்பந்தத்தை எறிந்துவிட்டு அது சொல்வதைக் கேட்க இசைந்தான்.

"நண்பனே! நாங்கள் தேவர்கள். எங்கள் தலைவரின் சாபத்தால் தேனீக்களாக மாறி அல்லல்படுகிறோம். எங்களைக் காப்பாற்ற நீதான் உதவ வேண்டும்.

அதாவது நீ எங்கள் அருகில் வந்து எங்களுக்கு எவ்வித தீங்கும் செய்யாமல் தேனை எடுத்துக் கொண்டு எங்கள் அடையை கடலில் வீசி எறிந்து விடு. இதைச் செய்தால் உன்னை பெரிய செல்வந்தனாக மாற்றுவோம்" என்றது.

"நான் உங்களுக்கு ஒரு தீங்கும் விளைவிக்கமாட்டேன்.

உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்" எனக் கூறி தேன் அடைக்கு அருகில் சென்றதும் சுரைக்குடுக்கையில் தேன் தானாக நிரம்பியது.



உடன் தேன் அடையை எடுத்து கடலில் வீசினான்.

அடுத்த நிமிடமே தேனீக்கள் தேவர்களாக மாறினர்.

"நண்பனே! நீ தினந்தோறும் நாங்கள் வசித்த மரத்தடியில் உன் சுரைக் குடுக்கை வைத்தால் அது நிறைய தேவாமிர்த தேன் நிரம்பும்.

அதை அருந்துபவர்கள் எந்த நோயால் அவதியுற்றாலும் அதிலிருந்து நிவாரணம் பெற்று சுகம் பெறுவார்கள்.

அதனால் நீ மேன்மை அடைவாய்!" எனக் கூறி மறைந்தனர்.

அதன்படி தர்மனும் தினந்தோறும் மரத்திலிருந்து தேனைச் சேகரித்துக் கொண்டு நகரத்தில் பெரிய தனவந்தர்களுக்கு தன் தேவாமிர்த தேனை அளித்து அவர்களை நோயிலிருந்து விடுவித்து சுகம் பெறச் செய்தான்.

இத்தேனைப் பருகியதால் இளமை தோற்றம் கொண்டனர் பலர்.

மக்கள் ஆதரவினால் தர்மன் பெரிய செல்வந்தனாக மாறினான்.

தர்மனின் அருகில் வசித்த அவன் இனத்தைச் சேர்ந்த மார்க்கன் என்ற மற்றொரு வேடன் தர்மனின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமை கொண்டான்.

நானும் தான் தேன் சேகரித்து வருகிறேன்.

ஆனால், தர்மன் கொண்டு வரும் தேன் எப்படி தேவாமிர்தமாகிறது.

இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என சந்தேகம் கொண்டு ஒரு நாள் தர்மன் காட்டிற்கு செல்லும் போது அவனை அறியாமல் மார்க்கனும் அவனைப் பின் தொடர்ந்தான்.

தர்மன் மரத்தடியில் தேன் சேகரித்துச் செல்வதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அதுபோல் தேன் எடுத்து தானும் செல்வந்தனாக மாறலாமென்ற பேராசை அவனை ஆட்கொண்டது.

பொறாமையும், பேராசையும் மார்க்கனை வழித் தவறச் செய்தது.

ஆகவே, யாவரும் அறியாமல் தன் குடுக்கையை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக மரத்தடியை அடைந்தான்.

நற்குணம் கொண்ட தர்மனுக்குத் தான் தேவர்கள் அருள் புரிந்தனரே தவிர பேராசை பிடித்தவர்களுக்கல்ல. அதனால் மார்க்கன் மரத்தடியில் குடுக்கையை வைத்ததும் தேனீக்கள் எங்கிருந்தோ கூட்டமாக வந்து அவனை சூழ்ந்து கொட்டின.

வலி தாங்காமல் ஓட்டம் பிடித்தான் மார்க்கன். அப்போதும் அவனை விட்டபாடில்லை.

"கடவுளே நான் செய்தது தவறுதான். என்னைக் காப்பாற்றுங்கள்!" எனக் கூறினான்.

தேனீக்கள் மறைந்தன.

ஆனால் தேனீக்கள் கொட்டிய வேதனை தாங்காமல் தர்மனின் காலில் விழுந்து பேராசையால் தான் செய்ததைக் கூறி தன்னை மன்னிக்கும்படியும் தன் வேதனையைப் போக்கும்படியும் வேண்டினான்.

நற்குணம் படைத்த தர்மன்,

"நண்பா! நீ செய்த தவறை உணர்ந்து மன்னிப்புக் கோருகிறாய். கவலைப்படாதே!" என்று ஆறுதல் கூறி தன் தேவாமிர்த தேனைக் கொடுத்து பருகச் செய்தான்.

அடுத்த நிமிடமே அவன் வேதனை மறைந்தது.

பிறகு அவனுக்கு நல்வழிகூறி, "பிறருக்கு அன்பு காட்டி உதவி செய்தால் நீ உயர் அடைவாய்.

இந்தப் பணப்பை கொண்டு நேர்மையாய் உன் தொழிலை செய்!" என்று அறிவுரை கூறினான்.

மார்க்கனும் திருந்தி மக்களிடம் பாராட்டுப் பெற்று மேன்மை அடைந்தான்.

**பிள்ளைகளே!**
உலகில் தானாக முன்னேறியவர்கள் யாரும் இல்லை...!
நீ உழைக்கத் தயாராக இருந்தால்...! சிலர் உனக்கு உதவத் தயாராக இருப்பார்கள்...! அதனால் பொறாமை, பேராசையைத் தூக்கி எறி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கேப்பாப்பிலவு போராட்டம் பற்றி?

முன்பே இப்படி அறவழிப் போர் புரிந்திருந்தால் இவ்வளவு...

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஆட்சிமுறை எப்படியுள்ளது?

**சாரு — தர்மபுரம்**

அரசியலுக்கு வரும் நோக்கம் ஏதும் இருக்கோ?

ஐயையோ முதலில் எனக்கு நடிக்கத் தெரியாதே. நடிக்கத் தெரியாமல் நான் அரசியலில் குதித்துவிட்டு தத்தளிக்க வேணுமே! அதைவிட உண்மையான போராட்டங்கள் நடக்குமிடத்தில் பொய் வேடம் போட்டுக் கொண்டு இருக்கவும், கதைக்கவும் தெரியாது. அதைவிட முக்கியமான விடயம் எனக்கு நேரத்துக்கு நேரம் ஒரு கதை கதைக்கத் தெரியாது. இதில் உள்ள டுபாக்கூர் அலுவல்கள் செய்யத் தெரியாததால் நான் அரசியல் தகுதியிலிருந்து வேறுபடுகின்றேன்.

**காயு — பருத்தித்துறை**

வாழ்க்கையில் சாதிக்கணும் என்றால் என்ன செய்யனும்?

வாழ்க்கை என்பது கார் கேம் போல. கார் ஓடிக்கொண்டிருக்கும். இடையிடையே தடைகள் வரும். அந்தத் தடைகளில் முட்டி விடாமல் விலகிச் சென்றால் வெற்றிபெற்று விடலாம். அதுபோல் தான் வாழ்வும். வரும் பிரச்சினைகளில் முட்டி மோதிச் செல்லுவதுதான் வாழ்க்கையல்ல. அவற்றை எவ்வளவு இலாவகமாக விலத்திச் செல்கின்றோமோ அதுதான் வெற்றிக்கான வழி என்பதை புரிந்து கொண்டால் சரி.

**ஜெயந்தி — சுழிபுரம்**

நன்றிக்கு ஏன் நாயை உதாரணம் கூறுகிறார்கள்?

ஒருமுறை சோறு வைத்துவிட்டால் ஆயிரம் முறை அடித்தாலும் அடுத்த கணம் நம் காலடியில் வந்து வாலாட்டி அன்பைக் காட்டும் விசுவாசி என்பதால்.

**கனகா — மானிப்பாய்**

தத்துவம் ஒன்று சொல்லுங்கள் வியாசரே?

கோயில்கள் அத்தனையும் பள்ளிக்கூடங்கள் ஆகும் என்றார்கள். ஆனால் உண்டியலை ஏனோ அகற்ற மறந்து விட்டார்கள்.

**ஆதவன் — மாதகல்**

நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள் பற்றி?

யாரையும் நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற வார்த்தை உயிர்ப்புடன் இருக்கும் வரை நம்பிக்கைத் துரோகம் நடந்து கொண்டுதான் இருக்கும்.

**விசுவாசி — சண்டிலிப்பாய்**

வியாசரே தற்போதைய சமுதாயம் எப்படிப் பட்டது?

மகன் வீட்டில் பெற்றோர்கள் மிக மிக மரியாதையாக நடத்தப்பட்டார்கள். அப்பா, அம்மா சொத்து அவன் பெயருக்கு மாற்றப்படும் வரை. இது தான் இன்றைய நிலை.

**மனோ — இணுவில்**

கேப்பாப்பிலவு போராட்டம் பற்றி?

எதையும் போராடித்தான் பெறவேண்டும் என்பதை ஆட்சியாளர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறார்கள். என்தேசம், எனது வானம், எனது காற்று, எனது நிலம். அதில் எனது பாட்டன் முப்பாட்டன் காலாதிகாலம் வாழ்ந்த நிலம். நான், அண்ணன், அக்கா, தம்பி, தங்கை அத்தனைபேரும் அங்குதான் பிறந்தோம், அங்குதான் வாழ்ந்தோம். இப்படி எமக்கே உரித்தானதைக் கூட இந்த நாட்டில் போராடிப் பெற வேண்டி இருக்கிறது. ஆட்சியாளர்களே சபாஸ். அவர்களுக்கு ஒத்தூதும் எம் தமிழ்த் தலைமையே சபாஸ் சபாஸ்.

**கோபு — திடலூர்**

முன்பே இப்படி அறவழிப் போர் புரிந்திருந்தால் இவ்வளவு உயிர்கள் இறந்திருக்கமாட்டாதே?

தம்பி கோபு. இவ்வளவு நாளாக கோமாவில் இருந்தீரோ? குண்டு போட்டு கொன்றது போதாதென்று பெரிய பரல்கள் முழுவதும் மலத்தை நிரப்பி கொண்டுவந்து எம் தலையில் கொட்டியவர்களிடம் அறப்போர் எடுபடுமோ? பெண்களைப் பிடித்து ஆடை களைந்து மனித இனம் செய்யாத செயல்களை செய்த கொடியவர்களிடத்தே அறப்போர் எடுபட்டிருக்குமோ? யோசித்துப் பாருங்கள் இது கூட முடிவில்லை. சில தொடக்கங்களுக்கான அத்திபாரம் அவ்வளவுதான்.

குறுந்தகவல்
(SMS)
உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்
021 567 1532

**ஜனார்த்தன் — சாவகச்சேரி**

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஆட்சி முறை எப்படியுள்ளது?

உலக வல்லரசு அமெரிக்கா. முதன் முறையாக அமெரிக்காவின் நன்மைகள், பாதுகாப்பு பற்றி சிந்தித்திருக்கிறது ட்ரம்பின் ஆட்சி மூலம். ட்ரம்ப் தேர்தல் பிரசாரங்களில் பல வாக்குறுதிகளை வழங்கினார். அதை பலர் விமர்சித்தார்கள். இந்த வாக்குறுதிகளை அமெரிக்க மக்கள் ஏற்கமாட்டார்கள் எனக் கூறினர்.

இருப்பினும் அவை அனைத்தையும் உடைத்து வெற்றிபெற்று சாதித்து தனது வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார் ட்ரம்ப்.

**இராசதுரை — தையிட்டி**

எங்கு அடித்தாலும் நாய் ஏன் பின்னங் காலைத் தூக்குகிறது?

இதைக் கேட்கும் போது ஒரு காலத்தில் எங்கு குண்டு வெடித்தாலும் அது விடுதலைப் புலிகளின் தலையில் வந்து விழுந்துவிடும். அதுதான் நினைவு வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்புகூட களுத்துறையில் சிறைக் கைதிகள் வானத்தின் மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் உயிரிழந்தனர். கடந்த ஆட்சி இப்போதிருந்திருந்தால் இதுவும் புலியின் தலையில்தான் விழுந்திருக்கும். ஆக நாயின் குணம் காலைத் தூக்குவதென்றால் நாமென்ன செய்து விட முடியும்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

இந்தக் காலத்தில் அமைதி காப்பது தகுமா?

இந்தக்காலமல்ல எந்தக் காலத்திலும் அமைதி காப்பது தகும். ஆனால் எம் தமிழ் தலைமை காக்கும் அமைதி ரம்ப ஓவர். கடுமையான நிபந்தனைகளுடன் இன்னும் ஒருவருடம் அவகாசம் கொடுக்கலாம்.

இந்த வார்த்தையைக் கேட்கும் போது மாண்டுபோன எம் உறவுகளுக்கு செய்யும் துரோகமாகவே எண்ணத் தோன்றுகிறது.

கழுத்தறுத்தவர்களுக்கு வழிகாட்டுகின்றோம். அறுபட்டுக் கிடப்பவர்கள் புதைகுழிமேலாக. அதுதான் வேதனையிலும் வேதனை.

**குகதர்சன் — யாழ்ப்பாணம்**

காதல் என்றால் என்ன?

வேலைவெட்டி இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும். வேலை வெட்டி உள்ளவர்களுக்கு வேலையைக் கெடுக்கும். கெ,கொ இதில் எது வேண்டும் என்று முடிவெடுங்களேன்.

**மது — ஒட்டுசுட்டான்**

மனைவி கடும்போக்கானவள். மாற்ற வழி சொல்லுங்கள்?

இந்தக் கோடரி இருக்கிறதே அது கருங்காலி மரத்தைக் கூட மிகச் சாதாரணமாகப் பிளந்து எறிந்துவிடும். ஆனால் அதே வீரத்தை வாழை மரத்திடம் காட்டுமாக இருந்தால் இதன் விளைவு வேறாக இருக்கும்.

மது அவர்களே, மனைவி வாழைமரம் போன்றவள். அவளிடம் போய் வீரத்தைக் காட்டாமல் விவேகத்தைக் காட்டுங்கள். அது தான் அன்பால் அடியுங்கள். அடிக்க அடிக்க அம்மியும் நகருமென்பார்கள். அன்பால் அடிக்க அடிக்க மனைவியும் மயங்குவாள். ஆண்பால் பெண்பால் அன்பால் உலகை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## கோடைக்காதல்

பாத்திரத்தில் விழுந்த
பாதரசமாய்
மின்னுகின்றாய் நீ
இரவில் மட்டுமே
நட்சத்திரங்கள்
தெரியும் என்ற
கோட்பாட்டை
முறியடித்து...
உன் நெற்றியில் பூத்த
வியர்வைப் பூச்சிகள்
பூக்களைத் தேடி
முன்னேறுகிறது
உன் கழுத்து வழி...
நம் இருவரின்
நிழல்களும்
கைகோர்த்து
நெடுநேரம் ஆகியும்
இன்னமும்
பிறக்கவில்லை– நம்
குழந்தை நிழல்கள்...
உன்னைப் பார்த்த சூரியன்
கடிகாரம் பார்க்கிறான்
நிலவின் ஆட்சியில்
நேரம் தவறி
வந்தேனோ என்று...
மதியம் ஆகியும்கூட
வெப்பத்தை
தின்று கொண்டிருக்கின்றன
உன் உதடுகள்
இறுதி முத்தத்தில்
அதே குளிர்மை

**நிலவன்**

## சமநீதி

காமுகர் நெஞ்சில்
கணமேனும் நீதியில்லை
களவும் கொலையும்
கைவந்த கலை
இனத்தை இனமே
அழித்தல் முறையாமோ
இயற்கையின் நீதியும்
இங்கு இதாமோ
இன்னல் விளைவித்து
இன்பங்காணும் நீ
இழிவான பிறவி
இதை நீ உணராயோ
சமுதாய சந்தையிலே
சமநீதி மலராதோ
கண்ணீரில் மிதக்குது
கன்னியரின் வாழ்வு
சதிகளை உடைத்து
சந்ததியை காத்து
புதுயுகம் படைப்போம்
புயலென வாரீர்
புதுமைகள் யாவும்
புரட்சியாளர் செயல்

**க.சிவகுமார்,சுழிபுரம்**

## நடை பயணம்

காய்ந்து போன எந்தன் கிராமத்து
மணற்பாதை வெளியில்
படரும் என் கால்கள்
அறுவடை செய்யப்பட்ட
நெல்லின் கட்டை
பாதத்திலே குத்தும்
உலர்ந்துவிட்ட புல்கள் மிதிபடும்
உலர்வான காற்று
மேனி வருடிச் செல்லும்
எதுவும் பேசாமல் மௌனமாக
எதைப்பற்றியும் நினையேன்
உயிரிலே கலந்த என் காதலை
மட்டும் மனதிலே
நினைத்தபடி நடக்கின்றேன்
பெரும்தூரம் சூரியன்
அந்திசாயும் நேரம் வரை...
அவளோடு முத்தமிட்ட நிமிடங்களை
நினைக்கையில்
மனதோரம் மகிழ்ச்சிப்பூ
மலர்வதை உணர்கின்றேன்

**ஆ.முல்லைதிவ்யன்**

## இறைவனுக்கே வெளிச்சம்

அது ஒரு அழகான வீடு
அந்த வீடுதான்
என் சொந்த வீடு என்ற நம்பிக்கை
என் இதயத்து இரத்தம்
உடல் முழுவதும் ஓடுவதுபோல்
ஒட்டிக்கிடந்தது

எம் தலைவிதியை நிர்ணயிக்கும்
அந்தக் கணங்களில்
நரம்பு புடைக்கப் பேசும்
பேச்சுக்களைக் கேட்டு
கொந்தளித்தோம்

எம் தலைவிதியை
நாமே எழுதிக் கொள்வோம்
எம்மை நாமே ஆளுவோம்– என
எத்தனை எத்தனை கோசங்கள்
அத்தனையும் வெறும் வேசங்கள் என
போகப் போகத்தான் புரிந்தது

எம்மை அடையாளம் காட்டியவர்
அழிக்கப்பட்டார்
அத்தனை நாளாய்
பெட்டிப் பாம்பாய்க் கிடந்தவர்
எழுந்து ஆடத் தொடங்கினர்

ஐயகோ
அவர் செய்யும் கூத்துக்கு
அளவேயில்லையோ!

எம்மை வைத்து ஆட்டம் தொடங்கி
எம்மைவிற்றுப்
பிழைப்பு நடத்தும்
இந்தக் கூட்டம் அழியாதோ
இறைவனுக்கே வெளிச்சம்

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 343



## யார் துணை?

எலும்பும் தோலுமாய்
ஏங்கும் பிள்ளை எல்லாம் இழந்து
வாடும் தொல்லை
ஏது செய்யும் யார் துணை
தண்ணீர் வேண்டி கை நீட்ட
தடைபோட்ட பாவி யாரோ
தண்ணீரும் இங்கே
தாகத்திற்கு இல்லை
ஏழைப்பிறப்பிங்கே
எளியதாய் ஆனதா?
குற்றம் கண்டு
குனிந்தே போனால்
குறைகள் யாவும்
வளர்ந்தே போகும்
உறுதி கொண்டு
நிமிர்ந்து எழுந்தால்– நீ
உள்ள தடைகள்
உடைந்தே போகும்

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி**

## தாகம் தீரும்

தாகம் உன்னை வதைக்கிறது
ஒருவேளையேனும்
நீர்த்துளிகள்
உன் தாகத்தை தணிக்காதா
என்று ஏங்குகிறாய்
காத்திடு காலம் மாறும்
இயற்கை அன்னை உனக்கு
கைகொடுப்பாள் கலங்காதே
உன் தாகம் தீரும்

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

## நாங்களும் மனிதர்கள்தான்!

தொழிலாளியால் தொழிலதிபரானவன்
தொழிலாளியின் தொண்டைக்கே
சுருக்குப் போடுகிறான்!
வறியவருக்கான வாழ்வாதார
திட்டங்கள் அனைத்தையும்
வசதியானவனே
வளைத்துப் போடுகிறான்!
சமத்துவ உரிமை என
சட்டமன்றில் பேசியவனே தொழிலாளர்
உரிமைகளை அடக்கியாள்கிறான்
அடிப்படை உரிமைகள் கொடு
முதலாளி வர்க்கமே
நாங்களும் மனிதர்கள்தான்!

**எளிமைக்கவி றொபின்**
**புன்னாலைக்கட்டுவன்**

## நீரின்றி வாடிவிட்டேன்

நீரின்றி தவிக்கின்றேன்
நீ அதனைத் தடுக்கின்றாய்
பார் என்னை உன் கண்ணால்
நீரின்றி வாடிவிட்டேன்
பெற்றோரை இழந்த நான்
பாதையில் வாழ்கின்றேன்
உன் மனம் கசிந்தால்
தளராத மனம் கொண்டு
என் தாகம் தீர
உன் இதயத்தைக் கொஞ்சம்
கசிந்து உதவும் ஐயா

**நா.தளையசிங்கம்**
**கொக்குவில்**

## புனல் தேடும் இருதயம்

நிலா தூறலிலே
செருமிய குரல்கொண்டு
வேட்டையாடி அலையும்
மனிதக் கூட்ட மத்தியிலே
மிகுதி புனலை நாடி
துளி தரும் வெள்ளம்
பனி பொழியும் கோலம்
தின ஆவர்த்தன வரையில்
நீர் செய்த வடிவம்
சிற்றிதயம் படியும் ஏக்கம்

**சு.சுருத்திகா**
**யா/வ.ம.க.**

## நீயுமில்லை நானுமில்லை

நீரின்றி உயிர்வாழ்வு இல்லை
இயற்கை அளித்த நீரை
செயற்கையாக தடுக்கும்
மனிதாபிமானமற்ற கொடூரம்!
பட்டுவிடும் செடியாக குந்தியிருந்து
சொட்டு தண்ணீருக்கு ஏங்கும் காட்சி!
சுட்டுவிடும் இயற்கை துஷ்பிரயோகிகளை!
விட்டுவிடாது உயிர்காக்க
நட்டு விடுவோம் கரங்களை விரைவில்
பசுமை காத்து உயிரினங்கள் உயிர் வாழ!

**சி.சுகிர்தமலர்**
**உரும்பிராய்**

## தடைகள் தாண்டி

துயர் நீக்கும் வகையில்
உயர்பீடம் வழிவகுத்தாலும்
இடையிலுள்ளோர் பலரால்
தடைபோடும் நடவடிக்கைகள்
ஒரு வகையில் அதிகாரத்தையும்
துஷ்பிரயோகம் செய்வதானது
தங்குதடையின்றியின்றும்
எங்கும் நடைபெறுகின்றது
தேவை வசதிகளை விரைந்து
அடைவதேயிதன் குறியாகும்
ஏழை அழுத கண்ணீர் நல்
வேளைவரும் போது நிச்சயம்
தாகத்தை ஏற்படுத்தி சதி
நோக்கத்தை தோற்கடிக்கும்
சோகத்தைப் போக்குவதற்கு
ஒற்றுமையே கைகொடுக்கும்

**க.நாகராசா, நுணாவில்**

# மௌனத்தின் தேடல் –344



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 08.03.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு நடிக்கத் தெரியாது பன்னீர்செல்வம் பளீர்

"எம்.ஜி.ஆர். திரைத்துறையில் கால் நூற்றாண்டு காலம் காலூன்றி பெற்ற தலைவர் பட்டத்தை, கருணாநிதி இருபது ஆண்டுகள் காத்திருந்து பெற்ற தலைவர் பட்டத்தை, நாற்பது நிமிடங்கள் ஜெயலலிதா சமாதி முன்பு தியானம் செய்து ஒரு தலைவராக உருவாகிவிட்டார் ஓ.பன்னீர்செல்வம்" என்று சிலாகிக்கிறார்கள் தொண்டர்கள்.

பரபரப்பாக இருந்த தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் ஜூனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வியை இங்கு தருகின்றோம்.

**"குழப்பத்தின் உச்சத்தில் இருக்கிறது தமிழக அரசியல். இந்தச் சூழலை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?"**

"ஜல்லிக்கட்டுப் பிரச்சினைக்குப் பிறகு, தமிழகத்தில் புதிய எழுச்சி உருவாகியுள்ளது. தமிழகத்தில் இனி எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த ஆட்சி தூய்மையானதாக இருக்க வேண்டும், ஊழல் இல்லாத ஆட்சியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இன்றைய இளைஞர்கள், மாணவர்கள், பெண்களிடையே ஏற்பட்டிருப்பதை உணர முடிகிறது.

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்துக்குப் பின்னால் மாணவர்களும் இளைஞர்களும் தன்னார்வத்தோடு அரசியலில் ஈடுபாடு காட்டாத நிலை இருந்தது. ஆனால், இப்போது அந்த எண்ணம் மாறி, அரசியலில் தன்னார்வத்தோடு ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. இது சமுதாயத்தில் ஏற்பட்ட ஒரு மறுமலர்ச்சி என்றுகூடச் சொல்லலாம்."

**"உண்மையான அ.தி.மு.க தொண்டர்கள் என் பின்னால் இருக்கிறார்கள் என்கிறீர்கள். ஆனால், 122 சட்டமன்ற உறுப்பினர்களே உங்கள் பின்னால் இல்லையே?"**

"அம்மா முதலமைச்சர் ஆக வேண்டும் என்றுதான் வாக்கு கேட்டோம். அம்மா முதலமைச்சர் ஆக வேண்டும் என்றுதான் எங்களுக்கு மக்கள் வாக்குப் போட்டார்கள். அம்மா இல்லாத அசாதாரணமான சூழ்நிலையில் அம்மா எந்த நோக்கத்துக்காக இந்த இயக்கத்தை வளர்த்தார்களோ, எந்த நோக்கத்தோடு ஆட்சியை நிறுவினார்களோ, அதிலிருந்து மாறுபட்டுச் செல்லும் அபாயகரமான சூழல் ஏற்பட்டுள்ளது. மக்களும் சசிகலாவுக்கு எதிராகத்தான் இருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. கட்டாயத்தின் பேரில் அங்கு இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. நான் முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்யும்போது என்ன மனநிலையில் இருந்தேனோ, அதே மனநிலையில்தான் அந்த 122 எம்.எல்.ஏக்களும் இருக்கிறார்கள். அவர்களும் மனம் திருந்துவதற்கு உரிய காலம் வரும் என்றே எண்ணுகிறேன். ஏனென்றால், மக்களும் கட்சியினரும் ஒரு பக்கமும், சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னொரு பக்கமும் இருக்கின்ற சூழ்நிலை தற்போது நிலவுகிறது. இது ஜனநாயகத்துக்கு நல்லதே அல்ல."

**"சட்டமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்ட தால்தான் உங்களுக்கு ஆதரவு கிடைக்காமல்போனது என்கிறீர்களா?"**

"அங்கு இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள், அச்சுறுத்தலோடுதான் இப்போதும் இருக்கிறார்கள். நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் போது சபாநாயகரிடம் 'இவர்கள் பத்து நாட்களுக்கு மேல் விடுதியில் அடைத்து வைக்கப்பட்டு, அங்கிருந்து நேராகச் சட்டமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். அவர்களை, தொகுதிக்கு முதலில் அனுப்பி... மக்கள் மனநிலை என்ன என்று அறிந்து வரட்டும். அதன் பிறகு சட்டமன்றத்தைக் கூட்டுங்கள்' என்று சொன்னேன். அதற்கு, சபாநாயகர் மறுப்பு தெரிவித்தார். இரகசிய வாக்கெடுப்புக்கும் மறுத்துவிட்டார். ஜனநாயகத்தையே படுகொலை செய்துவிட்டார்."

**"33 ஆண்டுகள், சசிகலாதானே ஜெயலலிதாவின் நிழலாக இருந்தார். எதன் அடிப்படையில் ஜெயலலிதாவுக்கு எதிராக சசிகலா இருக்கிறார் எனக் குற்றம்சாட்டுகிறீர்கள்?"**



"அம்மா அவர்கள் சசிகலாவை உதவியாளராகத்தான் வைத்திருந்தாரே தவிர, எந்தப் பொறுப்பிலும் உட்கார வைக்கவில்லை. எம்.எல்.ஏ., எம்.பி.என எந்தப் பதவியையும் அம்மா கொடுக்கவில்லை. அந்த எண்ணம் அம்மாவுக்கு இருந்திருந்தால், எங்களிடமும் சொல்லியிருப்பார். அவர்களுக்குப் பதவிகளைக் கொடுத்து உட்கார வைத்திருப்பார். அம்மாவே அவரை முன்னிறுத்தவில்லை. ஆனால், அவர் இப்போது கட்சியைக் கைப்பற்ற நினைப்பது அம்மாவுக்குச் செய்யும் துரோகம்."

**"ஒட்டுமொத்த அ.தி.மு.கவும் உங்கள்பின்னால்வந்துவிடும்என்றநம்பிக்கை இன்னும் இருக்கிறதா?"**

"இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் கட்சியும் ஆட்சியும் மக்கள் இயக்கமாகத்தான் இருக்க வேண்டும். தனிப்பட்ட ஒரு குடும்பத்தின் ஆதிக்கத்துக்குள் அது சென்றுவிடக் கூடாது என்ற அம்மாவின் நோக்கம் கேள்விக் குறியாகியுள்ளது. ஒரு குடும்பத்துக்குள் கட்சியும், அந்தக் குடும்பத்தின் ஆதிக்கத்தில் ஆட்சியும் இருக்கும் சூழல் இருக்கிறது. அதற்காக 122 வாக்குகள்தான் அவர்களுக்கு இருக்கின்றன. இலட்சக் கணக்கான தொண்டர்களும், கோடிக்கணக்கான வாக்காளர்களும் அம்மாவின் நோக்கத்தை நிறைவேற்ற மனஉறுதியோடு இருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர்.கட்சி தொடங்கியபோதுகூட ஒரே ஒரு எம்.எல்.ஏ.மட்டும்தான் அவரோடு இருந்தார். ஆனால், அதற்குப் பிறகு நடந்த இடைத்தேர்தலில் எம்.ஜி.ஆர். பக்கத்தினர் வெற்றிபெற்றார். அதே வரலாறு இப்போதும் திரும்பியுள்ளது. இப்போது சட்டமன்றத் தேர்தல் வைத்தால், மக்கள் செல்வாக்கு யாருக்கு எனத் தெரிந்துவிடும். அதற்கு அவர்கள்தயாரா? இதைச் சவாலாகவே கேட்கிறேன்"

**"சசிகலாவை முதலமைச்சர் ஆக்குவதற்கு எதிர்ப்புக் காட்டும் நீங்கள்தானே அவரை முன்னின்று பொதுச் செயலாளராகத் தேர்வு செய்தீர்கள்?"**

"அம்மா காலமானதும் பொதுச் செயலாளரைத் தேர்வு செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அப்போது பத்திரிகைகளிலும் பொதுச் செயலாளர் தேர்வு குறித்து விரும்பத்தகாத சில செய்திகள் வந்து கொண்டிருந்தன.

அதனால், தற்காலிகப் பொதுச்செயலாளராக ஒருவரை உட்கார வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால் பொதுச் செயலாளர் பதவிக்கு அவரை முன்மொழிந் தோம். ஆனால், பதவியில் உட்கார்ந்த பிறகு முதலமைச்சர் பதவிக்குக் குறிவைத்து எனக்கு நெருக்கடிகளைக் கொடுக்க ஆரம்பித்தார். முதலமைச்சர் பதவிக்குரிய மரியாதையைச் சிதைக்கும் செயல்களைச் செயற்கையாக உருவாக்கினார். முதலமைச்சர் பதவிக்கு அவர் வர நினைத்த போதுதான் மக்கள் மத்தியில் கொதிப்பு ஏற்பட்டது, எதிர்ப்புக் கிளம்பியது."

**" 'மக்கள் எங்கள் பக்கம்' என்று நீங்களும் சொல்கிறீர்கள், சசிகலா தரப்பும் சொல்கிறதே?"**

"சசிகலாவுக்கு எதிராக, பொதுமக்களும் கட்சித் தொண்டர்களும் இருக்கிறார்கள். நான் முதலமைச்சராகப் பதவியில் இருந்த போதே எனக்கு ஆதரவாக எம்.எல்.ஏக்கள் ஆதரவைப் பெற்றிருக்க முடியும். முதலமைச்சர் பதவியில் அதிகாரத்தில் இருந்துகொண்டு அதைச் செய்வது ஒன்றும் கடினமான காரியம் அல்ல. அதை நான் விரும்பவில்லை. அம்மா விரும்பிய ஆட்சி நடைபெற வேண்டும், கட்சி நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்பினேன். ஆனால், அதற்கு நேர்மாறாக ஒரு குடும்பம் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுத்து நிறுத்தத்தான் இந்த நல்ல முடிவு எடுத்தோம். உள்ளாட்சித் தேர்தலில் எல்லாம் தெரிந்துவிடும்."

**" '10 சதவிகிதம்தான் சசிகலாவைப் பற்றிச் சொல்லியுள்ளேன். 90 சதவிகிதம் மீதி இருக்கிறது' என்கிறீர்கள். அந்த 90 சதவிகிதத்தை எப்போது சொல்வீர்கள்?"**

"அது என்னோடு புதைந்துபோகட்டும். அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை"

**" 'ஜெயலலிதாவின் மரணத்துக்குப் பின்னால் இருக்கும் மர்மத்தில் சசிகலா இருக்கிறார்' என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளதே. உண்மையாகவே நடந்தது என்ன?"**

"மக்களுக்கு இருக்கும் சந்தேகம் எனக்கும் இருக்கிறது. அது நிவர்த்தியாக வேண்டும் என்றுதான் 'விசாரணை கமிஷன் அமைப்போம்' எனச் சொன்னோம். ஒரு தலைவரின் மரணம் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். இது தொடர்பாக எங்கள் எம்.பிக்கள்கூட ஜனாதிபதியைச் சந்தித்து மனு கொடுக்கத் தீர்மானித்துள்ளோம். அதில், மத்திய அரசின் புலனாய்வுப் பிரிவு (சிபிஐ) விசாரணை நடத்தி உண்மையை வெளியே கொண்டுவர வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை."

**"சசிகலா குடும்பத்தைச் சேராத எடப்பாடி பழனிச்சாமிதான் இப்போது முதலமைச்சர். அவரை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுவது ஏன்?"**

"எடப்பாடி பழனிச்சாமி, யாருடைய தேர்வு என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். அவரைவிட சீனியர்கள் எல்லாம் அமைச்சர்களாக இருக்கும்போது, இவரை முதலமைச்சராக்கி இருக்கிறார்கள்."

**"சசிகலா குடும்பம்போல்தான் உங்கள் குடும்பத்தினரின் பதவிகளையும் 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு ஜெயலலிதா பறித்தாரே?"**

"எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரையும் அம்மா கட்சியிலிருந்து நீக்கவில்லை. பொறுப்பில் இருந்து எனது மகனை அம்மா எடுத்தார்கள். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதற்குள், நிறைய விடயங்கள் புதைந்து கிடக்கின்றன."

**" 'உங்கள் குடும்பத்தினர்கூட அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்தினார்கள்' என்கிற குற்றச்சாட்டுகள் இருக்கின்றனவே?"**

"எனது மகன் கட்சிப் பொறுப்பில் இருந்தபோது, ஒரு பொலிஸ் ஸ்டேஷனுக்குக்கூட அவன் போன் போட்டுப் பேசியதில்லை. அரசு நிர்வாகத்தில் தலையிட்டதில்லை. அம்மா என்ன நினைக்கிறார்களோ, அப்படித்தான் நாங்கள் செயற்பட்டோம். அம்மா சொன்ன வேலையைத்தான் செய்தோம். வேறு எந்த வேலையும் எங்களுக்குத் தெரியாது."

**" 'குற்றவாளி எனத் தீர்ப்பு சொல்லப்பட்ட ஜெயலலிதா படங்களை அகற்ற வேண்டும்' என, ஸ்டாலின் புகார் அளித்துள்ளாரே?"**

"தி.மு.கவினர் அவ்வப்போது தங்கள் மன அழுக்கை வெளிக்காட்ட, நாகரிகமற்ற பேச்சால், நாட்டு மக்களை வதைத்துக் கொண்டே இருப்பார்கள். அவர்கள், பொது வாழ்வில் நாணயமற்றவர்கள். மக்களால் தூக்கி எறியப்பட்டவர்கள். தனக்கென வாழாது, மக்களுக்காகவே வாழ்ந்து, மக்கள் மனதிலே நிறைந்த அம்மாவைப் பற்றி கொஞ்சம்கூட கூச்சமே இல்லாமல், காழ்ப் புணர்ச்சியோடு விமர்சனம் செய்வது துரதிர்ஷ்டவசமானது.

காமராஜர், இந்திராகாந்தி, ராஜாஜி, எம்.ஜி.ஆர். ஆகியோரையும் நாகரிகமற்ற முறையில் விமர்சனம் செய்தவர்கள். அது இப்போதும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

தி.மு.க எவ்வளவு முயற்சி செய்தாலும், அவதூறு பரப்பினாலும் அம்மாவின் புகழை மக்கள் மனதிலிருந்து அழிக்க முடியாது."

**"'ஸ்டாலினும் - ஓ.பி.எஸ் ஸும் நாடகமாடுகிறார்கள்" என்று வைகோ சொல்கிறாரே?"**

"அவர் ஏன் அப்படிச் சொன்னார் எனத் தெரியவில்லை. உண்மையிலேயே எனக்கு நடிக்கத் தெரியாது. சிறுவயதிலிருந்து நான் இதுவரை எந்த நாடகத்திலும் நடித்ததும் இல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிராமத்து நினைவுகள்

பங்குனி வெயில் கண்ணைப் பறித்தது. காற்றுப் புழுதியை முகத்தில் வாரி அடிக்கடி சுழன்று சுழன்று வீசியது. கிடுகு வேலியைத் தாண்டிச் சென்றால் கிழுவம் வேலி செழித்திருந்தது. சுற்றி வர கிழுவம் தடிகள். இரண்டு மூன்று முட்கம்பி வரிச்சுக்கள். நான் படலையை அடைந்து விட்டேன்.

"குஞ்சியப்பு குஞ்சியப்பு" என்று கூப்பிட்டவாறே படலையைத் திறக்க முயன்றேன். பதில் எதுவுமில்லை. கத்தான் பாட்டு மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் நாய் விர்ரென்று குரைத்துக் கொண்டு வந்தது.

"அடி அடி" என்று நாயை விரட்டிய போதுதான்

"ஆரப்பு வா மோன" என்று கட்டிலில் இருந்த கொட்டனை ஊன்றியடி எழுந்து வந்தார்.

அவருக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. கிட்டவாக வந்தார். காவி படிந்த வாயில் வெற்றிலைச் சிவப்பு குறையவில்லை. கடவாய்ப் பக்கத்தால் வெற்றிலை எச்சில் வழிந்தபடி கையை நெற்றியில் குவித்து

"நீ ஆரப்பு என்னவேணும்" என்றார்.

நானும் வெகு சிரமப்பட்டு என்னை அறிமுகம் செய்ய முயன்று கொண்டிருந்தேன். கால சக்கரங்கள் வேகமாகவே சுழன்று கொண்டிருக்கின்றன. மன வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் மனிதன் தடுமாறிக் கொண்டிருக்கிறான். அந்தக் காலத்தில் குஞ்சியப்பு நல்ல உடல் வாகு கொண்டவர். வசீகரிக்கும் தோற்றம் நிறைந்தவர். இப்போது உடல் தளர்ந்து சுருக்கங்கள் நிறைந்த உடலும் புருவங்கள் தளர்ந்து கண்ணை மறைக்கவும் நடுக்கம் நிறைந்த கைகளில் தடியை ஊன்றியபடி தளர்ந்துபோன அந்த உடலுக்குள் புதுப்பொலிவுடன் வீற்றிருக்கும் கலைமகள் அவர் பாடிய அந்தப் பாட்டு எனக்குள் அந்தக் கலையை நேசிக்கும் கலைஞனைக் காட்டியது. படலையை நெருங்கும்போதே

"வென்று வந்தேன் அம்மா வென்று வந்தேன் அந்த

வேசியர மகனார் வென்று வந்தேன்"

என்ற பாட்டு என்ற பாடல் என் காதில் கணீரென்று ஒலித்தது.

நான் வெகு சிரமப்பட்டு என்னை அறிமுகம் செய்ததும் "அட எங்கட பார்வதியின்ர பெடியனோ" என்று வானத்தை நோக்கிக் கைகளைக் குவித்து "அப்பனே கல்லறையானே நீதானப்பா" என்று கடவுளை வேண்டிக் கொண்டார்.

எப்பிடியன சுகமா இருக்கிறியோ. தோளில் இருந்த சால்வையை எடுத்து என் முகத்தை துடைத்தபடி கேட்டார். நான் ஹ்ம்... என்று தலையையாட்டியதும் " வா அப்பு வா" என்று கூட்டி வந்து கட்டிலில் இருத்தினார்.

இன்றெல்லாம் கூத்துக்கள், நாடகங்கள் அதிகம். யாரும் பார்ப்பதில்லை. கூத்து பழந்தமிழரின் கலையாகும். முன்னைய நாட்களில் காத்தவராயன் மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி என்று அடிக்கடி பார்த்திருக்கின்றேன். இப்போது இவை இல்லை. எங்கோ ஒரு மூலையில் இடையிடையே இவை மேடையேற்றப்பட்டாலும் அதனைக் கண்டுகொள்ள யாரும் விரும்புவதில்லை. தொலைக்காட்சி நாடகங்களிலேயே மூழ்கிப்போய் இருக்கிறார்கள். உண்மையில் நாம் தமிழர்களின் கலைகளை மறந்துவிடவில்லை. எம் தமிழருக்கான அடையாளத்தையே தொலைத்து விட்டிருக்கின்றோம். அப்போதெல்லாம் நான் சிறுவனாக இருந்தபோது ஊரில் உள்ள அம்மன் கோவிலில் காத்தான் நடக்கும். அதில் குஞ்சியப்புதான் காத்தானாக வருவார். அவரைப் பார்ப்பதற்கே ஒரு கூட்டம் வரும்.

"என்னடா மோன பிள்ளையள் இருக்கோ" என்று கேட்டபோது "ஓமன இரண்டு பேர் இருக்குதுகள்" என்று கூறியதும்

" டேய் படிப்பியடா படிப்பி" என்று கூறினார்.

நான் அந்த மாமரத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது சிறுவயதாக இருக்கும்போது சிறுசுகள் சேர்ந்து விளையாடிய நினைவுகள் மனதில் துளிர்த்தது.

முகத்தில் மீசை அரும்பிய அந்த வயசில் பொத்தான் இல்லாத களிசானை இழுத்து முடிந்து செருப்பணியாமல் புழுதி படிந்த கால்களுடன் அந்த நிலம் முழுவதும் சுற்றித் திரிந்ததும் மாங்காய் பறிக்கப்போய் "மின்சாரக் கம்பியில் தொங்கிய வௌவாலைப் போல்" முட்கம்பியில் காற்சட்டை கொளுவி தொங்கிய நண்பன் குளரியது இப்போதும் பசுமை நினைவாக மனதில் பதிந்து கிடந்தது. எனக்கு சிரிப்புத்தான் வந்தது. நான் சிரித்தே விட்டேன்.

"ஏனப்பு சிரிக்கிறாய்" என்று மீண்டும் என்னை நினைவுக்குள் கொண்டு வந்தார் குஞ்சியப்பு.

"ஒண்டுமில்லையன" என்று உரக்கக் கூவினேன். அப்படி சொன்னால்தான் அவருக்குப் புரியும் என்பதால்.

அப்போது எனக்கு பதினேழு பதினெட்டு வயதிலிருக்கும். குஞ்சியப்புவின் வீடு களிமண்ணால் சுவர் எழுப்பி பனை யோலையால் வேயப்பட்டிருந்தது. கிடுகுச் செத்தை அந்தச் செத்தைகளில் எம்.ஜி. ஆர்., சிவாஜி படங்களும் எமது தேசத் திற்காகப் போராடியவர்களின் படங்களும் தொங்கவிடப்பட்டிருக்கும். ராதேயன் என் உறவுக்காரன். குஞ்சியப்பவின் மகன். குஞ்சியப்பு என்றால் இன்றைய சிறுசுகளுக்கு யாரென்று தெரியாது. தாலாட்டில் சொல்லிப்பாட தாலாட்டும் இன்றில்லை. நான் சிறுவனாக இருந்தபோது அம்மா தோளில் போட்டு நிலாக்காட்டித்தான் சோறூட்டுவா என்று சொல்லக்கேட்டிருக்கிறேன். இப்பொழுதெல்லாம்

" டேய் உம்மாண்டி வருதடா... சாப்பிடு என்றால் குழந்தை பயத்திலேயே சாப்பிட்டு விடும்" இதைச் சில சமயம் நான் நேரில் பார்த்தும் இருக்கிறேன்.

நானும் ராதேயனும் நீண்ட நேரம் இந்த மாமரத்தின் கீழ் இருந்து கதைப் போம். இப்போது அந்த இடம் வெறிச்சோடிக்கிடந்தது. அவன் சிந்தனைகள் வேறு. நான் அவனிடம் சில சமயம் தர்க்கம் செய்ததும் உண்டு. அப்போதெல்லாம் அவன் கூறும் நியாயங்கள் சரியானதாக அமையும். அவன் நல்ல பேச்சாளன். சாதாரண தரம் மட்டும் படித்திருந்தான் பின் பாதியிலேயே விட்டு விட்டான். அவன் பயணம் வேறு பாதையில் மாறியிருந்தது. சில சமயம் நான்கைந்து தோழர்களுடன் கனமான ஆயுதங்களை சுமந்தவாறு பயணிப்பதாகவும் அறிந்திருந்தேன். அன்று அவன் வீட்டில் சந்தித்தது. பிறகு அவனை நான் சந்திக்கவில்லை. பல ஆண்டுகள் கடந்து விட்டிருந்தது.

ஒருநாள் மடத்து முருகன் கோவிலில் நான் குளித்துவிட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது.

" டேய் ராசன் மச்சான்" என்ற ஒரு குரல். சட்டென்று சைக்கிளில் இருந்து இறங்கினேன். மரத்தின் பின்னால் இருந்து ராதேயன் மடித்துக் கட்டிய சரத்துடன் கையில் ஒரு ஆயுதத்துடன் வந்தான். என்னைக் கட்டி அணைத்தான். அவன் கரங்கள் மரத்துப் போய் இருந்தன. நீண்ட நாட்களின் பின் அவனுடனான சந்திப்பு மகிழ்ச்சியாயிருந்தது. அப்போதும் அவன் தன் கிராமம் பற்றியே வினவினான். தன் கிராமத்து நினைவுகளை நினைவுபடுத்தியவன் ஒவ்வொன்றாய் சொல்ல சந்தோசப்பட்டுக் கொண்டான்.

"டேய் இந்தக் காற்று சுதந்திரமானதல்ல. நாம் அவர்களுக்கிடையில் சிக்குண்டு நசுங்குவதாகவே உணர்கிறேன்". நாம் தமிழர். நம் பண்பாடு தமிழ்ப்பண்பாடு. நமக்கென்றொரு மொழி. ஆனால் நம் சுதந்திரம் மட்டும் வேறு யாரோ ஒருவரால் தீர்மானிக்கப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை" என்று தன் ஆதங்கத்தை கூறினான். நான் புரட்சியாளர்களை பற்றியெல்லாம் படித்ததுண்டு. அவனுள் ஊறிப்போன தேசியம் எனக்கு வியப்பாயிருந்தது.

"சரிடா ராசன் உன்னோட கதைக்க நிறைய இருக்கு. இப்ப ஏலாது நாம் போயாக வேண்டும். எப்ப எம்தேசம் சுதந்திரத்தை, சுதந்திரக்காற்றை சுவாசிக்கிறதோ? அப்ப நான் வருவன்ரா" என்றான்.

அன்றுதான் அவனை இறுதியாக பார்த்தேன். பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. அவனைக் காணவில்லை.

"டேய் அப்பு என்னடா" யோசிக்கிறாய் எண்டு மீண்டும் என்னை தட்டினார் குஞ்சியன்.

"இல்லையன ராதேயன்" என்று இழுத்தேன்.

"அத ஏனப்பு கேட்கிறாய். மகன்ர ஒரு முடிவும் இல்லை. இருக்கிறானோ இல்லையோ ஒண்டும் தெரியாது. தாயின்ர சாவீட்டுக்கும் இல்லை, எனக்கும் அவன் கொள்ளி வைப்பனோ கடவுளே" என்று கண்ணீர் வடித்தார்.

எனக்கு கண்கள் கலங்கி கன்னத்தின் வழி நீர் வழிந்தது. லேஞ்சியை எடுத்து துடைத்துக் கொண்டேன்.

"தம்பி எங்களோட எல்லாம் முடிஞ்சு போயிடும். இந்த ஆடின காலும் கையும் ஓஞ்சு போச்சு" என்று ஆதங்கப்பட்டார்.

"காட்டுக்குப் போன என் கண்மணி எந்திராயோ" என்று உரக்க மயான காண்டப் பாடலை ஒருமுறை பாடினார்.

"சரியப்பு சரி நீ நேரம் போகுதே" என்றார்.

"ஓமன நான் போட்டு பிறகு வாறன்" என்று சொல்லிவிட்டு கையில் இருந்த பார்சலைக் கொடுத்து விட்டு நடந்தேன்.


நான் நடந்து கொண்டிருந்தேன். என் நினைவுகள் மட்டும் அந்தக் குடிசையில் சுழன்று கொண்டிருந்தது. ராதேயனைப் பற்றியும் எம்மில் இருந்து விடுபட்டுப் போன தமிழர் கலைகள் பற்றியும் என் நினைவுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

கொள்ளி வைக்க வருவானா? என்ற ஏக்கத்தோடு இருக்கும் ஒரு தந்தையின் குரல் என் காதில் கேட்டுக் கொண்டேயிருந்தது.

மா.சிவா
கரவெட்டி மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டுப் பணக்காரர் கைகளில் பாதி உலகம்



இந்த உலகில் ஒன்பது பேரில் ஒருவர், இன்று இரவு ஏதும் சாப்பிடாமல் பசித்த வயிறோடு உறங்கச் செல்கிறார். இது நாளும் நிகழும் துயரம்.

இப்படி 80 கோடி பேர் மிகவும் வறுமையில் தவிக்கும் இந்த உலகில்தான்... விரல் விட்டு எண்ணக்கூடிய சில கோடீஸ்வரர்கள், பல தலைமுறைகளுக்குச் செலவழித்தாலும் கரையாத அளவுக்கு சொத்துகளைக் குவித்து வைத்திருக்கிறார்கள்.

ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகவே ஆக, பணக்காரர்கள் கையில் மேலும் மேலும் பணம் குவிகிறது.

ஏழைகளைச் சுரண்டி பணக்காரர்களைக் கொழுக்க வைக்கும் இன்றைய பொருளாதார முறை, இதையே தொடர்ந்து செய்கிறது என்றால், இந்தப் பொருளாதார முறை சரியானதுதானா என யோசிக்க வேண்டும்!

இது ஒன்றும் கம்யூனிஸ்ட்களின் பிரகடனம் அல்ல... உலகின் பணக்கார நாடுகளின் தலைவர்களும், முன்னணித் தொழிலதிபர்களும் பங்கேற்கும் 'வேர்ல்டு எகனாமிக் போரம்' மாநாட்டுக்காக








'ஒக்ஸ்பாம்' என்ற தொண்டு நிறுவனம் தந்த ஆய்வறிக்கையின் சாரம்.

மாடிகள் உயர்வதும், குடிசைகள் சரிவதுமான இந்தப் பொருளாதார சமநிலையற்ற தன்மை, 'சமூக அமைதியைக் கெடுத்துவிடும்' என்பதுதான் அவர்களின் எச்சரிக்கை.

ஒக்ஸ்பாம் என்பது கடந்த 1942ஆம் ஆண்டு லண்டனில் தொடக்கப்பட்ட தொண்டு நிறுவனம். பஞ்சத்தில் தவிக்கும் மக்களுக்கு உதவுவதற்காகத் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம், இப்போது பல தொண்டு நிறுவனங்களை இணைத்து பெரிய அமைப்பாக வளர்ந்திருக்கிறது.

'சமூகநீதி' போல 'பொருளாதார நீதியை' உலகில் ஏற்படுத்துவதற்காக இந்த அமைப்பு பாடுபட்டு வருகிறது. அதனால், இவர்கள் ஆண்டுதோறும் தரும் பொருளாதார அறிக்கை உன்னிப்பாகக் கவனிக்கப்படும்.

ஒக்ஸ்பாமின் இந்த ஆண்டு அறிக்கை, உலகின் பொருளாதாரச் சூழல் குறித்து தந்திருக்கும் புள்ளி விபரங்கள் அதிர வைக்கின்றன. உலகின் சரிபாதி மக்கள் தொகையிடம் இருக்கும் அளவுக்கான சொத்துகள், உலகில் வெறும் எட்டுப் பேரிடம் குவிந்து இருக்கின்றன.



அதாவது, வசதியற்ற 360 கோடி மக்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறதோ, அதற்கு ஈடான சொத்துக்களை வெறும் எட்டே எட்டுப் பேர் வைத்திருக்கிறார்கள்.

> உலக நாடுகள் அனைத்தும் இராணுவத்துக்கு செலவழிக்கும் தொகையை ஓராண்டுக்கு நிறுத்தி வைத்தால், வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கும் மக்களில் மூன்றில் ஒரு பங்கினரை மேலே தூக்கிவிடலாம். ஆயுதங்களுக்கு செலவழிக்கத் தயங்காத நாடுகள், ஏழைகளின் ஆகாரத்துக்குப் பணம் கொடுக்க மனசில்லாமல் இருக்கின்றன. அதனால், வறுமைக்கோடு ஓர் மாபெரும் புதைகுழியாக மாறி, இன்னும் நிறையப் பேரை தனக்குள் புதைத்தபடி இருக்கிறது. இந்த இடைவெளியை எதைக்கொண்டு நிரப்புவது? இதனால் சமூக அமைதி கெடாமல் எப்படித் தடுப்பது?

'மைக்ரோசொப்ட்' நிறுவனர் பில் கேட்ஸ், 'ஸாரா' பஷன் நிறுவனங்களின் உரிமையாளர் அமான்சியோ ஓர்டேகா, 'பெர்க்ஷயர் ஹேத்வே' முதலீட்டு நிறுவனத் தலைவர் வாரன் பஃபெட், மெக்சிகோ டெலிகொம் நிறுவனத் தலைவர் கார்லோஸ் ஸ்லிம், 'அமேசான்' நிறுவனர் ஜெஃப் பெஜோஸ், 'பேஸ்புக்' நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க், 'ஆரக்கிள்' நிறுவனர் லார்ரி எல்லிசன், 'ப்ளூம்பெர்க்' நிறுவனத்தின் தலைவர் மைக்கேல் ப்ளூம்பெர்க் ஆகியோர்தான் அந்த எட்டுப் பேர்.



'அடித்தட்டு மக்களின் வருமானத்தைச் சுரண்டி, பணக்காரர்கள் வளர்ந்து விடவில்லை' என தர்க்கம் பேசினாலும் இன்றைய பொருளாதார முறை, மறைமுகமாக ஏழைகளை இன்னும் ஏழைகளாக்கி, பணக்காரர்களை வளரச் செய்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு ஏக்கர் நிலத்துக்குள் அடைத்து விட முடிகிற எட்டுக் குடும்பம், பூமி உருண்டையின் சரிபாதி மக்களுக்கு இணையான வளங்களுடன் வாழ்கிறது.

இந்த எட்டு பேர் கைவசம் இருக்கும் அதே அளவு பண மதிப்புதான், உலகின் சரிபாதி மக்கள் தொகையிடம் இருக்கிறது என்றால், இந்த ஏற்றத்தாழ்வு எப்போது சரியாவது?

'இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வும்... இனம், சாதி மற்றும் மதங்களின் பெயரால் சமூகம் பிளவுபடுவதும்தான் உலகத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல்' என எச்சரிக்கிறது ஒக்ஸ்பாம்.

கடந்த ஆண்டின் ஒக்ஸ்பாம் அறிக்கை, 'வெறும் 62 பணக்காரர்கள், உலகின் சரிபாதி மக்களிடம் இருக்கும் அளவுக்கான சொத்துக்களை வைத்திருக்கிறார்கள்' என்றது. இந்த ஆண்டு, இந்த எண்ணிக்கை வெறும் எட்டு எனக் குறைந்திருக்கிறது. ஏன் இப்படி ஆனது? "இந்தியாவும் சீனாவும்தான் காரணம்" என்கிறது ஒக்ஸ்பாம். "புதிதாகக் கிடைத்த புள்ளிவிபரங்கள், இந்த இரண்டு நாடுகளிலும் வறுமையில் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை உணர்த்துகின்றன" எனச் சொல்கிறது ஒக்ஸ்பாம் அறிக்கை.

இந்த ஏற்றத்தாழ்வுக்கு என்ன காரணம்? 'விலைவாசி உயரும் அளவுக்கு சம்பளம் உயர்வது இல்லை... பெரிய நிறுவனங்கள் இலாபத்தை அதிகரிக்க, தங்களுக்குக் கீழே இருக்கும் சிறு நிறுவனங்களையும் விநியோகஸ்தர்களையும் நெருக்குகின்றன... வரி ஏய்ப்பு பெரிய அளவில் நடக்கிறது... பெரும் பணக்காரர்களுக்கு நிறைய பணம் சென்று சேர்வதைப் போலவே வியாபார ஒப்பந்தங்களும் அரசுத் திட்டங்களும் வடிவமைக்கப்படுகின்றன' என்கிறது இந்த அறிக்கை.

உலகின் 70 சதவிகித மக்கள், ஏழை நாடுகளில் வசிக்கிறார்கள். தினசரி வாழ்க்கையே இவர்களுக்குப் போராட்டமாக இருக்கிறது.

கடந்த 1988 ஆம் ஆண்டை விட 2011 ஆம் ஆண்டில், வறுமையின் அடித்தட்டில் இருக்கும் 10 சதவிகித மக்களின் வருமானத்தைவிட உயர்தட்டில் இருக்கும் ஒரு சதவி கித பணக்காரர் களின் வருமானம் 182 மடங்கு உயர்ந் திருக்கிறது.

ஓர் சோக உதாரணம்... வியட்நாம் நாட்டின் நம்பர் வன் பணக்காரர் ஒருநாளில் சம்பாதிக்கும் பணத்தை அடைவதற்கு, ஒரு அடித்தட்டு குடும்பத்தைச் சேர்ந்த மனிதர் பத்து ஆண்டுகள் உழைக்க வேண்டியிருக்கிறது.

உலக நாடுகள் அனைத்தும் இராணுவத்துக்கு செலவழிக்கும் தொகையை ஓராண்டுக்கு நிறுத்தி வைத்தால், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் மக்களில் மூன்றில் ஒரு பங்கினரை மேலே தூக்கிவிடலாம்.

ஆயுதங்களுக்கு செலவழிக்கத் தயங்காத நாடுகள், ஏழைகளின் ஆகாரத்துக்குப் பணம் கொடுக்க மனசில்லாமல் இருக்கின்றன.

அதனால், வறுமைக்கோடு ஓர் மாபெரும் புதைகுழியாக மாறி, இன்னும் நிறையப் பேரை தனக்குள் புதைத்தபடி இருக் கிறது.







இந்த இடைவெளியை எதைக்கொண்டு நிரப்புவது? இதனால் சமூக அமைதி கெடாமல் எப்படித் தடுப்பது?

சில ஆலோசனைகளை, உலக நாடுகளுக்கு ஒக்ஸ்பாம் தருகிறது. குறைந்தபட்ச சம்பளத்தை உயர்த்த வேண்டும்.

ஒரே வேலையை ஒரே மாதிரி செய்பவர்களுக்கு ஏற்றத்தாழ்வான சம்பளம் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

எல்லோருக்கும் சமூகப் பாதுகாப்பு தருவதற்கு தனி நிதி ஒதுக்க வேண்டும். வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும்.

கல்வியும் சுகாதார வசதியும் எல்லோருக்கும் தரமாகக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இவற்றைச் செய்யுமா உலகம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருதிரு கண்கள்!

பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவரின் தள்ளும் சாதனைதான் இப்போது இன்டர்நெற் வைரல் எழுதித்தள்ளினாரா அல்லது மாரத்தான் கணக்காக பேசித் தள்ளினாரா என்பதற்கு என்ன சாய்ஸை சொன்னா எல்லாமே தப்பு. கணக்கு பரீட்சைக்கு பதில் தெரியாமல் திருதிருவென முழிப்போமே அதேதான். என்ன கொஞ்சம் கண்கள் எக்ஸ்ட் ரீமாக வெளியே வருகிறது அவ்வளவே அவ்வளவுதான். ஃபேமஸாக அதுபோதுமே!

இன்டர்நெற்றில் புதிய செலி பிரிட்டியாக அவதரித்து விட்டார் அகமது அலி. ஏறத்தாழ தன் கண்களின் உள்ளிருந்து 10 மி.மீ. அளவு கண்களை வெளியே தள்ளி உலகத்திற்கே மரண பீதி ஏற்படுத்தியுள்ளார் அகமது அலி.

சென்ற ஆண்டு இதுபோல முயற்சிக்கும்போது வெளியே வந்த கண்களைப் பார்த்து தானே பயந்து கண்களில் ஏதோ கோளாறு என பீதியாகி விட்டேன். ஆனால் இப்படி கண்களை வெளியே தள்ளுவதால் எந்த பாதிப்பும் இதுவரை எனக்கு ஏற்படவில்லை என டாப்கியரில் பேசுகிறார் அகமது அலி. முதலில் இவரது கண்வைத்தியர் இவரது திருதிரு கண்கள் பயிற்சிக்கு 144 போட்டாலும் கண்களுக்கு பாதிப்பில்லை என்பதால் கின்னஸ் முயற்சிக்கும் பூங்கொத்து கொடுத்துள்ளார்.

# மீன்பிடிக்கும் ஹைட்ரோஜெல் ரோபோட்!

எம்.ஐ.டி. விஞ்ஞானிகள் அண்மையில் நீரிலுள்ள மீன்களைப் பிடிக்கும் நிறமற்ற ஹைட்ரோஜெல் ரோபோட்டுகளை உருவாக்கியுள்ளனர்.

'வளையும் தன்மை கெண்ட இந்த ஹைட்ரோஜெல் ரோபோட்டுகளை உருவாக்குவதில் நீரின் பங்கு அதிகம். தற்போது நீரில் பந்துகளை தள்ளுவது, மீன்களைப் பிடிப்பது ஆகியவற்றை சிறப்பாக செய்யும் இந்த ரோபோட்டுகள் பல்வேறு நீர் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும்' என்கிறார்கள் பல்கலையின் எந்திர பொறியியல் ஆராய்ச்சியாளர் ஷின்குவா சாவ் மற்றும் இவரது மாணவரான ஹியூன்வூயுக் ஆகியோர். ஹைட்ரோஜெல் சோதனை வெற்றியடைந்தால் இது மருத்துவத்தில் பயன்படும் வாய்ப்புண்டு.

மென்மையான ரோபோட்டுகளின் வகையைச் சேர்ந்த இந்த ஹைட்ரோஜெல் எளிதில் மட்கக் கூடியது என்பதால் சிலிகான்களைப் போல் சூழலுக்கு மாசுபாடு ஏற்படுத்துவதில்லை.


மருத்துவத்தில் இதன் பயன்பாடுகள் இதன் நீளும் தன்மை செயற்பாடு பொறுத்தே அமையும் வாய்ப்புள்ளது.

# மூளையில் ஐடியா வேட்டை!

பாச சுரங்கமாய் பழகும் நண்பரோ எரிமலையாய் எரிச்சல் தரும் எதிரியோ யாராக இருந்தாலும் அவ்வப்போது அவர்களின் மனதில் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என ஒரு சின்ன மைக்ரோபோன் வைத்தால் சுதாரிப்பாக பிழைக்கலாமே என்ற லொஜிக் ஐடியா வராதவர்கள் யார்தான் இருக்கமுடியும் சொல்லுங்கள்?

தகவல் திருட்டு என்பது இன்றைய உலகில் பிரெட்டும் ஜாமும் போல ஸ்மார்ட்போன்கள், கம்பியூட்டர்களில் உள்ள தகவல்களை இணையத்தில் இணைந்தபின் காப்பாற்றுவது மிகவும் கடினம். தனிப்பட்ட நபர்கள் தாண்டி அரசின் இராணுவ அமைப்பு கம்பியூட்டர்களையும் உளவு பார்ப்பது பஷனாகி வருகிறது. தங்போது கம்பியூட்டர்களைத்தாண்டி பல விடயங்களையும் உருவாக்கும் ஒருவரின் மூளையில் தோன்றும் ஐடியாக்களை அறிந்தால் ஹவ் ஈஸ் இட்? இது சயின்ஸ்பிக்சன் கதையல்ல. வோஷிங்டனில் நடந்த எனிமா பாதுபாப்பு மாநாட்டில் ஆராய்ச்சியாளர் தாமரா போனாகி மூளையை உளவறியும் Flappy Whale தொழில்நுட்பத்தை உலகத்திற்கே அறிமுகப்படுத்தியுள்ளார்.

பிளாப்பி வேல் டெக்னிக் எனும் ஒரு விளையாட்டு. இதில் கார், ரெஸ்ரோரெண்ட் இன்னும் பலவும் நிறைந்திருக்கும். இதன் வழியே ஒருவர் எதை தேர்ந்தெடுக்கிறார், உடல் நலம் குறித்த எண்ணங்கள் ஆகியவற்றை அவரின் தேர்வுகளைக்கொண்டே கணிக்க முடியும். இதனை அவர் இணையப்பாதுகாப்பு, பிரைவசி, உயிரியல் கருவிகள் ஆகியவற்றுக்கும் பயன்படுத்த உள்ளார். நமது உணர்வுகளை நாம் சொல்லாத செய்திகளையும் கூறுவது நம் உடலிருந்து வெளிப்படும் எலக்ட்ரிக் கிக்னல்களை சரி



யானபடி மொழி பெயர்த்தால் ஒருவரின் எண்ணங்களை எளிதாக படம் பிடித்துவிடலாம் என படுகெத்தாக பேட்டி தட்டுகிறார் ஆராய்ச்சியாளர் போனாசி.

இது இன்னும் முழுமை பெறாத கருவி. விர்ச்சுவல்ரியாலிட்டி ஹெட்செட்களிலும் , ஃபிட்னெஸ் கருவிகளிலும் பயன்படுத்தப்படும் போது பெறப்படும் தகவல்கள் மனிதர்களின் உடலிலிருந்து வெளியாகும் எலக்ட்ரிக் சிக்னல்கள் குறித்த ஆராய்ச்சிக்கு எளிதில் பயன்படுத்த உதவும். இன்று இதெல்லாம் சாத்தியமா? என்ற கேள்வி இருந்தாலும் நம் உடலிலிருந்து வெளியாகும் இந்த எலக்ட்ரிகல் சிக்னல்களின் மூலம் நம்மைக் குறித்து பலரும் அறிவதும், நம் ஐடியாக்களை அமேஜிங்காக அமுக்குவதும் நாளை நடக்கும் வாய்ப்பு இல்லையென்று கூறமுடியாது. நாம் இன்று பயன்படுத்தும் பல தொழில் நுட்பங்களும் முதலில் மிஷன் இம்பாஸிபிள் என்று கூறப்பட்டவைதானே!



"நம் நாட்டில் வருமானம் குறைந்து வருகிறது மன்னா!"

"அரண்மனை மொட்டைமாடியில் செல்போன் டவர் அமைக்க, டெண்டர் விடுவோமா அமைச்சரே?"



"அந்தக் கட்சித் தலைவர் பட்டிமன்ற நடுவராமே!"

"ஆமா... தற்போது மக்களுக்குத் தேவையானது பணமா? பாசமா? என தலைப்பு வைச்சிருக்கிறாரே!"



"நம்ம நாட்டுல தேசவிரோதிங்க அதிகமாகிட்டாங்க"

"எப்படிச் சொல்றீங்க தலைவா?"

"எந்தப் போராட்டமா இருந்தாலும் எனக்கு எதிரா கோஷம் போடுறாங்களே!"



"அமைச்சரே, அரண்மனை வைத்தியரை விரைவாக வரச்சொல்லுங்கள். வலி தாங்க முடியவில்லை"

"ஜல்லிக்கட்டுக் காளையோடு மட்டும் செல்பி எடுக்க வேண்டாம் என்று அப்போதே சொன்னேன், கேட்டீர்களா மன்னா!"



"நான் இவ்வளவு உருக்கமா பேசியும் ஒரு பயலுககூட பீல் பண்ணின மாதிரி தெரியலையே!"

"கண்ணீர்ப்புகை குண்டு வீசிடலாமா தலைவரே?"



"என்ன... தலைவர் திடீர்னு பின்னாடி திரும்பி நின்னு பேசுறாரு?"

"நான்தான் சொன்னேனே, அவர் முன்னாடி ஒரு பேச்சு பின்னாடி ஒரு பேச்சு பேசுவாருன்னு!"



"எதிரியின் முன் நின்றுகொண்டு பயந்து நடுங்குபவன் நான் அல்ல!"

"உங்கள் வேகம் யாருக்கு வரும் மன்னா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நொக்-அவுட்' நாயகி... சாதனை வீராங்கனை மேரி கோம்!

'வாழ்க்கை எப்போதும் அழுத்தம் நிறைந்தது. அதை எப்படிக் கையாள்வது என்பதை அவரவர்தான் கற்றுக்கொள்ள வேண்டும்" - இந்த பொன்னான வார்த்தை களுக்குச் சொந்தக்காரர் ஒரு தத்துவஞானி யல்ல, குத்துச்சண்டை விளையாட்டின் அத்தனை நுணுக்கங்களையும் கற்றுத் தேர்ந்திருக்கும் வீராங்கனை மேரி கோம் சொன்னது.

போர் மேகச்சூழலுக்கு நடுவே பூத்த பூவாக, மணிப்பூர் மண்ணிலிருந்து வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டங்களைச் சந்தித்து, லைம் லைட்டில் பிரகாசிக்கிறார் மேரி கோம்.

இந்தியாவின் மிகச்சிறந்த பொக்ஸர்களில் மேரி கோமுக்கு என்றுமே தனி இடம் உண்டு. 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான முன்னேற்பாடுகள் கனகச்சிதமாக நடந்துகொண்டிருந்த நேரம் நாடே எதிர்ப்பார்ப்புகளுடன் காத்திருந்தது. காரணம், மேரிகோம். அந்த வருடம் ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறுவதற்காக இந்தியா விலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஒரு குத்துச்சண்டை வீராங்கனை அவர் மட்டும்தான். விளையாட்டுலக ரசிகர்களின் எதிர்பார்ப்பைக் கொஞ்சம்கூட வீணடிக்காமல், ஃப்ளைவெயிட் என்னும் பெண்களுக்கான 51 கிலோ எடை பிரிவில் வெண்கலம் வென்றார் மேரி.

இச்சாதனைக்குச் சொந்தக்காரியான மேரி, விளையாட்டுக்குத் துணை நிற்கும் அளவுக்கு வசதி படைத்த குடும்பத் தைச் சேர்ந்தவர் அல்ல. ஏழ்மை யான விவசாயக்கூலி குடும் பம்தான் மேரியுடையது.

பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் சுதந்திரம் மட்டும் மேரிக்குக் கிடைத்திருந்தது. அதே பள்ளிதான் அவருக்கு விளையாட்டின் மீதான ஆர்வத்தையும், குறிப்பாக குத்துச்சண்டையின் மீதான நேசத்தையும் வளர்த்த பெருமைக்குரியது. மேரி கோமின் இரத்தத் தில் இயல்பிலேயே ஸ்போர்ட்ஸ் கலந்திருந்தது. ஈட்டி எறிதல், 400 மீ ஓட்டத்தில் கில்லி. அந்த சமயத்தில் 1998 ஏசியன் கேம்ஸில் மணிப்பூரைச் சேர்ந்த டிங் கோசிங் தங்கம் வென்று திரும்ப, "நானும் ஒருநாள் குத்துச்சண்டையில் தங்கம் வெல்வேன்" சபதம் எடுத்தார் மேரி கோம். அதன்பின், தன் கவனத்தை வேறு எதிலும் சிதற விடாமல் பொக்ஸிங் பக்கம் திருப்பினார். துன்பம், துயரம், வறுமை என வாழ்க்கையில் பல்வேறு போராட்டக்களங்களைச் சந்தித்து மீண்ட மேரி கோமுக்கு, குத்துச் சண்டைக்களம் அவ்வளவுகடினமான தாகத் தெரியவில்லை.

அதுதான், அந்த இரும்பு மனுஷியை 2001 இல் இருந்து 2014 வரை தொடர்ச்சியாக வெற்றிகளையும், பதக்கங் களையும் குவிக்க வைத்தது. 2000இல் குத்துச்சண்டைதான் தன்னுடைய வருங்காலம் என்று தெளிவாக முடிவெடுத்தார் மேரி கோம். அதற்கடுத்த வருடமான 2001 இல், பென்சில்வேனியாவில் நடைபெற்ற உலகள விலான பெண்கள் குத்துச்சண்டைப்போட்டியில்கலந்து கொண்ட மேரிகோம், சிறுத்தையாய் சீறிப் பாய்ந்து குத்துச்சண்டைக் களத்தில் சக வீராங்கனையை வீழ்த்த முயன்ற நேரத்தில், முதல் அனுபவம் என்பதால் இரண்டாவது இடத்தையே பிடிக்கிறார். ஆனால், அதற்கு பதிலடியாக 2002, 2005, 2006, 2008, 2010 என 5 ஆண்டுகள் தொடர்ச்சியாக உலக குத்துச் சண்டை சம்பியன்ஷிப் (World Amateur Boxing champion) தொடரில் தங்கம் வென்று, தன்னை நிரூபித்தார் மேரி.

ஆம், ஐந்து முறை உலக சம்பியன். கூடவே, பங்கேற்ற ஆறு உலக சம்பியன்ஷிப் போட்டிகளிலும் பதக்கம் வென்றவர் என்ற பெருமை வேறு எந்தப் பெண் பொக்ஸருக்கும் கிடைக்காத பெருமை. ஆக, ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் முன்பே, குத்துச்சண்டை உலகில் தனி முத்திரை பதித்துவிட்டார். ஆனால், லைம் லைட்டுக்கு வர ஒலிம்பிக் பதக்கம் தேவைப்பட்டது.



'தங்கத்தை விலை கொடுத்து வாங்காதீர்கள்... அதை உங்கள் உழைப்பின் சம்பளமாக வென்றிடுங்கள்' என்பது அந்தத் தங்க மங்கையின் தாரக மந்திரம்.

மேரி மணம் புரிந்துகொண்டது அவருடைய மனத்தைப் புரிந்துகொண்ட கருங் ஆன்லர் என்னும் கால்பந்து வீரரை. இருவருக்கும் இரட்டைக் குழந்தைகளான ரச்சுங்வர், குப்னிவர் மற்றும் ப்ரின்ஸ் என மூன்று ஆண் குழந்தைகள். திருமணத் துக்குப் பிறகு குத்துச்சண்டைக்கு சிறிது இடைவெளி விட்டிருந்த மேரி, இரட்டை மகன்கள் கைக்குழந்தையாக இருக்கும்போதே மீண்டும் பொக்ஸிங் ரிங்கில் குதித்தார்.

தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவித் தார். குழந்தைகளுடனேயே பயணித்து, 2008 இல் சீனாவில் நடந்த உலகளவி லான பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்தார். பத்மஸ்ரீ, அர்ஜுனா, கேல் ரத்னா என இவருடைய அலுமாரியில் ஏகப்பட்ட விருதுகள். ராஜ்யசபா எம்.பி. பதவியும் அவரைத் தேடி வந்தது.

"ஒவ்வொரு முறையும் நான் பெற்ற விருதுகளையும், பதக்கங்களையும், மாபெரும் மனிதர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் பார்க்கும்போது இது நானா என்ற சந்தேகம் எனக்குள் எழும். ஆனால், இது போதாது என்பதால்தான் இப்படித் தோன்றுகிறது என்று மீண்டும் உத்வேகத்துடன் குத்துச்சண்டைக்குக் கிளம்பிவிடுவேன்" ஒருமுறை மேரிகோம் உதிர்த்த வார்த்தைகள் இவை. பொலிவுட்டில் 2014 ஆம் ஆண்டில் மேரி கோமின் வாழ்க்கை, ப்ரியங்கா சோப்ராவின் நடிப்பில் பயோகிராபியாக வெளிவந்தது. 2013 ஆம் ஆண்டில் வெளிவந்த மேரிகோமின் ஆட்டோ பயோ கிராபி புத்தகத்தின் பெயர் 'அன்ப்ரேக்கபிள்'. இன்றுவரை ஒரு வீராங்கனையாக மேரி கோமின் சாதனைகளும் அன்ப்ரேக்கபிள்தான். (க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: இளமை கொலுவிருக்கும்
திரைப்படம்: ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்
பாடியவர்: பி.பி. ஸ்ரீனிவாஸ்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி



ஓஹோஹோஹோ ஹோ ஹோ ஹோ ஹோ
அஹா அஹா ஹ ஹா ஹா ஹா
ஓஹோ ஓஹோ ஓஹோஹோ

இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே
இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

அணைத்து வளர்ப்பவளும் தாயல்லவோ?
அணைப்பில் அடங்குவதும் அவளல்லவோ?
அணைத்து வளர்ப்பவளும் தாயல்லவோ?
அணைப்பில் அடங்குவதும் அவளல்லவோ?
கவிஞர் பாடுவதும் கலைஞர் நாடுவதும்
இளைஞர் தேடுவதும் பெண்ணல்லவோ? பெண்
இயற்கையின் சீதனப் பரிசல்லவோ?
இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

பொன்னும் பொருளும் வந்து மொழி சொல்லுமா? ஒரு
பூவைக்கு மாலையிடும் மணம் வருமா?
பொன்னும் பொருளும் வந்து மொழி சொல்லுமா? ஒரு
பூவைக்கு மாலையிடும் மணம் வருமா?
இன்று தேடி வரும் நாளை ஓடிவிடும்
செல்வம் சிரித்தபடி அமுதிடுமா? எந்த
செல்வமும் பெண்மையின் சுகம் தருமா?

இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே
இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

# கனவுகளும் பலன்களும்



வேறொருவர் குழந்தைக்குப் பாலூட்டுவது போலக் கனவு கண்டால் காதலில் துரதிர்ஷ்ட வசமான சம்பவங்கள் நிகழும். திருமணமாகாத பெண் இதுபோலக் கனவு கண்டால் காதலனால் கைவிடப்படுவாள்.

தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டுவது போலக் கனவு கண்டால் காதலில் துரதிர்ஷ்ட வசமான சம்பவங்கள் நிகழும். திருமணமாகாத பெண் இதுபோலக் கனவு கண்டால் காதலனால் கைவிடப்படுவாள்.

தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டுவது போலக் கனவு கண்டால் நல்ல அதிர்ஷ்டம் ஏற்படும்.

அழுக்கடைந்த கிழிந்து போன ஆடைகளை அணிந்த மெலிந்து போன குழந்தைகளை கனவில் கண்டால் புகழுக்குக் களங்கம் ஏற் படும்.

கனவில் கயிறு, நகை வந்தால்

தோட்டத்தில் இருப்பது போல கனவு கண்டால் இனிமையான தகவல் கிடைக்கும். அதனால் இல்லத்திலும் உள்ளத்திலும் மகிழ்ச்சி ஏற்படும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். திருமணம் ஆகாத வர்களுக்கு திருமணம் நடக்கும். நட்பால் நன்மை ஏற்படும். பட்டுப் போன மரத்தை கனவில் கண்டால் சங்கடமான நிகழ்ச்சிகள் நடக்கும். கடன் கொடுத்தவர்கள் அதிகமாகவே உங்களுக்கு தொல்லையும் கொடுக்க ஆரம்பிப்பார்கள். அக்கம் பக்கம் வீடுகளால் மனசங்கடங்கள் உருவாகும்.

முள் செடியில் உங்கள் துணி மாட்டி கொண்டது போல கனவு கண்டால் பழைய பிரச்சினையில் இருந்து தப்பிப்பீர்கள். இருந்தாலும் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய சூழ்நிலை இது. புதிய பிரச்சினை உருவாகும். அதிலிருந்து தப்பிக்கும் வழியை தெரிந்து கொள்வீர்கள். இருந்தாலும் அந்த பிரச்சினையால் குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள், ஒற்றுமையில் விரிசலும் ஏற்படும்.

செடியில் இருந்து பூக்களை பறிப்பது போல கனவு கண்டால் நல்ல பலன்கள் கிடைக்கும். நிலம், வீடு, நகை வாங்கும் யோகம் ஏற்படும். வேலையில் திருப்தியான நிலை இருக்கும். வியாதியால் அவதிப்பட்டவர்களுக்கு நல்ல மருத்துவத்தால் உடல் பிரச்சினை விலகும். கயிற்றை இரு கரங்களால் பிடித்து தொங்குவது போல கனவு கண்டால் விபத்துக்கள் உண்டாகும். ஆகவே பயணம் செல்லும் போது எச்சரிக்கையாக செல்வது நல்லது. ஆபத்தில் இருந்து உங்களை விடுபட வைக்க சில நல்ல உள்ளம் படைத்தவர்கள் வருவார்கள். அவர்களின் வருகை உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் மேன்மையே ஏற்படுத்தும்.

கயிற்றை பிடித்து தொங்கும் போது யாராவது நீங்கள் பிடித்து தொங்கி கொண்டிருக்கும் கயிற்றை அறுப்பது போல கனவு கண்டால் மோசமான குணம் உடையவர்களின் நட்பால் அவதிப்படுவீர்கள். அவர்கள் யார் என்று தெரிந்து கொண்டு அவர்களின் நட்பை துண்டித்து விடுவதன் மூலம் பாதகத்தில் இருந்து தப்பிக்கலாம். (தொடரும்)

# இப்படித்தான்

## பெரும்பாலான வேலைகள், ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே செய்யப்படுகின்றன

சாப்பிடுகிறோம் என்றால், பசி என்கிற பிரச்சினையைத் தீர்க்கிறோம். வேலைக்குப் போகிறோம் என்றால் குடும்பச் செலவுகள், சேமிப்புக்குப் பணம் தேவை என்கிற பிரச்சினையைத் தீர்க்கிறோம். இப்படி இன்னும் பல உதாரணங்களைச் சொல்லலாம்.

அதே சமயம் இந்த வேலைகளைச் செய்யும் போது நாம் அதனை உணர்ந்திருப்பதில்லை. அதாவது எதற்காகச் செய்கி றோம் என்று தெரியாமலே செய்கிறோம். இதன் மூலம் பல நேரங்களில் நாம் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில்லை. சாப் பாட்டுக்கே இப்படி யென்றால் நமது வேலை தொழில் சார்ந்த விடயங்களெல்லாம் எந்த அளவு முக்கியமானவை! அவற்றில் யோசிக்காமல் இறங்கலாமா?






பல தொழில்கள் ஆரம்பத்திலேயே ஊற்றி மூடப்படுவது இதனால் தான். என்ன பிரச்சினை, அதை நாம் எப்படித் தீர்க்கப் போகிறோம் என்கிற தெளிவில்லாமல் களத்தில் குதித்தால் காசும் உழைப்பும் வீண் மனக் கசப்போடும் வெளியே வருவோம்.

மாறாக இதனை இத ற்காகச் செய்கிறோம் என்கிற தெளிவோடு ஒரு விடயத்தில் ஈடுபடும்போது வெற்றி பெறுவதற் கான சாத்தியங்கள் அதிகரிக்கும். நமது உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். எந்வொரு பிரச்சினையைப் பற்றியும் தெளிவான சிந்தனைக்கும் தீர்வு காணலுக்கும் பல உத்திகள் இருக் கின்றன. அவற்றை இன்றைய சூழ் நிலைக் கேற்றபடி தொகுத்துத் தந்திருக்கும் ஒரு சமீபத்திய புத்தகம் Design A Better Business இதனை எழுதியிருப்போர் பேட்ரிக் வான் கிடர் பிஜல், ஜஸ்டின் லோகிட்ஜ் லிஸாகே சாலொமன் இவர்களோடு முப்பதுக்கும் மேற்பட்ட சிந்தனையாளர்கள், வெற்றியாளர்கள் தங்களுடைய வெற்றி சூத்திரங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சிந்தனையானது ஏழு படி நிலைகளில் தொகுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றை ஒன்றுக்குப்பின் ஒன்று என இல்லாமல் ஓர் அழகான யதார்த்தமான வளையமாக்கித் தந்திருக்கிறார்கள். இதோ இந்தப்படத்தில் உள்ளது போல

1. தயாராதல்
2.பார்வக்கோணம்
3.புரிந்து கொள்ளல்
4.யோசனைகளைத் திரட்டுதல்
5.முயன்று பார்த்தல்
6.உறுதிப்படுத்தல்
7.(மறுபடி) பார்வைக்கோணம் தேவைப்பட்டால் 3 முதல் 6 வரையுள்ள படி நிலைகளை மீண்டும் மீண்டும் நிகழ்த்துதல் நாம் விரும்பும் தீர்வு கிடைக்கும் வரை இந்த வளையம் தொடர வேண்டும்.
8. சரியான தீர்வு கிடைத்த பிறகு விரிவுபடுத்துதல் இந்தப்படி நிலைகளைப் புரிந்து கொள்வதற்கு ஓர் எளிய பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பூங்கா இருக்கிறது. அங்கே தினமும் நிறைய மக்கள் வருகிறார்கள். அவர்கள் மத்தியில் ஒரு கடை போட வேண்டும் என்று நீங்கள் தயாராகிறீர்கள். ஆனால் எந்தக் கடை போட்டால் இலாபம் இருக்கும் என்று தெரியவில்லை உதாரணமாக நடக்கிறவர்களுக்கு ஆரோக்கியமான பானங்களை விற்கலாமா? செய்தித்தாள்களை விற்கலாமா? இரத்தப் பரிசோதனைக்கு ஏற்பாடு செய்யலாமா? வீட்டுக்குத் தேவையான காய்கறிகள் போன்றவற்றை விற்கலாமா? குழந்தைகளுக்கான பொம்மைகள், காதலர்களுக்கான ரோஜாக்களை விற்கலாமா? பெண்களுக்கு மருதாணி போட்டு விடலாமா? யோசித்தால் இப்படிப் பலப்பல உத்திகள் தோன்றும். ஆனால் அவை எல்லாமே யதார்த்தத்தில் சரிப்பட்டு வருமா? என்பது தெரியாது. அவற்றை முயன்று பார்த்து உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக் பூங்காவில் செய்தித் தாள் விற்கும் தொழிலைத் தொடங்குவதற்கு முன்னால் ஓரிரு நாட்கள் குறைந்த முதலீட்டில் ஐந்தே ஐந்து செய்தித்தாள்களைக் கொண்டு வந்து விற்றுப்பார்க்கலாம். மக்கள் அதை வாங்குகிறார்களா? ஒருவேளை வாங்கவில்லை என்றால் ஏன் வாங்கவில்லை என்பதையெல்லாம் நேருக்கு நேர் பார்த்து அவர்களுடன் பேசித் தெரிந்து கொள்ளலாம்.




இந்த வளையைச் சிந்தனையின் முக்கியமான நன்மை ஆரம்ப நிலையில் இதற்கு அதிகம் பணம் தேவையில்லை. சின்னச்சின்ன முயற்சிகள் தாம் சரியான யோசனை கையில் சிக்கும் வரை, இதைத்தான் செய்ய வேண்டும் என்கிற உறுதி கிடைக்கும் வரை தொடர்ந்து முயன்று கொண்டே இருக்கலாம். அதன் பிறகு விரிவுபடுத்துதல் என்கிற கடைசிப் படி நிலைக்கு வரலாம் .


இந்தப் படிநிலைகள் ஒவ்வொன்றுக்காகவும் பலப்பல உபகரணங்களையும் இந்தப் புத்தகம் வழங்குகிறது. அவற்றைப் பயன்படுத்தி உங்களுடைய சிந்தனையைக் கூர்தீட்டிக் கொள்ளலாம். பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகளைக் கண்டு முன்னேறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# எமன்








திரைவிமர்சனங்கள்

தமிழ் சினிமாவில் எப்போதும் வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பவர் விஜய் ஆண்டனி. இவர் இசையமைப்பாளராக இருந்து ஹீரோவாக அறிமுகமாகிய படம் நான். அப்படத்தின் இயக்குநர் ஜீவா ஷங்கர் நீண்ட வருடங்களுக்கு பிறகு மீண்டும் விஜய் ஆண்டனியுடன் இணைந்து இன்றைய ட்ரெண்டிற்கு ஏற்ற ஒரு அரசியல் கதையை படமாக கொடுத்துள்ளார்.

அரசியல் ஆட்டம் சூடுபிடித்ததா? பார்ப்போம். விஜய் ஆண்டனி அப்பா அரசியலில் பெரும் புள்ளியாக உள்ளார். அவரை பதவிக்காக தங்க பாண்டி என்பவர் கொல்கிறார்.

அதைத் தொடர்ந்து விஜய் ஆண்டனியின் அம்மாவும் இறக்க, தாத்தாவின் அரவணைப்பில் வாழ்கிறார். ஒரு கட்டத்தில் பணத்திற்காக சிறை செல்கிறார் விஜய் ஆண்டனி.

அங்கிருந்து Ex எம்.எல்.ஏ. தியாகராஜன் நட்பு கிடைத்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, ஒரு கட்டத்தில் அரசியலுக்கு வரவும் முடிவு செய்கிறார். இவரின் அரசியல் ஆசைக்கு பலர் முட்டுக்கட்டாக இருக்கின்றனர்.

அதை அறிந்து கொண்ட விஜய் ஆண்டனி தன்னை சுற்றி நடக்கும் அத்தனை சூழ்ச்சிகளையும் எப்படி முறியடிக்கின்றார் என்ற சகுனி ஆட்டமே இந்த எமன்.

விஜய் ஆண்டனி எப்போதும் தனக்கு எது செட் ஆகும் என்பதை மிக தெளிவாக தெரிந்து வைத்துள்ளார், ஆர்ப்பாட்டம் இல்லாத நடிப்பு, அளவாக நடித்துள்ளார். அதிலும் அரசியல்வாதியாக அவர் மாற, ஆடும் ஆட்டம் அதிரடி காட்டுகின்றார். ஆனால், கொஞ்சமாவது கலகலப்பாக இருங்க சார், ரொம்ப டல்லாவே இருப்பது எப்போதுமே செட் ஆகுமா என்று தெரியவில்லை.

தங்கப்பாண்டி என்ற கதாபாத்திரத்தில் வரும் எம்.எல்.ஏ.மிரட்டியிருக்கிறார், திருநெல்வேலி ஸ்லாங்கில் செம்ம ஸ்கோர் செய்கிறார். விஜய் ஆண்டனியை வீழ்த்த, அவர் செய்யும் வேலைகள் ரசிக்க வைக்கின்றது.

மியா ஜார்ஜ் முதன் முதலாக ஆடல், பாடல் என வேறு முகத்தை காட்டியுள்ளார். கொஞ்சம் இப்படியும் நடியுங்கள், விஜய் ஆண்டனிக்கு பிறகு 6 அடிப்பது தியாகராஜன் தான். ஏன் சார் இத்தனை நாட்கள் நடிக்கவில்லை என கேட்கத் தோன்றுகின்றது.

அதிலும் தன் சாதிக்காரர்களை வைத்து எதிரணியை வீழ்த்த நினைப்பது, பின் அவர்களையே காரியத்திற்காக கொல்வது, என அரசியல்வாதியாகவே கண் முன் தெரிகின்றார். படம் பார்ப்பதற்கு ஏதோ ராம்கோபால் வர்மா படம் போலவே உள்ளது.

மெதுவாக நகரும் கமரா, காட்சியமைப்புகள் என ஜீவா ஷங்கர் கொஞ்சம் கமர்ஷியல் பார்முலாவில் வித்தியாசம் காட்டியுள்ளார். ஒளிப்பதிவும் அவரே என்பதால் அதிலும் பாஸ் மார்க் வாங்குகின்றார். ஆனால், மெதுவாக செல்லும் சில காட்சிகள் பொறுமையை சோதிக்கின்றது.

எடுத்துக்கொண்ட கதைக்களம், இன்றைய சூழ்நிலையில் எளிதில் மக்கள் மனதில் பதியும்.

படத்தின் வசனம், அரசியல் விஷயத்தில் சொந்த மகனை கூட நம்பமாட்டார்கள், இது சகுனியும், சாணக்கியனும் விளையாட்ற ஆட்டம் போன்றவை ரசிக்க வைக்கின்றது.

குறிப்பாக கிளைமேக்ஸில் விஜய் ஆண்டனிக்கும், தியாகராஜனுக்கு வரும் கான்வர்சேஷன் செம்ம.

மெதுவாக நகரும் திரைக்கதை, விஜய் ஆண்டனி உடனே உடனே முன்னேறுவது கொஞ்சம் அழுத்தமாக காட்டியிருக்கலாம்.

மொத்தத்தில் எமன் வேகம் குறைவு என்றாலும் விவேகமானவன்.



# கனவு வாரியம்

படம் வருவதற்கு முன்பே ஒரு சில படங்கள் பல விருதுகளை வெல்லும். அந்த வகையில் உலக திரைப்பட விழாவில் ஒரு சில விருது களை வென்ற கனவு வாரியம் இன்று உலகம் முழுவதும் வெளிவந்துள்ளது.

நாயகன் அருண் சிதம்பரம் சிறு வயதில் இருந்தே எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர், அதிகம் கேள்வி கேட்கும் பழக்கம் கொண்டவர், இவர் கேட்கும் கேள்விக்கு யாரும் பதில் அளிக்காமல் இருக்க, 8ம் வகுப்புடன் தன் படிப்பை நிறுத்திவிட்டு ரேடியோ ரிப்பேர் செய்யும் வேலையை பார்க்கின்றார்.

அதே கிராமத்தில் நாயகி ஜியாவின் அண்ணனாக பில்லா யோக்ஜேப்பி ஐடி வேலையை விட்டு கிராமத்தில் விவசாயம் செய்ய வருகின்றார், பலரும்

அதே கிராமத்தில் நாயகி ஜியாவின் அண்ணனாக பில்லா யோக்ஜேப்பி ஐடி வேலையை விட்டு கிராமத்தில் விவசாயம் செய்ய வருகின்றார், பலரும் இவரை கிண்டல் செய்கின்றனர்.

ஊரில் 18 மணி நேரம் மின்சாரம் போக, நாமே மின்சாரம் செய்தால் என்ன என்று அருண் முடிவெடுக்கின்றார், யோக்ஜேப்பியும் விவசாயத்தை மேற்கொள்ள, இருவரும் தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற்றார்களா? என்பதே மீதிக்கதை.

அருண் சிதம்பரம் நடிகர் மட்டுமன்றி அவரே இப்படத்தின் இயக்குநர், படத்தின் கதைக்கு ஏற்று சிறப்பாக நடித்துள்ளார். சில இடங்களில் மட்டும் யதார்த்தம் மீறுகின்றது. யோக்ஜேப்பி விவசாயம் செய்ய முடிவெடுத்து நிலத்தை பார்க்க, [illegible] விடயமில்லை, எந்த நிலம் எதற்கு செட் ஆகும் என்று காட்டிய டீட்டெய்ல் நல்ல தகவல்.

நாட்டின் மிக முக்கிய தேவை விவசாயம், மின்சாரம் அதை தேவை குறித்து பேசிய விதம் மனதார பாராட்டலாம். என்ன ரொமான் போஷன் படத்திற்கு எதற்கு என்றே தெரியவில்லை, சம்பந்தமில்லாமல் வந்து செல்கின்றது.

படத்தின் ஒளிப்பதிவு, எடுத்துக்கொண்ட கதைக்களம், இன்றைய தேவையை நாமே செய்யலாம் என சொன்ன விதம். எடிட்டிங் எந்த ஒரு காட்சியும் கோர்வையாகவே இல்லை. அழுத்தமில்லாத ஒரு சில காட்சிகள். மொத்தத்தில் கனவு வாரியம் அனைத்து தரப்பு ரசிகர்களின் கனவுப் படமாக இருப்பது கடினமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக்களமானது தமிழர் தாயகம்



## வெற்றியும் ஏமாற்றமும் தொடர்கிறது




தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கக்கோரி கடந்த ஒரு மாத காலப்பகுதியில் 60 இற்கும் மேற்பட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர காணாமற் போனவர்கள் தொடர்பாகவும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்து நிறுத்தக்கோரியும் சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகவும் தொடர் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளும் ஒருவார காலமாகப் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இழந்த காணிகளை மீட்கவும் பறிகொடுத்த உறவுகளைத் தேடியும் வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்ளவும் வன்முறைகளைத் தடுக்கவும் மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

விமானப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தமது சொந்த நிலங்களை அடையும் வரை தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வெற்றிபெற்றுள்ள முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமானது.

நிலங்களை மீட்கும் வரை துணிவுடன் போராடிய மக்களுக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவளித்திருந்தனர்.

கேப்பாப்பிலவு - பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக தென்பகுதியிலும் சிங்கள மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கேப்பாப்பிலவுக்கு நேரடியாக வந்தும் கூட பல நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள் ஆதரவளித்திருந்தனர்.

அத்தோடு தமிழர்களின் போராட்டம் நியாயமானதுதான் என்பதை தென்பகுதியில் வெளிப்படுத்துவதாகவும் உறுதியளித்துச் சென்றனர்.

கேப்பாப்பிலவு- பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு வடக்கில் சகல மாவட்டங்களிலும் ஆதரவு அதிகரித்துச் சென்றது. அதேவேளை கிழக்கிலும் போராட்டங்கள் வலுப்பெற்றன. நீர்கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

### கடையடைப்பு

ஜனவரி 31 ஆம் திகதி விமானப்படை முகாம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கேப்பாப்பிலவு மக்களின் காணி மீட்புப் போராட்டத்திற்கு ஆதரவளித்து முல்லைத்தீவில் பெப்ரவரி 4 ஆம் திகதி கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட வர்த்தகர்களின் முழுமையான ஆதரவுடன் இந்தக் கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### கறுப்புப் பட்டி

கேப்பாபிலவு - பிலவுக்குடியிருப்பு மக்கள் ஆரம்பித்த தொடர் போராட்டம் ஐந்தாவது நாளையெட்டிய போது இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம் சிங்கள ஆட்சியாளர்களால் தென்னிலங்கையில் கொண்டாடப்பட்டது.

ஆனால்,கேப்பாப்பிலவு மக்கள் சுதந்திர தினத்தை துக்க தினமாகவும் கரிநாளாகவும் அனுஷ்டிப்பதாக அறிவித்து அன்றைய தினம் (04.02.2017) கறுப்புப்பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

அத்தோடு கறுப்புக்கொடிகளுடன் பேரணியாக சென்று தமது எதிர்ப்பையும் பதிவு செய்தனர்.

### முற்றுகைப் போர்

பெப்ரவரி 6 ஆம் திகதி, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் அனைத்து வாயில்களையும் மூடி அரச அதிகாரிகளை உட்செல்ல விடாமல் மக்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

### நீர்கொழும்பில்

பெப்ரவரி 9ஆம் திகதி, கேப்பாப்பிலவு மக்களின் காணிவிடுவிப்பு போராட்டத்திற்கு ஆதரவாக நீர்கொழும்பில் சிங்கள மக்களின் பங்கேற்புடன் பேராட்டம் முன்னெடுக்கப்பட்டது

### வவுனியாவில்

பெப்ரவரி 10 ஆம் திகதி, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் வவுனியாவில் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### யாழ்ப்பாணத்தில்

பெப்ரவரி 11 ஆம் திகதி, தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரியும் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த பூமியில் மீள்குடியேற்றக்கோரியும் யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### பிரிட்டனில்

கேப்பாப்பிலவு - பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் பிரிட்டனில் பெப்ரவரி 12 ஆம் திகதி மாபெரும் கண்டனப் போராட்டம் நடந்தது.

### மட்டு.நகரில்

கிழக்கு மாகாணம் வடக்குடன் என்றும் இணைந்திருக்கும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவாக பெப்ரவரி 12 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

### கிளிநொச்சியில்

பெப்ரவரி 17 ஆம் திகதி ,கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் காணிவிடுவிப்பை வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### பரவிப்பாஞ்சானில்

பெப்ரவரி 20 ஆம் திகதி, காணிவிடுவிப்பைக் கோரி பரவிப்பாஞ்சான் மக்கள் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்தனர். இராணுவ முகாம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் காணிவிடுவிப்பு உத்தரவு வழங்கப்பட்டதையடுத்து கைவிடப்பட்டது.

### மாணவர்கள் போராட்டம்

பெப்ரவரி 20 ஆம் திகதி , வடக்கு மாகாணத்தில் பாடசாலை மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளைப் புறக்கணித்து காணி விடுவிப்பிற்காக களத்தில் குதித்தனர்.

### யாழில் மீண்டும்

பெப்ரவரி 22 ஆம் திகதி,கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரியும் வலி.வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிக்கக் கோரியும் யாழ்.நகரில் மீண்டும் போராட்டம் நடத்தப்பட்டது.

### விக்ஸ் காட்டில்

பெப்ரவரி 22 ஆம் திகதி , விக்ஸ் காட்டுப் பகுதி மக்கள் காணி அனுமதிப் பத்திரம் , வீட்டுத் திட்டம் வழங்குமாறு கோரி தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

### மொறட்டுவயில்

பெப்ரவரி 26 ஆம் திகதி ,பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### உரும்பிராய், மல்லாகம்

பெப்ரவரி 26 ஆம் திகதி , காணி விடுவிப்பை வலியுறுத்தி உரும்பிராய், மல்லாகம் பகுதியில் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### மன்னாரில்

கேப்பாப்பிலவு, பிலவுக்குடியிருப்பு மக்களின் காணி விடுவிப்புக் கோரிக்கைக்கு ஒட்டுமொத்த வடக்கு மாகாணமும் ஆதரவளித்தது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் மன்னாரில் பெப்ரவரி 27 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனவரி மாதம் 31 ஆம் திகதி கேப்பாப்பிலவு- பிலவுக்குடியிருப்பில் விமானப்படை முகாம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மக்களின் நிலமீட்புப் போராட்டம் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் விஸ்தரிக்கப் பட்டதோடு சர்வதேச ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மக்களின் நிலமீட்புப் போராட்டத்திற்கு அஞ்சி காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது. இருப்பினும் ஒருவாரம், ஒரு மாதம் என்று மக்களின் போராட்டங்கள் தொடர்ந்த நிலையிலேயே அவர்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் மக்கள் ஆரம்பித்த தொடர் போராட்டங்களுக்கு ஓரளவுக்கு வெற்றிகிடைத்துள்ள போதும் யாழ். மாவட்டத்தில் வலி.வடக்குப் பகுதியில் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட தமிழ் மக்களின் காணிகளை விட்டு இராணுவப் படைகள் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற வெற்று வாக்குறுதிகளுடன் போராட்டங்கள் முடிவுறுத்தப்பட்டதால் வலி.வடக்கு மக்களுக்கு நலன்புரி நிலைய வாழ்க்கையே நீடிக்கிறது.

**காண்டீபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook



## குரு என்றால் என்ன?

**சிறிய எடுத்துக்காட்டு...**

துறவி ஒருவர் குடில் ஒன்று அமைத்து, பல சீடர்களுக்கு ஞான உபதேசம் செய்து வந்தார். சாஸ்திரங்களை நன்றாக கற்றிருந்த அந்த குருவால் வாழ்க்கைத் தத்துவங்களை புரிந்து கொண்ட சீடர்கள் ஆன்மீகப் பாதையில் சென்றனர்.

அந்ததுறவியிடம் ஒருசீடனுக்கு பிடிப்பு இல்லாமல் போனது. சாஸ்திரங்களைப் படித்து, அதில் இருப்பதைத்தானே குரு நமக்கு கற்றுத்தருகிறார்.

சாஸ்திரங்களைப் படித்து நாமே அதைக் கற்றுக்கொள்ளலாமே... இடையில் குரு எதற்கு? என்ற எண்ணம் அந்த சீடனுக்குத் தோன்றியது.

அவனது எண்ணத்தை மறுநாளே செயற்படுத்தினான். குருகுலத்தை விட்டு வெளியேறினான். தனியாக குடில் அமைத்து, சாஸ்திர நூல்களைப் படிக்கத் தொடங்கினான். பசிக்கும்போது, துறவிகளைப் போலவே கிராமத்திற்குள் சென்று யாசகம் பெற்று உணவு உண்பான்.

ஒரு நாள் சீடன் சாஸ்திர நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான்.

அந்த நூலில், 'எச்சில் பரிசுத்தம். வாந்தி பண்ணினது பரிசுத்தம், இறந்தவன் போர்வை பரிசுத்தம்' என்ற வாசகங்கள் இருந்தன.

அதை அப்படியே மனதில் பதிய வைத்துக்கொண்டான்.ஒரு நாள் அவன் யாசகம் பெறுவதற்காக கிராமத்திற்குள் சென்றான்.

அப்போது அங்கு ஒரு வீட்டில் சுப நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு வந்தவர்களுக்கு உணவு விருந்து அளிக்கப்பட்டது.

உணவு சாப்பிட்ட அனைவரும், எச்சில்இலைகளை கொண்டு போய் குப்பை தொட்டியில் வீசி எறிந்து விட்டுப் போனார்கள்.

இதைக் கண்ட சீடன் கோபமுற்றான். 'சாஸ்திரம் தெரியாத முட்டாள்கள்' என்று மனதுக்குள் திட்டியபடியே ஓடோடிச் சென்று, குப்பையில் கிடந்த எச்சில் இலைகளை கையில் எடுக்க முற்பட்டான்.

அப்போது அவனை ஒரு பெரியவர் தடுத்து நிறுத்தினார். 'ஏனப்பா! பார்ப்பதற்கு ஒரு தபஸ்வி போல் இருக்கிறாய். நீ போய் எச்சில் இலைகளை எடுக்க முயற்சிக்கிறாயே... என்று விசாரித்தார்.

உங்களுக்கு சாஸ்திரம் என்ன சொல்கிறது என்று தெரியாது. அதனால்தான் என்னைத் தடுக்கிறீர்கள்.

எச்சில் பரிசுத்தம் என்று சாஸ்திரம் சொல்கிறது தெரியுமா?' என்று தனக்கு எல்லாம் தெரிந்தது போல் கூறினான் சீடன்.முதியவர் குழம்பிப் போனார். அதன் பிறகு, அவனிடம் முழுமையாக விசாரித்தார். அப்போது சாஸ்திரத்தில் தான் படித்த வார்த்தைகளை அவன் தெரிவித்தான்.

இப்போது அந்த முதியவருக்கு புரிந்து விட்டது... 'இவன் ஒரு அரைகுறை' என்று. சீடன் படித்த வாக்கியங்களுக்கான முழு அர்த்தத்தையும் அவனுக்கு எடுத்துச் சொன்னார். 'எச்சில் பரிசுத்தம்" என்பது நீ நினைப்பது போன்று இல்லை. கன்று வாய் வைத்து பால் குடித்த பிறகே, பசுவின் மடியில் பால் கறப்பார்கள்.

ஆனாலும் கூட அந்தப் பால் பரிசுத்தமானது. அதைத்தான் "இறைவனுக்கு" பாலாபிஷேகம் செய்வதற்கும் பயன்படுத்துவார்கள். அதனால்தான் எச்சில் பரிசுத்தம் என்று சொல்லியிருக்கிறார்கள்' என்று விளக்கினார்.

சீடனின் மனதில் பெரிய குழப்பம். 'அப்படியானால், வாந்தி பண்ணினது பரிசுத்தம், இறந்தவன் போர்வை பரிசுத்தம் என்பதற்கு என்ன பொருள்?' என்று வினவினான். முதியவர் புன்னகைத்துக் கொண்டே அவனுக்கு பதிலளித்தார். 'தேனீக்களின் வாயில் இருந்து சுரக்கும் தேனைத்தான் அப்படிச் சொல்லி வைத்திருக்கிறார்கள். கடவுளுக்கு தேனைக் கொண்டும் அபிஷேகம் செய்வார்கள். அதனால்தான் அப்படி கூறப்பட்டிருக்கிறது.

பட்டுப்பூச்சிகள் இறந்ததும் அதிலிருந்து பட்டு நூலைப் பிரித்தெடுத்து ஆடை தயாரிப்பார்கள். அந்தப் பட்டாடைகளையும் பரிசுத்தமாகக் கருதி, இறைவனுக்குச் சாத்தி வழிபடுவோம். அதையே இறந்தவன் போர்வை பரிசுத்தம் எனச் சொல்லியிருக்கிறார்கள்' என்று விளக்கம் கொடுத்தார்.

சீடனுக்கு சாஸ்திரத்தில் கூறியிருந்ததன் அர்த்தம் இப்போதுதான் முழுமையாக புரிந்தது.

எதையும் மேலோட்டமாகப் பார்த்து படிப்பது என்பது வாழ்க்கைக்கு உதவாது. அதன் நுட்பத்தை ஆழமாக அறிய, ஒவ்வொருவருக்கும் "குரு" என்பவர் அவசியம் தேவை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1005

Search for people, places and things | Nagendram Home


**தர்சிகா**




**கஜமாறன்**





**தனுசா**




**கௌசிகா**




**மாலினி குமார்**




**தனஞ்சயன்**




அன்புக்கு நிகர் உலகில் எதுவும் இல்லை....

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால் ஆணி தவிர்ப்பது எப்படி?



உடலின் ஒட்டுமொத்த எடையையும் தாங்குபவை கால்களும் பாதங்களும் தான். நம்முடைய இயக்கத்தின்போது ஏற்படக்கூடிய தொன்கணக்கிலான உடலின் அழுத்தத்தைத் தாங்கும் அற்புதமான அமைப்பு அது. பாதம் 26 எலும்புகளையும், 33 மூட்டுகளையும் 50க்கும் மேற்பட்ட தசைநார்களையும் இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்ட வியர்வைச் சுரப்பிகளையும் உள்ளடக்கிய அமைப்பு. உடலைத் தாங்குவது மட்டுமல்ல... உடல் சந்திக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் இடமாகவும் பாதங்கள் இருக்கின்றன.

பாதப்பராமரிப்பு இன்மையால் பூஞ்சைத் தொற்று முதல் பல பிரச்சினைகள் காலில் ஏற்படுகின்றன. இவற்றில் ஒன்று பாத ஆணி. பாதங்களின் அடிப்பாக சதைப்பகுதியில் ஏற்படுவதால், பெரும்பாலும் நம்மால் இதை ஆரம்பத்திலேயே கண்டறிய முடிவதில்லை.

### அறிகுறிகள்

பாதத்தில் தொடர் அழுத்தம் ஏற்படும்போது வெள்ளை நிறத்தில் தோல் தடித்து, சிறிய மேடு போன்று உருவாகும். தொடர்ந்து மேற்புறத் தோல் உலர்ந்து, கொப்புளம் ஏற்படும். சில நேரங்களில் சீழ் கோத்து, உடைந்து இரத்தப்பெருக்கும் ஏற்படும். நடக்கும்போதும் நிற்கும்போதும் தாங்க முடியாத வலி ஏற்படும். பொதுவாக, உள்ளங்கால்களில்தான் ஆணி ஏற்படும்.

எனினும், சில நேரங்களில் தேய்ந்த காலணிகளைப் பயன்படுத்துவது, கால்களைச் சுத்தமாகப் பராமரிக்காதது போன்றவற்றின் காரணமாகக் கால் விரல்களின் பக்கவாட்டிலும் ஆணிகள் ஏற்படலாம்.

### காரணங்கள்

'கால் ஆணி'என்பது அதிகமான உடல் அழுத்தம் காரணமாக உருவாகிறது. மேலும், அளவு குறைந்த காலணிகளை அணிவது உட்படப் பல்வேறு அழுத்தங்களால் கால்களில் ஆணி ஏற்படுகிறது.

அதேபோல சாதாரணமாக வெறும் கால்களில் நடக்கும்போது, தோல் தடித்துப்போனாலோ, இலேசாகச் சிராய்ப்பு ஏற்பட்டாலோ யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வது இல்லை. கால் ஆணி ஏற்பட இதுவும் ஒரு முக்கிய காரணம். நீரிழிவு நோய் அல்லது பெரிஃபெரல் வாஸ்குலர் நோய் **(Peripheral Vascular Disease)** பாதிப்பின் காரணமாகவும் ஆணி ஏற்படும்.

இது தவிர, காலில் ஏற்படும் அலர்ஜி காரணமாகவும் உடலில் அதிகமாக ஏற்படும் வெப்பம் காரணமாகவும், அசுத்தமான இடங்களில் உள்ள கிருமிகளாலும் இந்தப் பிரச்சினை பலருக்கு ஏற்படுகிறது.

### சிகிச்சை

மென்மையான சோப்பைப் பயன்படுத்திப் பாதத்தைக் கழுவலாம். கால்களைச் சுத்தம் செய்த பிறகு, மருத்துவர் பரிந்துரைக்கும் களிம்புகளைத் தேய்க்கலாம்.

அதேபோல், டிகெராட்டினிசேஷன் க்ரீம் **(Dekeratinization creams)** போன்ற மாய்ஸ்சரைசர் க்ரீம்களைக் கால்களில் தடவலாம்.

இந்த க்ரீம்களில் உள்ள கெராட்டின், இறந்த செல்களை அகற்ற உதவும். சிலருக்குக் கால் ஆணியைச் சரிசெய்ய அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்.

சுய சிகிச்சை செய்துகொள்வது தீங்கு விளைவிக்கும். குறிப்பாக, நீரிழிவு நோயாளியாக இருந்தால், கால்களை அகற்றவேண்டிய அளவுக்குப் பிரச்சினை பெரிதாகலாம். எனவே, மருத்துவரை ஆலோசிப்பதுதான் சரியான வழி.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கை

கால்களைச் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். பாதங்களைச் சோப்புப் போட்டுக் கழுவி, சுத்தமான துணியால் நன்கு துடைக்க வேண்டும்.

பாதத்துக்குப் பொருத்தமான சரியான அளவிலான காலணிகளை அணிய வேண்டும். அழுத்தமான ஷூக்களையோ, பெரிய அளவிலான (லூசான) ஷூக்களையோ அணியக் கூடாது.

கால் ஆணி பாதிப்புக்கு உள்ளானவர்கள், மருத்துவர்களின் ஆலோசனைப்படி அவர்களுடைய கால்களுக்குப் பொருத்தமான காலணிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

நீரிழிவு நோயாளிகள் ஆண்டுதோறும் கால்களைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

# அடிக்கடி விக்கினால் ஆபத்தா?

வேக வேகமாகச் சாப்பிடும்போது விக்கல் வரும். விக்கல் வந்தவருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தால் சரியாகிவிடும் என்று அதை முயற்சி செய்பவர்களும் உண்டு.

எப்போதாவது விக்கல் வந்தால் பிரச்சினை இல்லை. ஆனால், சிலருக்கு அடிக்கடி விக்கல் வந்துகொண்டே இருக்கும்.

தண்ணீர் குடித்தாலும் சரியாகாது. ஏன் இப்படித் தொடர்ந்து விக்கல் வருகிறது? அடிக்கடி விக்கல் வந்தால் என்ன பிரச்சினை? இதற்கு என்ன தீர்வு?

### விக்கல் ஏன்?

நுரையீரல் மற்றும் இதயம் உள்ள மேல் பகுதியையும் வயிற்றுப் பகுதியையும் பிரிக்கும் சுவருக்கு உதரவிதானம் **(diaphragm)** என்று பெயர்.

இதில் ஏற்படும் இடைஞ்சல்தான் விக்கலுக்குக் காரணம். நாம் சுவாசிக்கும்போது மார்புத் தசைகள் விரிவடைகின்றன. வயிறு, வழக்கத்தை விடச் சற்று அதிகமாக விரிவடையும்போது, நெஞ்சுப் பகுதிக்கும் வயிற்றுப் பகுதிக்கும் இடைப்பட்ட உதர விதானம் சற்று விரிவடைந்து, செயற்பட முடியாமல் தடைப்படுகிறது. அப்போது, அந்தப் பகுதியில் ஏற்படும் அசௌகரிய உணர்வால் விக்கல் ஏற்படுகிறது.

### எப்போது விக்கல் வரும்?

**சாதாரண விக்கல்:** அதிகமாக அல்லது வேகமாகச் சாப்பிடுவது, இடைவேளை இன்றித் தொடர்ந்து தண்ணீர் பருகுவது, குளிர்பானங்களை அருந்திவிட்டு, உடனே சூடான பானங்களை எடுத்துக்கொள்வது போன்றவை சாதாரண விக்கலை ஏற்படுத்துகின்றன.



**தொடர் விக்கல்:** தொடர் விக்கல் ஏதாவது ஒரு நோயின் வெளிப்பாடாக இருக்கக்கூடும். சிறுநீரகச் செயலிழப்பு, மூளைக் கோளாறு போன்ற நோய்கள் ஏதேனும் இருந்தால் தொடர் விக்கல் ஏற்படும். எனவே, தொடர் விக்கல்பிரச்சினை உள்ளவர்கள் உடனடியாக மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

### பாதிப்புகள்

நுரையீரல்கோளாறு, மூளைக்கோளாறு மற்றும் இரத்த அணுக்கள் அதிகமாக இருப்பது போன்றவற்றின் வெளிப்பாடாக ஒருவருக்குத் தொடர் விக்கல் ஏற்படக் கூடும். எனவே, பிரச்சினையைக் கண்டறிந்து அதற்கேற்ற சிகிச்சை அளிப்பது அவசியமாகும். சிகிச்சையைத் தொடர்ந்து எடுத்துக்கொள்ளாது இருக்கும்போது, சில நேரங்களில் அவர்களுக்கு மாதக்கணக்கில் இதுபோன்ற விக்கல் ஏற்படும். அதனால், உரிய சிகிச்சையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

### தீர்வுகள்

திடீரென்றோ, மிகவும் அரிதாகவோ தொடர் விக்கல் வருவது உடலின் பொதுவான ஒரு செயற்பாடு. இதற்குச் சிகிச்சையோ மாத்திரை, மருந்துகளோ தேவை இல்லை.

தண்ணீர் அருந்துவதால் விக்கல் நிற்பது இல்லை. தண்ணீர் அருந்தும்போது ஏற்படும் கவன மாற்றமே விக்கலை நிறுத்துகிறது.

மிகவும் மெதுவாக நீரை அருந்தும் போது விக்கல் நிற்கும். விக்கலை சரி செய்யச் சிலர், ஏதாவது அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க முயற்சி செய்வார்கள். இது தவறு. இதய நோயாளிகள் இந்த முறையை முயற்சி செய்ய வேண்டாம். இதனால், மாரடைப்பு போன்ற அபாயங்கள் ஏற்படக்கூடும். விக்கல் எடுப்பவர் தன் கவனத்தை வேறு ஏதாவது வேலையில் திசைத்திருப்பிக்கொள்வது விக்கலைத் தற்காலிகமாகத் தடுக்கும்.

விக்கல் தொடர்ச்சியாக வந்து, அதுவே ஒரு நோயாக மாறினால், அதைக் குணப்படுத்த மாத்திரைகள் உள்ளன. குறிப்பிட்ட பகுதிக்கான உணர்வு நீக்க மருந்து எனப்படும் லோக்கல் அனஸ்தீஷியா கொடுப்பதன் மூலம், வயிற்றின் செயற்பாடுகள் தற்காலிமாக நிறுத்தி வைக்கப்படும்.

விக்கல் எதனால் ஏற்பட்டது என்று கண்டறிந்து சிகிச்சை பெற வேண்டியது மிக மிக அவசியம்.

### விக்கலைத் தவிர்க்க...

அளவுக்கு அதிகமான உணவை உட்கொள்ளக்கூடாது.

பாதி வயிறு நிரம்பும்வரைதான் சாப்பிட வேண்டும். குளிர் மற்றும் சூடான பானங்களை, ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

இடைவெளியின்றி, வேகமாக உணவை எடுப்பதால் விக்கல் ஏற்படுகிறது. எப்போதுமே பொறுமையாகச் சாப்பிட வேண்டும்.

பெரும்பாலான நேரங்களில் இவையே ஒருவருக்கு நீண்ட விக்கலைத் தரும். நீண்ட விக்கலானது அடிக்கடி நிகழாமல் பார்த்துக்கொண்டாலே பிரச்சினையில் இருந்து ஒருவர் விடுபடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org